
திருமலை திருப்பதி தேவஸ்தானம்
ஸப்தகிரி
சமய மாத இதழ்
பிப்ரவரி 2019, விலை ரூ.5/-
ஸ்ரீநிவாசமங்காபுரம்
ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி
வருடாந்திர பிரம்மோத்ஸவம்
24-02-2019 முதல்
04-03-2019 வரை
SIVAPRASAD

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸ்ரீநிவாசமங்காபுரம்
# ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி
# வருடாந்திர பிரம்மோத்ஸவம்

**24-02-2019 முதல்**
**04-03-2019 வரை**



**24-02-2019 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**25-02-2019 திங்கட்கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**26-02-2019 செவ்வாய்க்கிழமை**
பகல் : சிம்ஹ வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**27-02-2019 புதன்கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**28-02-2019 வியாழக்கிழமை**
பகல் : மோஹினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**01-03-2019 வெள்ளிக்கிழமை**
பகல் : ஹனுமத்வாகனம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**02-03-2019 சனிக்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்



**03-03-2019 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**04-03-2019 திங்கட்கிழமை**
பகல் : சக்ர ஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்



*நாஸதோ வித்$_3$யதே ப$_4$ாவோ*
*நாப$_4$ாவோ வித்$_3$யதே ஸத: |*
*உப$_4$யோரபி த்$_3$ருஷ்டோऽந்தஸ்*
*த்வநயோஸ்தத்த்வத$_3$ர்சிபி$_4$:||*



இல்லாததற்கு இருப்பது என்பது இல்லை. மேலும், உண்மையாக இருப்பதற்கு இல்லாமை என்பதும் இல்லை. இந்த இரண்டின் தத்துவமும் தத்துவஞானிகளால் கண்டறியப்பட்டது.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–16*



*பொன்புரையும் வேற்குலசே கரனே மாசிப்*
*புனர்பூசத் தெழில்வஞ்சிக் களத்துத் தோன்றி*
*யன்புடனே நம்பெருமாள் செம்பொற் கோயி*
*லனைத்துலகின் பெருவாழ்வு மடியார் தங்க*
*ளின்பமிகு பெருங்குழுவுங் காண மண்மே*
*லிருளிரிய வென்றெடுத்த விசையிற் சொன்ன*
*நன்பொருள்சேர் திருமொழிநூற் றைந்து பாட்டு*
*நன்றாக வெனக்கருள்செய் நல்கி நீயே.*

பொன்னைப் போல் (ஜ்வலிக்கும்) வேலையுடைய குலசேகராழ்வாரே! மாசி மாதத்துப் புனர்வஸு நக்ஷத்ரத்தில், அழகிய திருவஞ்சிக் களமென்னும் க்ஷேத்ரத்தில் அவதரித்து, பக்தியுடன் ஸ்ரீரங்க நாதனுடைய சிவந்த பொன்னினாலாகிய ஸ்ரீரங்க நகரத்தில் (வஸிக்கின்ற) ஸகல ப்ராணிகளுடைய (ஸ்ரீரங்கத்தில் வாஸமாகிய) பெரிய செல்வத்தையும், பாகவதர்களுடைய ஆநந்தம் மிக்க பெரிய கோஷ்டியையும், அநுபவிக்க(வும்) ஸேவிக்க(வும் விரும்பி) இந்தப் பூமியில் (அஜ்ஞாநமாகிய இருள் அழிவதற்காக) “இருளிரிய” என்று தொடங்கி, உச்சஸ்வரத்தில் (நீ) அருளிச் செய்த, சிறந்த ஸாரார்த்தம் பொருந்திய (பெருமாள்) திருமொழி நூற்றைந்து பாசுரங்களையும் அன்பு கொண்டு, நன்கு (மனத்திற் பதியுமாறு) எனக்கு அருள் செய்வாயாக.

*- பிரபந்த சாரம்*

# ஸ்வஸ்தி ஸ்ரீ விளம்பி வருஷம், தை/மாசி மாதம், உத்தராயணம் ஹேமந்த்/சிசிரருது, சகவருஷம், 1940, கலியுகாதி, 5119, பிப்ரவரி, 2019

| ஆங் | தமிழ் | கிழமை | திதி | நட்ச. | விசேஷம் |
|---|---|---|---|---|---|
| 1 | 18 | வெள்ளி | துவா | மூல | சுபநாள். |
| 2 | 19 | சனி | திர | பூரா | சனிப் பிரதோஷம், மாத சிவராத்ரி. |
| 3 | 20 | ஞாயிறு | சசி | உத்ரா | .... |
| 4 | 21 | திங்கள் | அமா | திவோ | சர்வ-தை அமாவாசை, வ்ய-சிரா சிரவணம், மஹோதய புண்யகாலம், ஸ்ரீபுரந்தர தாசர் ஆராதனை, தேவுனி கடப்பா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 5 | 22 | செவ் | பிர | அவி | மாக சுத்த செவ்வாய் மேஷம், சந்திர புதன் யுதி நிலநடுக்கம், தேவுனி கடப்பா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோஹணம். |
| 6 | 23 | புதன் | துவி | அவி | சந்த்ர தர்ஸனம், விருத்தி திதி. |
| 7 | 24 | வியா | துவி | சத | புதன் கும்பம். |
| 8 | 25 | வெள்ளி | திரி | பூரட் | தில-குந்த சதுர்த்தி. |
| 9 | 26 | சனி | சது | உத்ரட் | மாத சதுர்த்தி. |
| 10 | 27 | ஞாயிறு | பஞ் | ரேவ | மதன பஞ்சமி. |
| 11 | 28 | திங்கள் | சஷ் | அஸ்வி | சஷ்டி வ்ரதம். |
| 12 | 29 | செவ் | சப் | பர | இரத ஸப்தமி, வைவஸ்வத மன்வாதி சந்த்ர வ்ரதம். |
| 13 | 1 | புதன் | அஷ் | கார் | சூரியன் கும்பம், 05நா.39வி. கா.8ம.48நி. விஷ்ணுபதி கிருத்திகை, பீஷ்மாஷ்டமி, செவ்வாய்-யுரேனஸ் யுதி, திருப்பதி ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி தெப்போத்ஸவம் ஆரம்பம், தேவுனி கடப்பா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அவப்ருதம், சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணம், |
| 14 | 2 | வியா | நவ | ரோகி | மத்வ நவமி, திதித்வயம், வைத்-சிரா, தேவுனி கடப்பா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி புஷ்பயாக மஹோத்ஸவம். |
| 15 | 3 | வெள்ளி | தச | மிரு | மிதமான மழை. |
| 16 | 4 | சனி | ஏகா | திரு | சர்வ-பீஷ்ம ஏகாதசி. |
| 17 | 5 | ஞாயிறு | துவா/திர | புன | பிரதோஷம், வராஹ கல்பாதி க்ஷய திதி, ஸ்ரீகுலசேகராழ்வார் திருநட்சத்திரம். |
| 18 | 6 | திங்கள் | சசி | பூச | புதன்,மே.உதயம்,நடராஜர் அபிஷேகம், ஸுவ்ருஷ்டி எரிமலை வெடிப்பு. |
| 19 | 7 | செவ் | பௌர் | ஆயி | பௌர்ணமி, ஆகாமாவை, கடல் சீற்றம், மஹாமாகி, திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி தெப்போத்ஸவம் நிறைவு, குமாரதாரை தீர்த்த முக்கோட்டி. |
| 20 | 8 | புதன் | பிர | மக/பூரம் | மாக பஹுூள, திருப்பதி ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி கூபு சந்திரப்பேட்டைக்கு எழுந்தருளுதல். |
| 21 | 9 | வியா | துவி | உத் | திதி த்வயம். |
| 22 | 10 | வெள்ளி | திரி | ஹஸ் | சங்கடஹர சதுர்த்தி. |
| 23 | 11 | சனி | சது/பஞ் | சித் | க்ஷய திதி, ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவ அங்குரார்ப்பணம். |
| 24 | 12 | ஞாயிறு | சஷ் | சுவா | சஷ்டி வ்ரதம் சுக்ரன்-மகரம், ஸுவ்ருஷ்டி, சுபநாள், ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவ ஆரம்பம், துவஜாரோஹணம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 25 | 13 | திங்கள் | சப் | விசா | புதன்-மீனம், செவ்வாய்-பரணி- பாதிப்பு, திஸ் ரோஷ்டகா, திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோஹணம். |
| 26 | 14 | செவ் | அஷ் | அனு | அஷ்டகா காலாஷ்டமி. |
| 27 | 15 | புதன் | நவ | கேட் | அன்வாஷ்டகா அனாவ்ருஷ்டி, விருத்தி திதி. |
| 28 | 16 | வியா | நவ | மூல | கரிநாள், ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி கருட சேவை. |



# ஸப்தகிரி

சமயமாத இதழ்

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

பிப்ரவரி 2019 மலர் 49 இதழ் 9

## உள்ளுறை



| | பக்கம் |
|---|---|
| இரதசப்தமியில் ஆதித்யனின் அருளைப் பெறுவோம்! - திருமதி. வி. உஷா, திருப்பதி. | 7 |
| ஆழ்வார்கள் காட்டும் வாழ்க்கை நெறிகள் – 14 குலசேகர ஆழ்வாரின் திருமலை அனுபவம் - திரு. எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 10 |
| ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்–ஸ்ரீவராகர் - டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர். | 15 |
| ஸ்ரீபுரந்தர தாஸர் - திருமதி. என். ஹேமா, திருப்பதி. | 20 |
| நமது திருக்கோயில் : கபிலேஸ்வரா! சுயம்புலிங்கேஸ்வரா!! -திருமதி. எஸ். வைஷ்ணவி, திருப்பதி. | 22 |
| மங்களம் அருளும் மாக மாதம் - திரு. டி.ஆர். பரிமளரங்கன், திருச்சி. | 26 |
| திருமாலின் சயனத் திருக்கோலம் - திரு. இரா. வ. கமலக்கண்ணன், காஞ்சிபுரம். | 31 |
| பெரிய கொழப்பலூர் ஸ்ரீகரதாஷண பெருமாள் - திரு. செ. சந்துரு, ஆரணி. | 34 |
| கிருஷ்ணர் வணங்கும் ஆறு பேர் - திருமதி. தி. கிருஷ்ணவேணி கோபால், சேலம். | 36 |
| மாசி மகம் - திரு. சுகுமாரன், மன்னார்குடி. | 39 |
| குடைவள்ளல் - திரு. டி. பூபதி ராவ், காஞ்சிபுரம். | 41 |
| சிறார் வாக்கு : உணவால் உண்டான இரத்தம் - செல்வி. எஸ். ஜெயஸ்ரீ, சித்தலம்பட்டு. | 42 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் - உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 43 |
| 108 திவ்யதேச வைபவம் – திருமணிக்கூடம் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 47 |
| பகவத் கீதை–இளைய சமுதாயம் ஆமையைப் போல் ஐந்தடக்கல் வேண்டும் - திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா. | 49 |
| ஆயுர்வேதம் – ஓமம் - திருமதி. ப. காயத்ரி, கேரளா. | 51 |
| 2019, பிப்ரவரி மாத ராசி பலன் - திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர். | 53 |



சிறப்பு ஆசிரியர் :
**திரு. அனில்குமார் சிங்ஹால்,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
பிரதான ஆசிரியர் :
Dr. K.**ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. R.V. விஜயகுமார்,** பி.ஏ. பி.எட்.,
துணை செயலாட்சித் தலைவர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
ஓவியம் :
**திரு. P.சிவப்பிரஸாத் (ஓய்வு)**
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
**திரு. P.N. சேகர்**
**திரு. B. வெங்கடரமணா**

**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264363
அலைபேசி எண் : 98663 29955

நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.org யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர். -பிரதான ஆசிரியர்

**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : உபயதேவியருடன் ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீநிவாசமங்காபுரம்.

பின்னட்டை : ஸ்ரீகாமாக்ஷி தேவி சமேத ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி, திருப்பதி.

உங்களுடன்...

# அக இருளைப் போக்கும் ஆழ்வார்கள்!

இவ்வுலகைப் படைத்து காத்து அருளும் ஸ்ரீமந்நாராயணன் பக்தர்களுக்கு ஐந்து நிலைகளில் சேவை சாதிக்கின்றான். அதுவே பரம், வ்யூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை எனப்படுகிறது. பரமாகிய ஸ்ரீவைகுண்டம் நம்மைப் போன்ற சாதாரண சம்சாரிகளுக்கு அது எட்டாக்கனியாகும். சரி வ்யூகமோ பாற்கடலில் சயனித்திருக்கும் திருக்கோலம். பாற்கடல் நம் ஊனக் கண்ணிற்கு புலப்படாது. அது ஞானிகளுக்கே சாத்தியம். சரி விபவமோ எனில் அவதார நிலையைக் காட்டுவது. எம்பெருமான் மத்ஸவ தாரம் முதலாக கிருஷ்ணவதாரம் ஈறாக எடுத்த அவதார காலங்கள் யுகங்கள் வேறு வேறு. ஆக அதுவும் தரிசிக்க இயலாது. அடுத்தது அந்தர்யாமி அதாவது உள்ளுறை நிலை. “ஸர்வஸ்ய சாகம் ஹ்ருதி ஸன்னிவிஷ்டோ” என்று கீதையில் உரைப்பது போல, அனைத்து ஜீவராசிகளுடைய திருவுள்ளத்தில் கொலுவையிருப்பது. இதை உணர வேண்டுமெனில் கர்ம, ஞான, பக்தி யோகம் கைவரப் பெற்றிருக்க வேண்டும். அதாவது முனிவர்களாக, மஹான்களாக இருத்தல் வேண்டும். இறுதியாக எஞ்சி இருப்பது அர்ச்சை நிலை. அதாவது கண்டு பற்றுகைக்கு சௌலப்யமாக விக்ரஹ வடிவில் ஆலயங்களில் எழுந்தருளி சேவை சாதிப்பது.

இந்த அர்ச்சா மூர்த்திகளையே ஆழ்வார்கள் தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும், பூசித்தும் பொழுதை போக்கினார்கள். ஆழ்வார்களோ எம்பெருமானாலே மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள். அதனாலேயே ஆழ்வார்கள் திருவாய் மலர்ந்த பாசுரங்கள் திவ்வியப் பிரபந்தங்களாயின. அவர்கள் பாடிப் பரவிய க்ஷேத்திரங்கள் திவ்விய தேசங்களாயின. அதுவே 108 திவ்விய தேசங்களாகும். அர்ச்சா மூர்த்திகளோ திவ்விய மங்கள விக்ரஹங்களாயின. ஆழ்வார்களோ திவ்விய சூரிகளாயினர். ஆக அனைத்தும் திவ்வியமாய் அமைந்தன.

இந்த திவ்யப்பிரபந்தம் மூலம் ஆழ்வார்கள் இவ்வுலகிற்கு எந்த செய்தியை அளிக்க விரும்பினர் எனில், நாம் எம்பெருமானைத் தேடி எங்கும் அலையத் தேவையில்லை. எங்கும் எதிலும் எல்லாமும் அவனே என்ற எண்ணமும் செய்கையுமே நம்மை எம்பெருமானின் அருளுக்கு பாத்திரமாக்கும். குறிப்பாக இறை பக்திக்கு வித்திடும். அதன் மூலம் இறை அன்பையும், இறையருளையும் பெறலாம் என்பதே. இதனையே குலசேகராழ்வார் “தருதுயரம் தடாயேல்” என்னும் பதிகத்தில் “அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள் தன் அருள் நினைந்தேயழும் குழவியதுவே போன்றிருந்தேனே” அதாவது குழந்தை மீது தாய் சினம் கொண்டு வெறுத்தாலும் குழந்தை அவள் தயை வேண்டி அவளிடமே செல்வதைப் போல எனக்கு எவ்வளவு துன்பம் தந்தாலும் எம்பெருமானையே சரணடைவேன் என்கின்றார். இது அல்லவோ ஆத்மா – பரமாத்மாவுக்கு உள்ள உறவு.

ஆழ்வார்கள் இவ்வுலகிற்கு இருள் தரு மாஞாலம் எனப் பெயரிட்டுள்ளனர். அது என்ன இருள் என்றால் அது தான் அஜ்ஞானம் (அறிவின்மை). அறிவின்மை யாவது நான், எனது என்னும் அகங்கார, மமகாரமாகும். எப்பொழுது இவ்விரண்டும் நம்முள் குடி கொண்டிருக்கிறதோ அப்பொழுது சுதந்திரம் தலையெடுக்கிறது. இதனால் ஆத்மா தகாத வழியில் சென்று ஆத்மா சரீரத்திற்கு அடிமையாகி பேரின்பப் பெருவீட்டை அடைய முடிவதில்லை. இதனை உலகிற்கு அறிவுறுத்தவே ஆழ்வார்கள் தோன்றினர். புற இருளைப் போக்க வந்த பன்னிரு ஆதித்தியர்களைப் போல அக இருளைப் போக்கும் பன்னிரு ஆதித்யர்களாக பன்னிரு ஆழ்வார்கள் அவதரித்தனர்.

இம்மாதத்திலே ஆழ்வார்களில் அரசரான குலசேகராழ்வார் அவதரித்த திருநட்சத்திரத்தையும், இம்மாதத்திலே நிகழவிருக்கும் இரதஸப்தமி நந்நாளான சூரிய ஜெயந்தியையும் ஒரு சேரக் கொண்டாடி ஒரு சேர புற இருளையும், அக இருளையும் அகற்றுவோம்! வளமாக வாழ்வோம்!!



# இரதசப்தமியில் ஆதித்யனின் அருளைப் பெறுவோம்!



தெலுங்கு மூலம் : செல்வி. எஸ். லாவண்யா
தமிழாக்கம் : திருமதி. வி. உஷா



*சப்தாஸ்வ ரதமாரூடம்*
*ப்ரசண்டம் கஸ்யபத்மஜம்,*
*ஸ்வேத பத்மதரம் தேவம் தம்*
*சூர்யம் ப்ரணமாம்யஹம் ||*

கண்ணெதிரே காட்சியளிக்கும் ஸ்ரீசூரிய பகவான் இவ்வுலகில் ஒளி தரும் கடவுள். ஆந்திர மாநிலம் ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் உள்ள அரசவல்லி என்னும் ஊரிலும் இவர் எழுந்தருளியுள்ளார். இங்கு சூரிய நாராயண ஸ்வாமியை தேவர்களின் அரசரான இந்திர பிரஜாபதியால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக ஸ்தல புராணங்கள் கூறுகின்றன. ஏழு குதிரைகளைக் (அஸ்வங்கள்) கொண்ட இரதத்தில் ஸ்வாமி கமலக் கண்களுடன், மகர குண்டலங்களை அணிந்து, இரு கரங்களில் வெண் தாமரைகளை ஏந்தி சூரிய கடாரியுடன் ஒளி மயமாகக் காட்சியளிக்கின்றார். ஸ்வாமியின் இடபுறத்தில் உஷா தேவியும், வலப்புறத்தில் பத்மினி தேவியும், பாதத்தின் அருகே சாயாதேவியும் எழுந்தருளியுள்ளனர். ஸ்வாமியின் இரு புறங்களில் பிங்கள மார்த்தாண்டர்களும், மேல் பாகத்தில் மஹரிஷிகள், கந்தர்வர்கள், கின்னரர் கிம்புருடர் மற்றும் அப்சரர்கள் கொலுவீற்றுள்ளனர். ஸ்வாமிக்கு விஷ்வகர்மரால் தோற்றுவிக்கப்பட்ட தங்க இரதத்தினை வைஜயந்தி இரதம் என்று அழைத்தனர். இந்த இரதம் மிகப் பெரிய அளவிலான நீளத்தையும், அகலத்தையும் கொண்டதாகும்.

மேலும், இந்த இரதத்தில் பிரம்மன், ருத்ரன், கணபதி, குமாரஸ்வாமி மற்றும் இந்திரன் ஆகியோரும் உள்ளனர். ஸ்வாமியின் சப்த அஸ்வங்களும் அமைந்துள்ளன. ஸ்வாமியின் வர்ண சித்திரம், பத்ம புராணம், ருக் வேதம், காஸ்யப சிற்ப சாஸ்திர நியமாவளி, ரூபத்யான ரத்னாவளி, கலங்காரி சித்திரக் கலை மற்றும் இந்திய சாம்பிரதாய சித்திரக் கலைகளுடன் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளன.

சூரிய பகவான் மூன்று வேதங்களின் சின்னமாக எழுந்தருளியுள்ளார். அவை ருக்வேதம், யஜுர் வேதம், சாம வேதமாகும். ருக்வேதத்தில் இருளைப் போக்கி ஞானத்தை அருள்பவன் என்றும், அனைத்து உயிரினங்களுக்கும் மூலாதாரம் என்றும், நன்மையை தருபவர் என்றும், ஆரோக்கியமான வாழ்வைக் கொடுப்பவர் என்றும் சொல்லப்பட்டுள்ளன.

இரத சப்தமி சூரிய பகவானை வழிபடும் பண்டிகையாகும். இரத சப்தமியை சூரிய ஜெயந்தி என்றும் கூறுகின்றனர். சில பகுதிகளில் சௌரசப்தமி,

பாஸ்கர சப்தமி, ஜெயந்தி மற்றும் மஹா சப்தமி என்றும் கூறுகின்றனர்.

பரமாத்மா சூரியனை தோற்றுவித்த நன்னாள் மாசி மாதம் சப்தமி நாள் ஆனதால் இந்நாளை சூரிய ஜெயந்தி யாகக் கொண்டாடுகின்றனர்.

சூரியன் அதிதி, கஷ்யபுவின் புத்திரராக இந்த சப் தமி நாள் அன்று தோன்றினார். ஆகையால் இந்நாளை "சூரிய ஜெயந்தி" என்றும் "சூரிய மாத்ருக" என்றும் அழைக்கின்றனர்.

## த்வாதசாதித்யர்கள் :

சூரிய பகவானை "ஸ்ரீசூரிய நாராயணன்" என்றும் அழைப்பர். சூரியன் நாராயணனின் ஸ்வரூபம் ஆவார். ஏக ஸ்வரூபனான இவர் பன்னிரண்டு ரூபங்களைக் கொண்டு ஒவ்வோர் மாதத்தில் ஒவ்வோர் ரூபத்தில் காட்சி யளிக்கின்றார்.

அதனால் தான் இவரை "த்வாதசாதித்யன்" என்று கூறுகின்றனர். மாசி–வருணன், பங்குனி – சூரியன், சித்திரை – விசாகன், வைகாசி – தாதா, ஆனி – இந்திரன், ஆடி – ரவி, ஆவணி – நபு, புரட்டாசி – யமன், ஐப்பசி – பர் ஜயன், கார்த்திகை – த்விஷ்டா, மார்கழி – மித்ரன், தை – விஷ்ணு என பன்னிரு பெயர்களால் அழைக்கப்படு கின்றார்.

காயத்ரி மந்திரமும் சூரிய பகவானிற்கு உரியதே ஆகும். ஆதித்ய ஹ்ருதய மந்திரத்தை நாள்தோறும் ஸ்ரீராமர் படித்து வந்ததால் தான் இராவணனை சம்ஹரிக்க முடிந்தது என்றும் அவ்வாறே பாண்டவர்கள் சூரியனின் அனுக்கிரஹத்தால் அக்ஷய பாத்திரத்தைப் பெற்று ஆரண்ய வாச காலத்தில் உணவிற்கு எவ்வித இன்னலும் இன்றி வாழ்ந்தனர் என்றும் சொல்லப்படுகின்றன.

இத்தகைய பெருமை மிக்க சூரிய ஜெயந்தியான இரத சப்தமி அன்று அதிகாலையில் நீராடி சூரியனை வணங்கினால் புண்ணியம், ஆரோக்கியம், அகால ம்ருத்ய பரிகாரம் ஆகியவை கிட்டும் அதுமட்டுமின்றி மர ணம் அடைந்த பின் சூரிய உலகத்தை அடைவர் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

இரத சப்தமி அன்று சூரியன் உதயமாகும் காலத் தில், நட்சத்திரங்கள் இரதம் போன்ற அமைப்பில் காட்சி தரும். இந்த நட்சத்திரக் கூட்டத்தை சப்தமி என்று சொல்லு கின்றனர். இவையே "இரத சப்தமி" ஆயிற்று.

## எருக்க இலை & இலந்தை இலையின் பெருமைகள் :

இரத சப்தமி நாளன்று தலை ஸ்நானம் செய்யும் போது எருக்க இலைகளைத் தலையில் வைத்துக் கொண்டு சாஸ்திரப்படி நீராடினால் தெரிந்தோ தெரி யாமலோ, செய்த பாவங்கள் நீங்கும். சூரியனுக்கு உகந்த இந்த இலையை அர்க்கபத்ரம் என்று கூறுவர். அர்க்கம் என்றால் சூரியன் என்றே பொருள். சூரியனின் முழு சக்தியும் இந்த இலைகளில் உள்ளது. இந்த இலை களை ஏழு அல்லது ஒன்பது எண்ணிக்கையில் எடுத்து அடுக்கி அதன் மீது அட்சதை, எள் வைக்க வேண்டும். ஆணுக்கு அதனுடன் விபூதியும், பெண்ணுக்கு அதனுடன் மஞ்சள் பொடியும் வைத்து தலை மீது வைத்துக் கொண்டு குளிக்க வேண்டும்.

இந்த இலையின் சக்தியால் உடல் நலக்குறைவுகள் நீங்கி நல்ல ஆரோக்கியம் கிடைக்கும். நினைவாற்றல் அதிகரிக்கும். தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் நீங்கும். அவரைக் காயால் இரதத்தை தயாரித்து, சூரிய சந்திரனை வெற்றிலையால் சித்தரித்து பூஜிக்க வேண்டும் என்பது பண்டைக்கால மக்களின் நம்பிக்கையாகும்.

## மாசி மாதத்தின் பெருமை :

உத்தராயணம் மகர சங்கராந்தியில் பொங்கல் பண்டிகை அன்று ஆரம்பமானாலும் இரத சப்தமி நாள் முதலே முழுமையாகத் துவங்குகிறது. இந்நாள் முதல் கோடைக்காலம் துவங்குகிறது. வடபகுதியில் சூரியன் பிரகாசிக்கிறார் என்றும் சூரிய கிரணங்கள் துல்லியமா னது என்றும் இந்நாட்களில் தர்ப்பணம் செய்தால் நற் பலன் கிட்டும் என்றும் நம் முன்னோர்கள் சொல்கின்ற னர்.

**உத்தராயணம் :** மாசி மாதம் முதல் துவங்கி மனிதனை நல்வழியில் பயணிக்கச் செய்து பகவானின் அருளைப் பெற வழிவகுக்கிறது.

## ஆரோக்கியபிரதாதா ஆதித்யா :

நாள் தோறும் – சூரிய நமஸ்காரம், அதாவது நாம் சூரியனின் முன் நின்று வழிபட்டால் நம் உடலிற்கு நல்ல ஆரோக்கியம் கிட்டும். ஆத்ம சக்தி அதிகமாகும். அது மட்டுமின்றி நேத்ர சக்தியும் அதிகரிக்கும். சூரியன் ஒளி யில் இருந்து வைட்டமின் "டி" என்ற சக்தி கிடைக்கின்றன.

இந்த சக்தியால் உடலில் ஏற்படும் தோல் சம்பந்தப் பட்ட வியாதிகள் நீங்கும். நம் உடலில் "வைட்டமின் டி"

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

பிரதி மாதம் முதல் வெள்ளிக்கிழமை மட்டுமே!
செயலாட்சித் தலைவருடன் பேசுங்கள்!

டயல் யுவர் ஈ.வோ.

பக்தர்களுக்கு அறிய வாய்ப்பு!

எந்த மாநிலத்திலிருந்தும், எம்மொழியிலும்
நீங்கள் நேராக
செயலாட்சித் தலைவருடன் பேசலாம்!
திருமலையான் ஆர்ஜித சேவைகள்,
வசதி வாய்ப்புகள் குறித்த
உங்களிடையே எழும் சந்தேகங்கள்,
கருத்துகள், ஆலோசனைகளை செயலாட்சி
தலைவருடன் பகிர்ந்து கொள்ளலாம்.

டோல் நெம்பர் : 0877-2263261

நேரம் : காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை.

*இந்த வாய்ப்பினை அனைவரும் உபயோகித்துக் கொள்ளவும்.*

சக்தி குறைந்தால் எலும்புகளின் வளர்ச்சி குறைந்து விடும். ஆதலால்தான் சூரிய உதய காலத்தில் சூரியன் முன்பு நின்று சூரிய நமஸ்காரம் செய்தல், உடற்பயிற்சிகள் செய்தல் போன்றவற்றை நம் முன்னோர்கள் நிர்ணயித்தனர்.

### உலகைக் காக்கும் சூரியன் :

இவ்வுலகில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் சூரியன் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் துணை புரிகின்றார். மரம், செடி, கொடிகள் யாவும் தனக்கு தேவையான உணவை சூரிய ஒளியின் வாயிலாகவே தயாரித்துக்கொள்கின்றன.

இவ்வாறு அனைத்து உயிர்களையும் காப்பதால் உலகைக்காக்கும் இரட்சகர் என்று சூரியனை குறிப்பிட்டனர். சூரிய இரதத்திற்கு ஒரே சக்கரம். அதற்கு இலைகள் ஆறு. குதிரைகள் ஏழு. சூரியனின் இரத சாரதி அருணன். எப்பொழுதும் பிரயாணம், ஒளியையும், வெப்பத்தையும் தருவது சூரியனின் குணம் – சூரியனுக்கு ஒரு வருடம் என்பது ஒரு சக்கரம் – உலகமே ஓர் இரதம்.

ஆறு பருவ காலங்களே – ஆறு இலைகள். இவ்வாறு இரத சப்தமி நாள் முதல் இருள் அதாவது மாயை குளிர் விலகி ஒளிமயம் ஆரம்பமாகிறது. இத்தகைய பெருமை வாய்ந்த நன்னாளில் ஸ்ரீசூரிய நாராயண ஸ்வாமியை மனதார வழிபட்டு ஆயுள் ஆரோக்கியத்துடன் மகிழ்ச்சியாக வாழ்வோம்.

### திருமலையில் இரதசப்தமி :

திருமலையில் எழுந்தருளியுள்ள திருவேங்கடமுடையானுக்கும், சூரிய பகவானுக்கும், இரத சப்தமிக்கும், சப்தமி என்ற எண்ணிற்கும் ஏதோ அனுபந்தம் உள்ளதாக கருதுகின்றனர். திருமலைவாசன் ஏழுமலை யின் மீது எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்புரிகின்றார். சூரியன் ஏழு குதிரைகள் கொண்ட தேரின் மீது எழுந்தருளி ஒளி மயமாக காட்சி அளித்து பக்தர்களின் வாழ்க்கையை ஒளிமயமாக்குகிறார். இருவரும் உலகைக் காப்பவரே ஆவர்.

திருவேங்கடவன் வேங்கட நாராயணனே ஆவார். ஆதித்யன் சூரிய நாராயணன் ஆவார். இருவரின் இரதமும் ஹிரண்மயமேயாகும். ஸ்வாமி ஸ்ரீதேவி பூதேவி சமேதரராக காட்சித் தருகிறார்.

அவ்வாறே சூரிய பகவான் சாயா சஞ்ஜா சமேதரராக காட்சித் தருகிறார். இவ்வாறு லக்ஷ்மி நாராயணனுக்கும் சூரிய நாராயணனுக்கும் மிகுந்த பொருத்தமுள்ளது. திருமலைவாசனின் விசேஷ நாட்களில் இந்த இரத சப்தமியும் ஒன்று என்று சொல்லப்படுகிறது.

ஆண்டுதோறும் மாசி மாதம் சப்தமி அன்று வரும் சூரிய ஜெயந்தியான இரத சப்தமியை திருமலையில் மிக வைபவமாக நிகழ்த்துகின்றனர். அந்நாள் ஸ்வாமி சூரியோதயம் முதல் சூரிய அஸ்தமம் வரை ஏழு வாகனங்களில் உலா வந்து பக்தர்களுக்குக் காட்சியளிக்கின்றார். அவை 1) சூரியப்பிரபை வாகனம், 2) சிறிய சேஷ வாகனம் 3) கருட வாகனம், 4) ஹனுமந்த வாகனம், 5) கல்ப விருக்ஷ வாகனம், 6) சர்வ பூபால வாகனம், 7)சந்திரப் பிரபை வாகனம். அன்று மதியம் வராஹ ஸ்வாமி ஆல யம் முன்பாகவுள்ள ஸ்வாமி புஷ்கரணியில் சக்கரத்தாழ்வாருக்கு சக்ர ஸ்நானமும் நடைபெறும்.

என்றும் காண முடியா வண்ணம் ஒரே நாளில் ஸ்வாமி ஏழு வாகனங்களில் ஏழு விதமான அலங்காரங்களுடன் மாட வீதிகளில் திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு தரிசனமளிக்கிறார். ஆகையால் தான் இந்த இரத சப்தமி நாளை “ஒரு நாள் பிரம்மோத்ஸவம்” என்றும் கூறுவர்.



# குலசேகர ஆழ்வாரின் திருமலை அனுபவம்



– திரு. எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி.

சேர நாட்டுத் திருத்தலங்களை மலைநாட்டு திருப்பதிகள் என்று வைணவ மரபில் அழைக்கின்றோம். சேர நாட்டின் அரசராக இருந்து ஆழ்வாரானவர் குல சேகரர். மாசித் திங்கள், சுக்ல பட்ச துவாதசி திதியில், புனர் பூச நட்சத்திரம் கூடிய வெள்ளிக்கிழமையில் ஸ்ரீமந் நாரா யணனின் திருமார்பில் அசைந்து ஒளி வீசும் கௌஸ்து பம் என்ற ரத்தினத்தின் அம்சமாக அவதரித்தவர்.

போர்க்கலைகளிலும் அரசியலிலும் நிபுணத்துவம் பெற்று விளங்கிய குலசேகரர் சேரநாட்டின் எல்லையை விரிவுபடுத்தும் முயற்சியில் இறங்கினார். மிகவும் எளிதாக பாண்டிய நாட்டினையும், சோழ நாட்டின் பகுதி களையும் இணைத்துக் கொண்டார். கூடல் நாயகன் என்று மதுரையை வென்றதாலும், கோழியர்கோன் என்று சோழனை வென்றதாலும் அழைக்கப்பட்டார்.

திருவரங்கநாதன் மீது கொண்ட மாறாத அன்பினால் பிற்காலத்தில் தனது தலைநகரத்தையே வஞ்சிக் களத்திலிருந்து சோழ நாட்டின் தலைநகராக விளங்கிய உறையூருக்கு மாற்றினார்.

இயற்கையிலேயே கவிதை நயமும், புலமை வளமும் பெற்றிருந்த குலசேகரர், தனது மனநிலையை *“இருளிரியச் சுடர் மணிகள் இமைக்கும் நெற்றி”* என்று தொடங்கும் பெருமாள் திருமொழியாகப் பாடத் தொடங் கினார். பக்தி எனும் வெள்ளத்தில் பலபடியாக ஆழ்ந்து போன குலசேகரரை பாகவத உத்தமர்கள் குலசேகர ஆழ்வார் என்றே அழைக்கத் தொடங்கினர். இவருடைய 105 பாசுரங்கள் அடங்கிய தமிழ் மாலையே பெருமாள் திருமொழி என்று வழங்கப்படுகிறது. பெருமாளை அறிய வேண்டுமானால் பெருமாளை (அதாவது பெருமாள் திருமொழியை) அறிய வேண்டும்.

திருவரங்கத்து எம்பெருமான் மீது அளவற்ற மோகம் கொண்டு, அவனை என்று காண்பேனோ என்று தவித்த ஆழ்வாருக்கு, அந்தத் திருவரங்கத்து எம்பெருமானே இவர் பக்தி தாகத்தைத் தீர்ப்பதற்கும், சம்சார கட்டில் இருந்து விடுவித்துப் பேறு தருவதற்கும், பேற்றின் உறுப்பாகவும் அடியாகவும் ஆழ்வாரிடமிருந்து தூயதோர் தொண்டினைக் கொள்வதற்கும், திருமலை யிலே வந்து நிற்கிறான் என்ற உணர்வு ஆழ்வாருக்குப் பிறக்கிறது. கிடந்ததோர் கிடக்கையிலிருந்து நின்றதோர் தோற்றமாய் – நெடுமாலாய் – விண்ணோரும் மண்ணோ ரும் வழிபடவே நிற்கும் மலையப்பனிடம் அலை அலை யாய்ச் சிந்தனை செல்கிறது.

*"மந்திபாய் வடவேங்கட மாமலை வானவர் சந்தி செய்ய நின்றான் அரங்கத்து அரவின் அணையான்"* என்ற எண்ணம் பிறக்க, திருமலையப்பனின் திருவடிவாரத்திலே விழுந்து, *"நிலையற்ற வாழ்வில் வெறுப்பும், நிலையுள்ள வாழ்வில் விருப்பும்"* பிறந்தபடியைச் சொல்லும் அற்புதப் பாசுரங்கள் தான் குலசேகர ஆழ்வாரின் திருமலை அனுபவம்.

இனி குலசேகர ஆழ்வார் திருமலையப்பனிடம் கொண்ட ஈடுபாட்டைச் சற்று அனுபவிப்போம். குலசேகர ஆழ்வாருக்கு திருமலை அப்பனிடம் உள்ள ஈடுபாட்டை போலவே திருமலையப்பனுக்கும் குலசேகர ஆழ்வாரிடம் ஈர்ப்பு.

ஆழ்வார் தீந்தமிழைக் கேட்க செவியைத் தீட்டிக் கொண்டு காத்திருந்தான். திருமலையின் அழகான இயற்கைச் சூழலில் ஈடுபட்ட ஆழ்வாரின் அருந்தமிழில் அவர் முதல் பாசுரம் பிறக்கிறது.

*"ஊனேறு செல்வத்து உடல் பிறவி யான் வேண்டேன்*
*ஆன் ஏறு ஏழ் வென்றான் அடிமைத் திறம் அல்லால்*
*கூனேறு சங்கம் இடத்தான் தன் வேங்கடத்து*
*கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே"*

அற்புதமான மனிதப்பிறவி. அதிலும் அரசனாக...

யோசித்துப் பார்க்கிறார். இப்பிறவி வேண்டுமா... வேண்டாம், உடல் பருத்தால்.... உண்டி, உடை, பதவி, பட்டம் என அற்ப சுகம் தேடிப் பரிதவிக்கும். அலைந்து அலைந்து மதிப்பிலாது செய்யும் மனிதப்பிறவி வேண்டாம். அகங்காரத்தை உண்டாக்கி ஆத்மாவை நாசம் செய்யும் அரசப் பதவியும் அனுபவித்தாகி விட்டது. எனவே அதுவும் வேண்டாம்.

அப்படியானால்....?

திருமலையில் பகவானுக்கு ஏதேனும் ஓர் வகையிலே தொண்டு செய்து வாழும் ஒரு பிறவியே வேண்டும். அது தான் வாழ்வின் பயன்.

அப்படியென்ன பிறவி?

பரமபதத்து எல்லையிலே ஓடும் ஆறு விரஜா நதி. அதுபோல் புனிதமானது திருமலையிலே இருக்கும் கோனேரி தீர்த்தம். அதில் ஒரு நாரையாகவாவது பிறக்க வேண்டும்.

எல்லா நாரையும் உயர்ந்ததல்ல. கோனேரி தீர்த்தத் தொடர்புடைய நாரையே உயர்ந்தது.

காரணம் பகவானோடு தொடர்புடையது திருமலை. திருமலையோடு தொடர்புடையது கோனேரி தீர்த்தம். அந்தக் கோனேரியில் வாழும் பெருமை பெற்றது நாரை.

யோசிக்கிறார். நாரை பிறவி போதுமா....? நாரை, தீர்த்தம் வற்றினால் ஓடி விடுமே. பிறகு தொடர்பு வராதே. அப்படியானால் திருமலை தீர்த்தத்திலே ஒரு மீனாய்ப் பிறக்க, அருள் கிடைக்க வேண்டும். அடுத்த பாட்டு பிறக்கிறது. முதல் இரண்டு வரிகளிலே வேண்டாம் என்கிறார். அடுத்த இரண்டு வரிகளிலே வேண்டும் என்கிறார்.

வாழ்நாள்... வேண்டாம், காரணம் பிரமனுக்கே பிரம்ம கல்பம் என்று நாள் குறித்திருக்கிறதே. முக்கோடி வாழ்நாள் இருப்பினும் ஒரு நிலையில் முடிவுக்கு வந்து தானே ஆக வேண்டும்.

அடுத்து... செல்வம்... வேண்டாம், காரணம் அது பெரு நெருப்பல்லவா. நம்மைக் காப்பாற்றும் செல்வத்தை நாம் அல்லவா காப்பாற்ற வேண்டியிருக்கிறது. அதுவும் வேண்டாம்.

மண் அரசு? மண் இருக்கும். அரசு இருக்குமா? எத்தனையோ பேர் ஆண்ட பூமி ஆயிற்றே இது.... அடுத்து மண், பகவான் சொத்தாயிற்றே... வாமனன் மண் அல்லவா இது... எனவே இவையெல்லாம் வேண்டாம்.

*"ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ*
*வானாளும் செல்வமும் மண் அரசும் யான்*
*வேண்டேன்*
*தேனார் பூம் சோலைத் திருவேங்கடச் சுனையில்*
*மீனாய்ப் பிறக்கும் விதி வுடையேன் ஆவேனே"*

அது என்ன குறிப்பாக மீன் பிறவி?

நீர் இருக்கும் வரை மீன் இருக்கும். பகவான் முதல் அவதாரமே மச்சம் தானே... அதனால் மச்சமாய் மாற வேண்டுமென்கிறார். நீரும் மீனும் போலே தானும் இராமனும் என்கிறான் இலக்குவன். அப்படிப்பட்ட சம்பந்தம் தான்.

ஆனால் நீர் வற்றினால் மீன் இருக்குமா... அப்படியானால் மனிதப் பிறவியே பரவாயில்லை எனத் தோன்றுகிறது. பகவானுக்கு அடியாராய் இருப்பதால் மனிதப் பிறவி அமைந்தாலும் குறை இல்லை என நினைக்கிறார்.

ஆனால் இவர் கேட்பது உண்டு கொழுக்கும் மனிதப் பிறவியல்ல. உண்டியே உடையே என உகந்து உடலைப் பேணும் மனிதப் பிறவியல்ல.

தொண்டு செய்யும்படியான தூய மனிதப்பிறவி வேண்டும். ஒன்று வேண்டாம் என்று சொல்வதற்குக் காரணம் இருப்பது போலவே வேண்டும் என்று சொல்வதற்கும் காரணம் உண்டு.

*"பின் இட்ட சடையானும் பிரமனும் இந்திரனும்*
*துன்னிட்டுப் புகல் அரிய வைகுண்த நீள் வாசல்*
*மின் வட்டச்சுடர் ஆழி வேங்கடக்கோன் தான் உமிழும்*
*பொன் வட்டில் பிடித்து உடனே புகப் பெறுவேன் ஆவேனே"*

சோற்றுக்கும் துணிக்குமான தேடுதலுக்கே கழியும் வாழ்க்கை வேண்டாம். ஆனால் இந்திராதி தேவர்களும் எளிதில் புக முடியாத நீண்ட வாசலில், நுழைந்து, கருவறையில், பகவானின் அருகில், அவன் திருமஞ்சனம் கண்டருளும் போது, அவன் வாய் உமிழும் (ஆசமனம்) நீரை ஏந்திக் கொள்ள ஒரு பொன் வட்டிலைப் பிடித்துக் கொண்டு, மற்ற அர்ச்சகப் பரிசாரகர்களோடு இவரும் ஒருவராக நிற்கும் பேற்றை வேண்டுகிறார்.

ஆனால் இதிலும் ஒரு சிக்கல் வருகிறது. தன் ஆட்சியிலேயே கோயில் கைங்கர்யபரர்கள் மீது மற்றவர்கள் அபாண்டமான பழி சுமத்திய நிகழ்ச்சியும், அதனால் தான் பாம்பின் குடத்தில் கைவிட்டு அவர்களை நிரூபித்ததும் நினைவுக்கு வருகிறது. அது மட்டுமில்லை. பொன் வட்டில் திருடினார் என்று தொண்டரடிப் பொடியாழ்வாரைச் சிறையில் வைத்த கதையை நினைத்தால் அதுவும் வேண்டாம் என்று தோன்றுகிறது.

திருமலை புஷ்ப மண்டபம் என்று புகழப்படும் திருத்தலம். *"சிந்து பூ திருவேங்கடம்"* என்று நம்மாழ்வார் போற்றிய திவ்ய தேசமாயிற்றே. பகவான் பூஜைக்கு புஷ்பங்களைத் தரும் செண்பக மரமாய் நிற்கும் நிலையாக இருப்பின் பரவாயில்லை எனத் தோன்றுகிறது.

*"ஒண் பவள வேலை யுலவு தண் பாற் கடலுள்*
*கண் துயிலும் மாயோன் கழல் இணைகள் காண்பதற்கு*
*பண் பகரும் வண்டினங்கள் பண் பாடும் வேங்கடத்து*
*செண்பகமாய் நிற்கும் திரு உடையன் ஆவேனே"*

இதிலும் யோசனை வருகிறது.

அழகான செண்பக மரம் ஆழ்வாருக்கு விருப்பமானது தான். ஆனால் திருமலைக்கு வரும் சில பக்தர்கள் ... அட செண்பக மரம் நன்றாக இருக்கிறதே... என்று பிடுங்கிக் கொண்டு போய்விட்டால்.... என்ன செய்வது?


அப்படியானால் அடுத்த வாய்ப்பு....

இந்தத் திருமலையில் ஒரு தம்பகமாய் அதாவது காய் கனி போன்ற மக்கள் விரும்பும் எதுவுமில்லாத சாதாரணப் புதராய் இருந்தால் போதாதா என்று நினைக்கிறார். (மனிதப்) *பதராகத்தான் இருக்கக்கூடாது. புதராக இருக்கலாமே.*

*"கம்ப மத யானைக் கழுத்தகத்தின் மேல் இருந்து*
*இன்ப மரும் செல்வமும் இவ் வரசும் யான் வேண்டேன்*
*எம்பெருமான் ஈசன் எழில் வேங்கட மலை மேல்*
*தம்பகமாய் நிற்கும் தவம் உடையன் ஆவேனே."*

ஆனால் திருமலை வளர்ந்து கொண்டே அல்லவா இருக்கிறது. ஆழ்வார் காலத்துத் திருமலைக்கும் இன்று உள்ள திருமலைக்கும் எவ்வளவு வேறுபாடு. அவ்வப்போது இட வசதிக்காக இருக்கும் புதரை எளிதில் அழித்து விடுவார்களே... ஒரு நேரம் இருந்து, ஒரு நேரம் இல்லாததாய் இருக்கும் புதராக வேண்டாம். என்றும் நிரந்தரமாக இருக்கும் உன் திருமலைச் சிகரத்திலே, ஒரு சிகரமாக இருக்கும் தவமுடையவனாக வேண்டும் என மனது அடுத்த விஷயத்திற்குத் தாவுகிறது.

*"மின் அனைய நுண் இடையார் உருப்பசியும் மேனகையும்*
*அன்னவர் தம் பாடலொடும் ஆடல் அவை ஆதரியேன்*
*தென்னவென வண்டு இனங்கள் பண் பாடும் வேங்கடத்துள்*
*அன்னனைய பொற் குவடாம் அரும் தவத்தன் ஆவேனே"*



மாற்றம் ஒன்றே மாறாதது. ஆழ்வாரின் சிந்தனை தாவத்தாவ தங்கு தடையற்ற தமிழ் பாக்கள் வந்து விழுகின்றன. திருமலையப்பனுக்கு அதில் தானே ருசி. மலைச் சிகரமாய் மாற நினைத்த ஆழ்வாரின் மனது அதினின்றும் மாறுகிறது.


மலைச் சிகரத்தில் என்ன பிரச்சனை?

சிகரமே பிரச்சினை...

ஏறும் வலுவில்லாதவர்களுக்கு மலைச் சிகரங்கள் பயன் படாதே என்று நினைக்கிறார். ஆழ்வாருக்கு பகவானைத் தேடும் பக்தர்கள் அனுபவிக்கத்தக்கதாக இருக்க வேண்டும் என்பது தானே பேரவா... அதனால் வேறு சிந்தனை வருகிறது.

திருமலையில் நுங்கும் நுரையுமாக வெண்ணிறத்தோடு ஓடும் ஒரு காட்டாறாக மாறலாமா என்று யோசிக்கிறார். நுங்கும் நுரையுமாக தங்கு தடையற்ற தமிழ்ப் பாசுரம் வந்து விழுகிறது.

*"வான் ஆளும் மா மதி போல் வெண் குடைக்கீழ் மன்னவர் தம்*
*கோனாகி வீற்று இருந்து கொண்டாடும் செல்வறியேன்*




*தேனார் பூம் சோலைத் திருவேங்கடமலை மேல்*
*கானாறாய்ப் பாயும் கருத்துடையேன் ஆவேனே."*

காட்டாறிலும் ஒரு குறை காண்கிறார்.

என்ன குறை?

மழை பெய்தால் தானே காட்டாறு பெருகும். மழை வற்றினால் *"காட்டாறு கண்ணில் காட்டாத ஆறாகி விடுமே..."* எனவே திருமலைக்கு வரும் பக்தர்கள் வரும் பாதையிலே அவர்கள் பாதம் படும்படியான பொருளாக இருக்கலாமா என்று எண்ணுகிறார்.

*"பிறையேறு சடையானும் பிரமனும் இந்திரனும்*
*முறையாய பெரு வேள்விக்குறை முடிப்பான் மறையானான்*
*வெறியார் தண் சோலைத் திருவேங்கட மலை மேல்*
*நெறியாய்க் கிடக்கும் நிலையுடையேன் ஆவேனே"*

குலசேகர ஆழ்வாரின் அவஸ்தையைக் கண்டு திருமலையப்பனே இப்போது வாயைத் திறக்கிறார். குலசேகரா... இதிலுள்ள குறையை நான் சொல்லட்டுமா? பக்தர்கள் வரும் பாதை மாற்றினால்... வேறு பாதையில் திருமலைப் பயணத்தை மேற்கொண்டால்... பக்தர்களின் பாதம் படும் வாய்ப்பும் போய் விடுமே... ஆழ்வார் குதூகலிக்கிறார்.

பகவானே நான் யோசிப்பதற்கு முன் நீ யோசித்து நல்ல வழி காட்டினாய்... எனக்கு உன் அடியார்களின் பாதமும் வேண்டும். அதே நேரம் சதா சர்வ காலமும் உன் திருமுகத்தையும் முகத்தில் பொலியும் பவள வாயையும் காண வேண்டும் படியாய் இருக்க வேண்டும்.

அடியார் இட்ட வழக்காக இருக்க வேண்டும். அசேதனப் பொருளாகவும் இருக்க வேண்டும். அதே சமயத்திலே எம்பெருமான் அடியார்களின் தொடர்பு பெற்ற பொருளாகவும் இருக்க வேண்டும். எம்பெருமானை தினம் தோறும் காணும் பேறும் கிடைக்க வேண்டும்.

*"செடியாய வல் வினைகள் தீர்க்கும் திருமாலே!*
*நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாசல்*
*அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும்*
*படியாய் கிடந்து உன் பவள வாய் காண்பேனே"*

படியாய் கிடப்பதால் இத்தனை மனோரதமும் ஆழ்வாருக்கு நிறைவேறிற்று. இதிலே அடியார், வானவர் என இரண்டு பதங்கள்.

## வாசகர்களுக்கு அறிவிப்பு

**பிரதி மாதம் ஸப்தகிரி மாத இதழ் உங்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் கிடைக்காமல் போனால் பிரதான ஆசிரியர் அலுவலகத்தை பணி நாளில் கீழ்காணும் தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டால் இவ்இதழினை உடனே அனுப்பி வைக்கப்படும்.**

**நீங்கள் கீழ் குறிப்பட்ட விவரங்களை தொலைபேசியில் தெரிவியுங்கள். உங்கள் சந்தா எண், உங்கள் முகவரி, உங்கள் பகுதி அஞ்சல் எண், உங்கள் கைபேசி எண்... சரியாக தெரிவியுங்கள்.**

**பிரதான ஆசிரியர்**
**அலுவலக தொலைபேசி எண்:**
**0877-2264543**

அடியார் என்பவர் வேறு பயன் கருதாது அவனே பயன் அவனே வழி என்று பற்றி நிற்பவர்கள். (அனன்ய பிரயோஜனர்கள்) இந்திராதி தேவர்கள் வானவர்கள். தங்கள் குறை களைய வேண்டி – ஒரு பலனுக்காக – பகவானைத் தரிசிப்பார்கள். வேண்டுவார்கள். (பிரயோஜனர்கள், காம்யார்த்திகள்) ஆக திருமலைக்கு ஒரு பயன் கருதி வருபவர்கள் உண்டு. அவனே பயன் என்று அனன்ய பிரயோஜனர்களாக (வேறு பயன் கருதாதவர்களாகப்) போவோரும் உண்டு. எப்படியோ பெருமாள் ஆழ்வாருக்கு இந்த விருப்பத்தை நிறை வேற்றி விட்டார்.

எல்லாப் பெருமாள் கோயிலிலும், கர்பகிரகத்தின் முதல் படியே "குலசேகரன் படி"யாக இன்றும் திகழ்கிறார். படியாய்க் கிடந்து பகவான் பவளவாய் காண்கிறார். அந்த இடங்கள் வரும்போது அவரை நினைத்து பெருமாளை சேவிக்க வேண்டும்.

இவ்வளவும் கேட்டபிறகு ஒரு நிறைவான நிலைக்கு ஆழ்வார் வந்து விட்டார். இப்பொழுது ஆழ்வாருக்கு ஞானக் கூர்மை கூடுகிறது. ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டு நாம் கேட்டு அதன் நன்மை தீமைகளை ஆராய வேண்டும். திருமலையில் எதுவாக இருந்தால் என்ன... நமக்கு திருமலை வாசம் தான் முக்கியம். அவன் திருவுள்ளப்படி எதுவாக வேண்டுமானாலும் ஆவோம் என நினைக்கிறார்.

*"உம்பர் உலகாண்டு ஒரு குடைக் கீழ் உருப்பசி தன்*
*அம் பொற் கலை அல்குல் பெற்றாலும் ஆதரியேன்*
*செம் பவள வாயான் திரு வேங்கடம் என்னும்*
*எம்பெருமான் பொன் மலை மேல் ஏதேனும்*
*ஆவேனே'*

இதற்கு விரிவுரை இயற்றிய வைணவப் பேராசிரியர்கள் அற்புத விளக்கங்களை வாரி வழங்கினர். இந்திராதி உள்ளிட்ட அத்தனை உலகங்களையும் ஒரு முத்தின் குடைக் கீழே செலுத்தி அங்கே நடனமிட்டு மகிழ்விக்கும் அழகின் சிகரங்களான உருப்பசி போன்ற தேவப்பெண்களைப் பெற்றாலும் ஆதரியேன். காரணம் அதைவிட மேலான பரம்பொருளின் அழியா அழகை அல்லவா என் உள்ளில் நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். அப்படிப்பட்ட அனுபவம் நிரந்தமாக கிடைக்க திருமலை வாசம் தானே தேவை. அதனால் வினை தீர்க்கும் வேங்கடம் என்னும் எம்பெருமான் பொன் மலை மேல் ஏதேனும் ஆவேனே என்கிறார்.

ஸ்வாமி அனந்தாழ்வான் இவ்விடத்துக்கு திருவேங்கடமுடையான் தானாகவே அமையும் என்னும் விளக்கமளித்தார். அதுக்கு அடிப்படை என் என்னில் சேஷ பூதர் திரளுக்கு புறம்பான சேஷியாகிலும் அமையும் என்கை.

இதற்கு பராசர பட்டர் வேறு நயத்தை அருளிச் செய்தார். நாம் அறிய வேண்டா. திருவேங்கடமுடையானும் அறிய வேண்டா. கண்டாரும் அறிந்து ஸ்லாகிக்கவும் வேண்டா. திருமலை மேலே உள்ளதொரு பதார்த்தமாக அமையும் என்றார். மண்ணவரும் விண்ணவரும் சந்தி செய்ய வந்தவன். கலி காலம் முழுக்க மலைச்சாரல் வேங்கடத்து மலை உச்சி மீது நின்றவன். உபய விபூதிகளையும் காத்தருள்பவன். அவன் வசிக்கும் மலை மீது ஏதேனும் ஆவேனே என்று ஆசைப்பட்ட குலசேகர ஆழ்வாரை போலவே நாமும் ஆசைப்பட வேண்டும்.

அந்த ஆசையை தருவது **தண்சாரல் வேங்கடம்**. அதைத் தூண்டுவது குலசேகர ஆழ்வாரின் திருமலை அனுபவங்கள். வாழ்வின் இனிமையையும் நோக்கங்களையும் உளவியல் வழி நின்று கூறும் உன்னதத் தமிழ் அல்லவா இது...

குலசேகர ஆழ்வார் திருவடிகளே சரணம்

வாழ்க்கை நெறிகள் தொடரும்...



# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

## ஸ்ரீவராகர்

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி.

இறைவனின் திரு அவதாரங்கள் மிகவும் திவ்வியமானவை; மகிமைகளோடு கூடியவை; திவ்விய காரியங்கள் பலவும் செய்பவை. உண்மையில் இறைவனின் அவதாரங்கள் மிகவும் இரகசியமானவை. எவ்வளவு முயன்றாலும் அவற்றின் பெருமைகள் அனைத்தும் அறிதல் என்பது யாவருக்கும் அரிது. ஸ்ரீமத்பாகவதத்தில் அவதாரங்களைப் பற்றி வருணிக்கும் போது, *"ஜந்ம குஹ்யம் பகவதோ"* என்று வருணிக்கப் பட்டுள்ளது. இறைவனின் திரு அவதார லீலைகளையும் செயல்களையும் யாரெல்லாம் காலையும் மாலையும் மனதில் நினைத்து போற்றுகிறார்களோ அவர்கள் எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுபடுவார்கள். துன்பங்கள் நிறைந்த இவ்வுலகத்தில், பக்தர்களை அத்துன்பங்களிலிருந்து காப்பதற்காகவே இறைவன் தன் லீலைகளைப் புரிகின்றார்.அந்த அற்புதமான லீலைகளை நினைத்தப்படியே பக்தர்கள் தன் துன்பங்களிலிருந்து விடுபடுகிறார்கள். இறைவன் திருஅவதாரங்கள் எடுக்கும் போது இரண்டு காரியங்களைச் செய்கிறார். அவற்றுள் ஒன்று, *"பரித்ராணாய சாதூ நாம்"* – சாதுக்களைப் பாதுகாத்தல், இரண் டாவது *"விநாஸாய ச துஷ்க்ருதாம்"* – துஷ்டர்களை அழிப்பது. இறைவனின் அவதாரங்கள் அரிய பெரிய சாதனைகள் பலவும் செய்கின்ற தன்மையுடையனவாக இருப்பதினால் அவதாரச் சிறப்புகளை மனதில் நினைத்து போற்றுபவர்களின் துன்பங்கள் விலகி விடுகின்றன. மேலும், அரிய சாதனைகள் செய்யும் பொருட்டே இறைவன் இப்பூமியில் அவதரிக்கிறார். நீரில் மூழ்கிக் கிடந்த பூமியை பாதாளத்திலிருந்து மீட்டெடுப்பதற்காக இறைவன் வராகமாக அவதரித்தார். இறைவன் வராகமாக அவதரித்ததினால் அவர் பெருமைக்கும் மகிமைக்கும் ஏதொரு குறையும் ஏற்பட்டு விடவில்லை. எனவே ஸ்ரீமத்பாகவதம் ஸ்ரீவராக மூர்த்தியை "யங்னேஸ:" என்று வருணிக்கின்றது. ஸ்ரீமத்பாகவ தத்தில் ஸ்ரீவராக அவதாரம் இரண்டாவது அவதாரமாக வருணிக்கப் பட்டுள்ளது. வராக அவதார வருணனைகளைப் பற்றி கேட்பவரும், புகழ்ந்து பாடுபவரும், ஏற்றுக் கொள்பவரும் பிரம்மஹத்யை முதலான தோஷங்களிலிருந்து விடுபடுவர். இவ்வளவு பெருமைக்கும் சிறப்புக்கும் உரிய வராக அவதாரம் எப்படி எடுத்தார் என்பதைப் பற்றி தெளிவுபடுத்துவதே இந்த வராக அவதாரக் கதை.

இறைவனின் கட்டளைக்கிணங்க பிரம்ம தேவர் உயிர்களைப் படைப்பதற்குப் பலவிதமான முயற்சியில் ஈடுபட்டார். ஆயினும் அவை ஒன்றும் பயன் தரவில்லை. அப்பொழுது பிரம்ம தேவர் தன் உடலில் இருந்து ஆண், பெண் என்னும் இருபாலரைத் தோற்றுவித்தார். அவர்களுள் ஆண் வடிவமே சுயம்புவமனு; பெண் வடிவமே சதரூபை. அவர்கள் இருவரும் திருமண பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அதன் மூலமாக உலகில் உயிர்களை உண்டாக்கும்படி பிரம்ம தேவர் அவர்களை பணித்தார். அப்பொழுது உயிர்கள் அனைத்துக்கும் இடம் கொடுக்க வேண்டிய பூமி பாதாளத்தில் மூழ்கிக் கிடந்தது. அதை

எப்படி வெளியில் கொண்டு வருவது என்று பிரம்ம தேவர் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது பிரம்மதேவருடைய மூக்குத் துவாரத்தில் இருந்து ஒரு பன்றிக் குட்டி வெளி வந்தது. வெளி வரும் பொழுது அது கட்டை விரல் அளவுள்ளதாய் இருந்தது. அதைப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே மிக விரைவாக பிரம்மாண்டமான மதயானையின் அளவிற்கு பெரியதாக வளர்ந்து ஆகாய வெளியில் நின்றது. தற்செயலாகத் தன் மூக்குத் துவாரத்திலிருந்து வெளியே வந்து ஆகாய வீதியில் நின்ற அந்த மகாவராகத்தைப் பற்றி பிரம்ம தேவர் மரீசி முதலான ரிஷிகளுடனும், சனக சனந்தனாதி புத்திரர்களுடனும், மனுவுடனும் கலந்து ஆலோசித்தார். அவ்வடிவம் விஷ்ணு பகவானுடையதா என்பதைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கையில் ஆதிவராகம் முரட்டுத்தனமாய்க் கூக்குரல் இட்டது. அந்த சப்தம் அனைத்து திசைகளிலும் எதிரொலித்தது. மேலும், ஜனலோகம், தபோலோகம், சத்திய லோகத்தில் உள்ளவர்களுக்கும் கேட்டது. அவர்கள் திவ்விய மந்திரங்கள் ஓதினார்கள். திவ்விய மந்திரங்களால் மகிழ்ச்சி அடைந்த ஸ்ரீவராக மூர்த்தி மீண்டும் ஒரு முறை கூக்குரல் இட்டு மிகவும் வேகமாகத் தண்ணீருக்குள் பிரவேசித்தார்.

ஆகாயத்திலிருந்து ஒரேயடியாக ஸ்ரீவராகர் நீரில் குதித்தவுடனே, கடல் நீர் இரண்டாகப் பிளவுபட்டது போல் காணப்பட்டது. அப்பொழுது மேலெழுந்த பெரிய அலைகள் "ஓ யக்ஞேஸ்வரா! என்னை இரு கூறாகப் பிளவுபடுத்தி விடாதே என்று வருத்தத்தோடு தன் கரங்களைத் தூக்கி வணங்கி வேண்டிக் கொண்டது போல் இருந்தது. ஸ்ரீவராகர் தன் திருப்பாதங்களினால் கடல் நீரைப் பிளந்து கொண்டு அடிபாகத்திற்குச் சென்றார். பூமி மறைந்திருக்கும் இடத்தைத் தேடத் தொடங்கினார். சற்று நேரம் அங்குமிங்கும் தேடிய அந்த வராக மூர்த்தி பூமி இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்தார். அதை அப்படியே தன் இரு கொம்புகளுக்கும் இடையில் தாங்கியபடியே கடலில் இருந்து வெளியே கொண்டு வந்தார். பொதுவாக பூமி பாதாளத்தில் விழுந்து விட்டதாக அனைவரும் கூறுவர். ஆனால் அறிஞர் சிலர் இதை ஏற்பதில்லை. காரணம், பாதாளத்தைக் காட்டிலும் பூமி ஏழு மடங்கு பெரியதாகும். அப்படியிருக்க பூமி எப்படி பாதாளத்தில் மூழ்க முடியும். இது சாத்தியமானது அல்ல என்று "விஷ்ணு தர்மா" என்ற நூலில் சொல்லப்பட்டுள்ளது. உண்மையில் பூமி விழுந்து கிடந்தது கடலின் அடி பாகத்தில் தான் என்று அறிஞர் பலரும் விவரித்துள்ளார்கள். இறைவன் அந்த பூமியை தன்னுடைய வெண்மையான தந்தங்களினால் தூக்கிக் கொண்டு வந்தார். அப்பொழுதுதான் இரண்யாட்சன் என்னும் அசுரனை அழித்ததும் நடந்ததாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் இந்த வராக அவதாரம் சுயம்புவ பிரளயக் காலத்தில் நடந்தது. அந்த சமயத்தில் ஜனலோகம், மகர் லோகம், சத்திய லோகம் என்னும் இம்மூன்று லோகங்கள் தவிர மற்ற உலகங்கள் எல்லாம் நீரிலே மூழ்கிக் கிடந்தன. எனவே தான் வராக அவதார தரிசனம் மேல் லோக வாசிகளுக்கு மட்டுமே வாய்க்கப்பெற்றது. பூமியை கடலிலிருந்து வெளி கொண்டு வந்த அக்காட்சியைக் கண்ட மகரிஷிகள் யாவரும் இறைவனை துதி செய்த வண்ணம் இருந்தனர். நீரிலிருந்து வெளியில் வந்த வராகர் தன் பிடரியை உதறினார். அதிலிருந்த நீர் எல்லா இடங்களிலும் சிதறி விழுந்தது. மேலுலகவாசிகள் அந்த நீரில் நனைந்து மேலும் தாம் பவித்திரமானவர்களாக ஆனோம் என்று எண்ணி அவர்கள் மகிழ்ந்தனர்.




சமுத்திர கர்ப்பத்திலிருந்து பூமியை மீட்டெடுத்த ஸ்ரீவராக பகவான் தன் பாதங்களால் பூமியைத் தொட்டு அதை நீரின் மேல் மிதக்கும்படியாகச் செய்தார். உயிர்கள் அனைத்தும் வாழ்வதற்கான வாழ்விடமான பூமியை

அங்கேயே மிதக்க வைத்து விட்டு தேவாதி தேவனான இறைவன் மீண்டும் தன் இருப்பிடமான வைகுண்டத் திற்குச் சென்றார். அழகானதும் பெருமைக்குரியதுமான ஸ்ரீவராக சரித்திரத்தைக் கேட்டாலும் வருணித்தாலும் பக்தர்கள் உள்ளத்தில் வசிப்பவரான ஜனார்த்தனன் மேலும் நமக்கு நெருக்கமானவர் ஆவார். துன்பங்களிலி ருந்து விடுபடுவதற்கு ஒரே வழி பாகவதத்தை ஸ்ரவணம் செய்தல் ஒன்றே ஆகும்.

உண்மையில் வராக அவதாரம் இரண்டு முறை அவதரித்தது எனலாம். சுயம்புவ கல்பத்தில் அவதரித்த யக்ஞவராக மூர்த்தி நீரிலே மூழ்கிக் கிடந்த பூமியை மீட்டெடுத்தார். சாக்ஷுஷ கல்பத்தில் அவதரித்த யக்ஞ வராக மூர்த்தி திதிக்கு பிறந்த முதல் அசுரனான இரண்யாட்சனை அழித்தார். இரண்யாட்சன் திதி, காசிபர் இவர்களின் மகனாவான். ஒரு சமயம், சந்தியா வேளை யில் திதிக்கு மன்மததாபம் ஏற்பட்டது. தன் கணவனுடன் சேர்ந்து இன்பம் நுகர வேண்டும் என்ற தாங்க முடியாத காமவெறி ஏற்பட்டது. அப்போது காசிபர் சந்தியாவேளை பூஜையில் ஈடுபட்டிருந்தார். தாம் கூடுவதற்கான நேரம் இதுவல்ல என்று எச்சரித்தார். இருப்பினும் அவள், அவர் வார்த்தைகளைப் பொருட்படுத்தவில்லை. எல்லாம் விதியின் விளையாட்டு என்று எண்ணிய காசிபர் வேறு வழியின்றி அவளுடைய நிர்ப்பந்தத்தின் காரணமாய்க் கூடிக் கலந்தார். துஷ்டகாலமான அந்த நேரத்தில் நடந்த அச்சேர்க்கையின் காரணமாக திதி கர்ப்பத்தில் இரண்டு அசுரர்கள் தோன்றினார்கள். அசுரர்கள் இருவரும் கர்ப்பத்தில் பிரவேசித்த உடனே இயற்கையில் பல தீய நிமித்தங்களும் அசாதாரண மாற்றங்களும் ஏற்பட்டன. அவற்றையெல்லாம் கண்டு திதி அவர்களை இப் பூவுலகில் உடனே வராமல் இருக்கச் செய்வதற்காக நூறு ஆண்டுகள் தன் கர்ப்பத்திலேயே சுமந்தாள். தன் தவறான செயலுக்கு அவள் வருத்தப்பட்டாள். அதற்காக பிராயசித்தம் வேண்டினாள். அப்போது காசிபர் அவ ளுக்கு ஒரு வரம் கொடுத்தார். பிறக்கப் போகும் இருவ ரும் அரக்கர்களாக இருப்பர் என்றும், இருவரும் ஸ்ரீஜகன் நாதனின் திருக்கரங்களாலேயே கொல்லப்படுவர் என் றும் கூறினார். அதோடு மற்றொன்றும் எடுத்துக் கூறினார். உன்னுடைய பிள்ளைகளுள் ஒருவனுக்குப் பிறக்கப் போகும் மகன், பெரியோர்களால் விரும்பப்படுகின்ற பரம பாகவதனாக உலகில் புகழுடன் திகழ்வான் என்றும் வரம் தந்தார். *“புத்ரயோஸ்ச வதம் க்ருஷ்ணா த்விதித்வா சீன்மஹாமனா:”* திதியின் குமாரர்கள் ஸ்ரீகிருஷ்ணனால்


**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.**

**பக்தர்களுக்கு விண்ணப்பம்**

கல்யாண கட்டாவில் பக்தர்கள் தலை முடி காணிக்கை செலுத்தும்பொழுது முடி இறக்குபவர்கள் பணம் கேட்டால் அவர்களின் விவரங்களை டோல் ப்ரீ எண் : **1800-425-4141** க்கு தெரிவியுங்கள்.

– செயலாட்சித் தலைவர்


கொல்லப்படுவார்கள் என்று முன்னே சொல்லப்பட்டதாக பாகவதத்தில் மிகவும் தெளிவாக உள்ளது.

திதியின் கர்ப்ப தேஜஸுக்கு சூரிய சந்திரர்களின் ஒளியும் குறைந்து போனது. அதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்ய தன்னால் இயலாது என பிரம்மதேவர் கூறினார். நூறு ஆண்டுகளுக்குப் பிறகு திதி இரண்டு மகன்களைப் பெற்றெடுத்தாள். அவர்களே இரண்யாட்சன், இரண்ய கசிபு. இரண்யாட்சன் பிறந்தவுடன் கதையைக் கையில் எடுத்துக் கொண்டு உலகமெல்லாம் சுற்றித் திரிந்தான். அவனைப் பார்த்து மிரண்டு போன தேவர்கள் ஓடி ஒளிந்த னர். தன்னை எதிர்த்து நிற்பவர்கள் எவரும் இல்லாமல் போனதால் இரண்யாட்சன் சமுத்திரத்தில் பிரவேசித்து வருணனை யுத்தம் செய்வதற்கு அழைத்தான். அதற்கு வருணன் நான் உன்னோடு யுத்தம் செய்வதற்குத் தகுதி யானவன் இல்லை உன்னுடன் யுத்தம் செய்வதற்கு தகுதி யானவர் இறைவன் ஒருவனே ஆவார் என்று கோபத்து டன் பதில் கூறினான். அப்படியென்றால் அந்த இறைவன் எங்கே உள்ளான் என்பதை அறிய விரும்பிய அரக்கன் நாரதரின் வாயிலாக அறிந்து கொண்டு வேகமாக பாதா ளத்திற்குப் புறப்பட்டுச் சென்றான். அப்போது ஸ்ரீயக்ஞ வராக மூர்த்தி தன் கோரைப் பற்களால் பூமியைத் தாங்கியவாறு நீரிலிருந்து மேலெழுந்து வெளியே வந்துக் கொண்டிருந்தார். அந்த அற்புதமான காரியத் தைச் செய்து கொண்டிருந்த தேவாதி தேவனான இறை வனை, அந்த அரக்கன் மிகவும் எளிய விலங்காகவே பார்த்தான்.

அவன் இறைவனை மிகவும் இழிவாகப் பேசினான். இருப்பினும் அவன் பேச்சை ஒரு பொருட்டாக எண்ணா மல் நீரிலிருந்து மேலே எழுந்தார். அவர் தன் யோக சக்தியால் அந்த பூமியை நீரில் மிதக்கும்படி செய்தார். பின்பு இரண்யாட்சனுடன் போர் செய்யத் தொடங்கினார். இருவரும் கதையைக் கொண்டு நீண்ட நேரம் யுத்தம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**திருமலையில்**
**இரத்ததானம் செய்யுங்கள்!**
**திருமலையப்பனின் இறையருள் பெறுங்கள்!!**

- இரத்தம் தானத்தால் மட்டுமே வழங்க முடியும். இரத்தம் தேவைபடுபவர்களுக்கு அளிப்பதன் மூலம் ஒரு உயிரையும் காப்பாற்ற முடியும்.
- கலியுக வைகுண்டமான திருமலையில் இரத்த தானம் செய்வது புண்ணியமாகும்.
- திருமலை அஸ்வினி மருத்துவமனையில் தினமும் காலை 9.00 மணி முதல் 12.30 மணி வரை இரத்த தானம் அளிக்கலாம்.

தொலைபேசி எண் : 0877-2263601

**இரத்தம் தானம் செய்யுங்கள்!**
**ஆபத்தில் உள்ளோரை காத்திடுங்கள்!!**

- முதன்மை மருத்துவ அலுவலர்

செய்தனர். இதைக் கண்ட பிரம்மாவிற்குச் சற்று கவலை உண்டானது. அதனால் இறைவனிடத்தில் வந்து "ஸ்வாமி! தாங்கள் இந்த அரக்கனோடு விளையாட வேண்டியது இல்லை. பொழுது சாயும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆகையால் இவனைக் கொன்று, தேவர்களுக்கு வெற்றியைத் தேடித்தருவீராக" எனக் கேட்டுக்கொண்டான். பிரம்ம தேவன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஸ்ரீயக்ஞ வராக மூர்த்தி தன்னுடைய சக்ராயுதத்தை பிரயோகித்தார். அதனால் அவனிடத்தில் இருந்த அசுரத்தன்மை அழிந்து போனது. பிறகு அந்த அசுரன் ஒன்றும் செய்ய முடியாமல் போகவே, நேரடியாக யுத்தம் செய்யத் தொடங்கினான். தன் முஷ்டியால் தீவிரமாக ஸ்ரீவராக மூர்த்தியைத் தாக்கினான்.

பின்பு இறைவன் அவன் கன்னத்தின் மீது எதிர் தாக்குதல் தொடங்கியவுடனே அவன் கண்கள் சுழன்றன. உடல் முழுவதும் காயங்களால் சிதைந்தன. கால், கைகள் முறிக்கப்பட்டன. புயல் காற்றுக்கு வேரோடு சாய்ந்த மரம் போல, அவன் தரையில் வீழ்ந்தான். இறந்த போதும் கூட அவன் முகத்தில் ஒளி குறையவில்லை. "ஆஹா, இவ்வளவு பெருமைக்குரிய மரணம் எவருக்கு வாய்க்கும்?" என்று பிரம்ம தேவன் கூறினார்.

இறைவனுடைய திருமுகத்தைப் பார்த்தபடியே இறந்து போகும் பாக்கியத்தைப் பெற்றானே என்று அனைவரும் எண்ணினர். பிறகு தேவர்கள் அனைவரும் யக்ஞ வராக மூர்த்தியைப் போற்றி வணங்கினர். தேவர்களின் வணக்கங்களை ஏற்றுக் கொண்ட தேவாதி தேவன் தன் இருப்பிடமான வைகுண்டத்திற்குச் சென்றார். இந்த யக்ஞ வராக மூர்த்தியின் லீலைகளை வாழ்க்கையின் கடைசி நிமிடத்தில் கேட்டாலும் நாராயணனின் இருப்பிடமான வைகுண்டத்தைச் சென்றடைவர். பக்தர்களுக்கு தவம், தியானம் முதலானவைகள் தேவையில்லை. அவர்கள் ஆர்வத்தோடு ஒரு மனதாக ஸ்ரீகிருஷ்ண லீலைகளையும், இறைவன் திருவிளையாடல்களையும் கேட்டுக் கொண்டே இருந்தால், அவர்களுக்கு செல்வமும், புகழும், தீர்க்காயுளும், எல்லாவிதமான நலன்களும் உண்டாகும்.

இறைவனுடைய லீலைகளை நித்தியம் கேட்பவர்கள் கடைசியில் சனாதன இடத்திற்கேச் சென்றடைவர். நித்தியம் லீலைகளைக் கேட்டு மகிழும் பக்தர்கள் இப்பூவுலகில் வாழும் போது மன அமைதியுடனும், வெற்றியாளர்களாகவும் வாழ்ந்து முடிவில் கிருஷ்ண லோகத்திற்குச் செல்வர். பக்தர்களுக்கு யக்ஞ வராக மூர்த்தி லீலைகளை கேட்பதினால் திவ்ய பலன்கள் பலவும் வந்து சேரும்.

பாகவத கதை சாகரம் தொடரும்...

## சிறுவர் பகுதி வினாக்கள்

1. த்வைதம் யாரால் தோற்றுவிக்கப்பட்டது?
2. கூரத்தாழ்வானின் இயற்பெயர் என்ன?
3. பெரியாழ்வாரால் பாடப்பட்ட திருத்தலங்கள் எத்தனை?
4. திருப்பாணாழ்வார் அவதரித்தத் தலம் எது?
5. திருமழிசை ஆழ்வாரின் சீடன் யார்?
6. திருப்பள்ளியெழுச்சி பாடிய ஆழ்வார் யார்?
7. குலசேகர ஆழ்வாரைப் பெரிதும் கவர்ந்த அவதாரம் எது?
8. திருமங்கையாழ்வாரின் இயற்பெயர் என்ன?
9. நைமிசாரண்யத்தைப் பாடியுள்ள ஒரே ஆழ்வார் யார்?
10. ஆழ்வார்களுள் "ராஜரிஷி" என்று அழைக்கப்படுபவர் யார்?

விடைகளுக்கு 48ம் பக்கம் பார்க்கவும்

தொகுப்பு : திரு. கே. ரங்கநாதாச்சாரியார், காஞ்சிபுரம்.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 30

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | | | | ■ | ■ | 3 |
| | ■ | ■ | | ■ | | | | | | 4 | |
| | ■ | | | | | | 5 | | | 6 | |
| | 7 | | | | | | | | | 8 | |
| | ■ | ■ | | | | | 9 | | | 10 | |
| 11 | | | | ■ | ■ | 12 | | | | ■ | |
| | 13 | | | | 14 | | | | | | |
| | 15 | | 16 | 17 | | | | | | ■ | 18 |
| | | 19 | | | ■ | | | | | 20 | |
| ■ | | | | | | | 21 | | | | |
| ■ | | | | 22 | | | | | | | 23 |
| 24 | | | 25 | ■ | 26 | | | | | | 27 |

தொகுப்பு : திரு. எஸ். ராஜகுமார், சென்னை.

விடைக்கு 35 ம் பக்கம் பார்க்க

## இடமிருந்து வலம்

1. பூதத்தாழ்வாரின் அவதார ஸ்தலம்....(9)
7. திருமாலை முழு முதல் கடவுளாக வழிபடும் மதம் .....(4)
11. ஆவணி மாத வளர்பிறை ஏகாதசியின் பெயர்......(4)
12. திருவிக்ரமனின் திருவடியை பூஜித்தவர்.....(4)
13. ஸ்ரீரங்கம் கோவிலில் இரவில் கடைசியாக கொடுக்கப்படும் பிரசாதம்.....(4)
14. நம்மாழ்வார் ரிக் வேத சாரமாக பாடிய திவ்ய பிரபந்தம்....(7)
17. ஸ்ரீமகாலட்சுமி எங்கே ஆவிர்பவித்தாள்....(6)
21. சூரியனுக்குரிய புகழ் பெற்ற வட நாட்டு கோயில்.....(4)
24. திருப்பாணாழ்வார் பிறந்த மாவட்டம்...(4)
27. திருமங்கையாழ்வார் “மடல்” என்கிற தனியான பிரபந்தத்தை அருளிய தலம்....(6)

## வலமிருந்து இடம்

4. ஆண்டாள் “மனத்துக்கினியான்” என்று எந்த அவதாரத்தை கொண்டாடுகிறாள்.....(6)
5. அர்ச்சகர் காலில் தண்டை அணிந்து சேலை கட்டி பூஜை செய்யும் தலம்....(6)
6. ராமன் வதம் செய்த அரக்கி.....(3)
8. கண்ணன் அவதரித்த யுகம்....(7)
9. ராமானுஜர் கிருதயுகத்தில் அவதரித்தது....(5)
10. ஏழுமலை.... என்று அழைப்பர்(3)
16. கிருஷ்ண தரிசனம் பெற பூலோகம் வந்த பசு....(3)
20. ராமபக்தி, சாந்த குணம் கொண்ட அரக்கன் ...(5)
23. பேரருளாளன் ராமானுஜருக்கு காவியுடை தந்தபோது அளித்த பெயர்.....(5)

## மேலிருந்து கீழ்

1. பெருமாள் புஜங்க சயனத்தில் மிகச் சிறிய திருவுருவம் கொண்டு சேவை சாதிக்கும் திவ்ய தேசம்.....(9)
2. சூரியனின் மற்றொரு பெயர்....(5)
3. வைணவ அபிஷேகத்திற்கு பெயர்.....(7)
12. பெண் வேடத்தில் அர்ஜீனனுக்கு .... என்று பெயர்(6).
15. விஷ்ணு அலங்கார.....(4)
18. பசுக்களை நம் பாரத தேசத்தில் .... என்று அழைப்பர்.(3)
19. வைகுண்டத்தில் ஓடும் நதி.....(3)

## கீழிருந்து மேல்

22. ராமருக்கு உதவிய பறவையின் பெயர்....(3)
25. ராமன் சீதையை மணம் புரிய உடைத்த வில்....(5)
26. கண்ணன் பிறந்த நட்சத்திரம்....(3)





# ஸ்ரீபுரந்தர தாஸர்

– திருமதி. என். ஹேமா, திருப்பதி.

ஞான, பக்தி, வைராக்ய சிகாமணியான ஸ்ரீபுரந்தர தாசரின் கிருதி ரத்தினங்கள், பாரதம், பாகவதம், இராமாயணம் எனப்படும் பாதைகளால் ஆனது. அவரது கிருதி ஜீவனுக்கு சாந்தி, முக்தி, திருப்தி கிடைக்கிறது. மேலும் அவை சரளமான மொழி, மதுரமான வாக்கியங்கள் கொண்டதாக இருக்கும். வேத, உபநிஷத், புராண சாஸ்திரத்தில் ஞானம் நிரம்பியவர். புராணத்தில் வரும் பிரசித்தமான ஹரி பக்தர்களின் சரித்திரங்களைக் கையாண்டவர். கிருஷ்ணாவதாரத்தின் பல்வேறு சம்பவங்களைக் கற்று தெளிந்தவர். இவர் வியாசராஜ ஸ்வாமிகளின் சிஷ்யர். இவரின் இயற்பெயர் ஸ்ரீநிவாச நாயக். தந்தை வரதப்ப நாயக். இவர் தன் தந்தை செய்து வந்த வியாபார நுணுக்கங்களை நன்றாக கற்று தானும் அவ்வியாபாரத்தை செய்து பெரும் செல்வந்தராகத் திகழ்ந்தார். இவரின் வாழ்க்கை முறையில் சற்று மாற்றம் கொண்டு வர எண்ணிய எம்பெருமான், ஓர் சிறிய மூக்குத்தியை கொண்டு பாடம் புகட்டினார். தானம், உதவி என்று கேட்பவர்களுக்கு ஒரு துளி கூட உதவி புரியாத ஸ்ரீநிவாச நாயக் எம்பெருமானின் திருவிளையாட்டால் தனது வியாபாரத்தை விட்டு விலகி, தன்னிடம் இருந்த அனைத்து செல்வத்தையும் தானம், தர்மம் செய்து விட்டு தீர்த்த யாத்திரையை மேற்கொண்டார்.

இவர் பல்வேறு சாஹித்தியங்களை இயற்றினார். இவர் நான்கு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் கீர்த்தனைகளை பாடியுள்ளார். தற்பொழுது சில ஆயிரம் கீர்த்தனைகள் மட்டுமே நம்மிடம் உள்ளது. இவரும் அன்னமய்யாவும் முதன் முதலில் சந்தித்த இடமும் திருமலை தான். திருமலை திருப்பதி தேவஸ்தானம் திருப்பதியில் அலிபிரியில் இவருக்கு சிலை ஒன்றை வைத்து கௌரவப்படுத்தியுள்ளது. புரந்தர தாசராக புகழ்பெற்ற ஸ்ரீநிவாச நாயக்கின் ஆராதனை நாளில் பல்வேறு இசை நிகழ்ச்சிகள், சிறப்பு பூஜை, பஜனைகள், நாடகங்கள், நாட்டியங்கள் போன்றவற்றை திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினர் "தாஸ சாஹித்ய செயல் திட்ட"த்தின் வாயிலாக செய்து வருகின்றனர். புரந்தரதாசர் தனது கீர்த்தனையின் மூலம் இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவருடைய கீர்த்தனையிலிருந்து ஓரிரு பாடல்கள் அதன் விளக்கத்துடன் இங்கு காண்போம்.





"வெங்கடாசல நிலையம்
வைகுண்ட்ட புரவாஸம்
பங்கஜ நேத்ரம் பரம பவித்ரம்
சங்க சக்ரதர சின்மய ரூபம்
அம்புஜோத் பவ வினுதம்
அகனித குண நாமம்

தும்புரு நாரத கான விலோலம்
அம்புதி சயனம் ஆத்மாபிராமன்
பாஹி பாண்டவ பக்ஷம்
கௌரவ மத ஹரணம்
பாஹு பராக்ரம பூர்ணம்

அஹல்யா ஸாப பய நிவாரணம்
ஸகல வேத விசாரம்
ஸர்வ ஜிவனகரம்
மகர குண்டல தர
மதன கோபாலம்
பக்த போஷக ஸ்ரீபுரந்தரவிட்டலம்"

வைகுண்டத்தையே பூலோக வைகுண்டமாக்கி அதில் வாசம் செய்யும் ஸ்ரீநிவாசரின் கண்கள் தாமரை போன்றவை. சங்கு, சக்கரம் அணிந்து மிகவும் அழகாக காட்சியளிப்பவர். தன்னுடைய பாதங்களை விரஜா நதியில் வைத்திருப்பவரே, இடைவிடாமல் நாமங்களால் பக்தர்களால் பாடப்படுபவர், தும்புரு நாரதரால் பாடப்பட்டவர்.

பாண்டவர்களின் மிகவும் நேசிக்கப் பட்டவரே. கௌரவர்களின் மரணத்திற்கு காரணமானவரே, தன்னுடைய சாமர்த்தியத்தால் எதிரியை வீழ்த்திய வரே, அஹல்யாவிற்கு சாபவிமோசனம் கொடுத்தவரே. எல்லா வேதங்களுக்கும் வித்தாகி இருப்பவரே. சர்வ ஜீவர்களுக்கும் காரண காரணியாகி இருப்பவரே. மகர குண்டலங்களை அணிந்த மதன கோபாலனே பக்தர்களை காப்பவரே.

"இந்து நின்ன மரெய ஹொக்கே வெங்கடேசனே
எந்திகாத ரென்னகாயொ ஸ்ரீநிவாசனே

சேஷகிரிய வாஸாஸ்ரீஷா தோஷ ரஹிதனே
ஏசுதினக்கு நின்னபாதா தாஸனு நானே
கிலேஷ கைசதிரு என்ன ஸ்வாமியு நீனே.

உரக சயன சுரரி கொடய சிரிய ரமணனே
சரண பால பிருது தோரி பொரெவ தேவனே
கருணிசெணகே முக்குதிய புரந்தர விட்டலனே."

நான் உன்னுடைய பாத கமலங்களை நினைத்து உன்னையே நம்பி உள்ளேன். என்றாவது ஒரு நாளாவது என்னை அருள்வாயாக. ஆதிசேஷனின் மேல் சயனித்து கொண்டிருப்பவனே, தோஷமற்றவனே, எம்பெருமானே, நான் என்றென்றும் உன் திருவடிகளுக்கு தாஸனாக இருப்பேன். எனக்கு துன்பங்களைக் கொடுக்காமல் காப்பாற்றும் ஸ்வாமியும் நீயே. அனந்த சயனனான லக்ஷ்மிபதியே உன்னையே நம்பி சரணடையும் பக்தனை காத்தருள்பவனே, என் மீது கருணை கொண்டு முக்தியை அருள்வாயாக.

இவ்வாறாக எந்நேரமும் ஸ்ரீஹரியை தியானித்து, பாடி மகிழ்ந்த அந்த புண்ணியரின் ஆராதனை நாளான தை அமாவாசை அன்று நாமும் வணங்கி புண்ணியராவோம்.

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

### ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு விண்ணப்பம்

- "ஸப்தகிரி" மாத இதழ் தொடர்பான ஆலோசனைகள்/அறிவுரைகள்/புகார்களை sapthagiri_helpdesk@tirumala.org வாயிலாக தெரியப்படுத்தவும்.
- ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியை முறைபடுத்துவதன் பொருட்டு 0877-2264543 தொலைபேசி எண்ணிற்கு தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) மீண்டும் ஒரு முறை தெரியப்படுத்தவும்.
- மேற்குறிப்பிட்ட தொலைபேசி எண் வாயிலாக மட்டுமின்றி sapthagiri_helpdesk@tirumala.org க்கு இமெயில் அனுப்புவதன் வாயிலாகவும் தெரிவிக்கலாம்.
- ஆன்லைன் சந்தாதாரர்கள் தங்களுடைய முழு முகவரியை தி.தி.தே. இணையதளத்தின் வாயிலாக கட்டாயம் தெரியப்படுத்தவும்.

–ப்ரதான ஆசிரியர்



# கபிலேஸ்வரா! சுயம்பு லிங்கேஸ்வரா!!

பாதாள உலகத்தில் “போகவதி” நதிக்கரையில் தனது ஆசிரமத்தில் தவம் செய்து கொண்டிருந்த கபில மஹரிஷி ஒரு சிவலிங்கத்தை பூஜித்து வந்தார். அந்த சிவலிங்கம் தேஜோமயமாக ஜொலித்து அபாரமாக வளரத் தொடங்கியது. அந்த சிவலிங்கம் வேங்கடாச லத்தில் பூமியை பிளந்து கொண்டு சுயம்புவாக வெளிப் பட்டது. இந்த சிவலிங்கத்தின் வளர்ச்சியைக் கண்டு, அதனை கட்டுப்படுத்தும் முயற்சியில் மஹாவிஷ்ணு கோபாலனாகவும், பிரம்மா கபிலதேனுவாகவும் மாறி அந்த சிவலிங்கத்தின் மேல் க்ஷீராபிஷேகம் (பால் அபி ஷேகம்) செய்து சிவலிங்கத்தின் வளர்ச்சியை கட்டுப் படுத்தினர். போகவதி நதி கபில தீர்த்தமாக இங்கு வெளிப் பட்டது. கபில மஹரிஷி முதன்முதலில் பூஜித்த காரணத்தி னால் இந்த சிவலிங்கம் “கபிலேஸ்வரர்”, “கபிலேஸ்வர மஹாலிங்கம்” என பெயர் பெற்றது. இந்த தீர்த்தத்தில் நீராடியவர்கள் பாபங்கள் எல்லாம் தொலைந்து புண்ணி யர்கள் ஆவார்கள்.

## கபில தீர்த்த தலப்புராணம் :

வைணவத்தை கடைபிடித்த அச்சுதராயர் திருமலை யானுக்கு விருப்பமானபடி அந்த தீர்த்தத்தை “சுதர்ஸன சக்ர தீர்த்தம்” என்ற பெயரால் கீர்த்தி பெறச் செய்தார். அதுமட்டுமில்லாமல் 25–06–1531 ஆம் ஆண்டு புஷ்கர ணியை சுற்றி நான்கு மூலைகளில் “திருவாழி” என்று அழைக்கப்படும் சுதர்ஸன சக்ர சிலாயந்திரங்களை அமைத்து இந்த தீர்த்தத்திற்கு “சக்ரத்தாழ்வார் தீர்த்தம்” என்றும் “ஆழ்வார் தீர்த்தம்” என்றும் அழைக்கும்படிச் செய்தார்.

## முக மண்டபம் :

கபிலேஸ்வர ஸ்வாமி ஆலய முகமண்டபத்தில் ஸ்வாமியின் எதிரில் உயரமான துவஜஸ்தம்பம், அதனை ஒட்டி மேற்கு திசையில் “பலிபீடம்” உள்ளது. முதன்மை வாயிலின் இருப்பக்கத்திலும் சிவசங்கரரின் துவார பாலகர்களான “திண்டி” “முண்டி” உள்ளனர். இவர்களை கடந்தவுடன் முகமண்டபம் அமைந்துள்ளது. வரிசைக்கு ஐந்து தூண்கள் வீதம் மூன்று வரிசையாக பதினைந்து தூண்களால் அமைக்கப்பட்ட பரந்து விரிந்த இந்த முகமண்டபத்தின் தூண்களில் காமதேனு பாலாபிஷேகம் செய்யும் கபில லிங்கம், ஸ்ரீகாளஹஸ்தி லிங்கத்தை பூஜிக்கும் கண்ணப்பர், ஆஞ்சநேய ஸ்வாமி, நந்தீஸ்வ ரர், சதுர் புஜ கணபதி, மயில் வாகனனான குமார ஸ்வாமி, மஹரிஷிகள், யோகிகள் முதலிய சிற்பங்கள் அற்புதமாக செதுக்கியுள்ளனர். இந்த முக மண்டபத்தில் ஸ்ரீகபிலேஸ் வர லிங்கத்திற்கு எதிரில் ஸ்வாமிக்கு அபி முகமாக நந்தீஸ்வரர் விக்ரஹமும், ஸ்ரீகாமாக்ஷி தேவியின் வாஹன மான சிம்மமும் பிரதிஷ்டை செய்துள்ளனர். கர்ப்பால யத்தில் நுழையும்போது வடபுறத்தில் துவார கணபதி, தென்புறத்தில் துவார குமாரஸ்வாமி சிலா விக்ரஹங்கள் அமைந்துள்ளன.

தெலுங்கு மூலம் : திருமதி. இ. முனேம்மா முத்துகிருஷ்ணன்.
தமிழாக்கம் : திருமதி. எஸ். வைஷ்ணவி.



முக மண்டபத்தை கடந்த பின்னர் 6×7×7 அளவில் மிகவும் பரந்து விரிந்த கர்ப்பாலயம் உள்ளது. இந்த கர்ப்பாலயத்திற்கு சிலாதுவார பந்தனம் மட்டுமே உள்ளது. இந்த சிலா துவார பந்தனத்திற்கு எவ்விதமான வாயிலும் இல்லை. கர்ப்பாலயம் நடுவில் மேற்கு புறமாக சுயம்புவாக அர்ச்சை வடிவில் மூன்றடி மஹாலிங்க வடிவில் ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி எழுந்தருளியுள்ளார்.

இந்த மஹாலிங்கம் மேல் பகுதி ரஜத வர்ணமான வெள்ளை நிறத்தோடும், மத்தியில் சுவர்ண காந்தியான தங்க நிறத்துடனும், அடிபாகம் தாமிரம் போன்ற சிவப்பு நிறத்துடனும் காட்சியளிக்கின்றது. அது மட்டுமில்லாமல் மேற்கு, வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேல் திசைகளில் பஞ்ச முகத்துடன் கம்பீரமாக தரிசனம் அளிக்கிறார்.

மேற்கு முகமாக எழுந்தருளியுள்ள கபிலேஸ்வர லிங்கம் "ஸத்யோஜாத மூர்த்தி" என்றும் அழைக்கப்படுகிறார். அதாவது "கேட்கும் வரங்களை உடனே அருள்பவர்" என்று பொருள்.

## பரிவார தேவதா மண்டபத்தில் இருக்கும் தேவதா மூர்த்திகள் :

ஸ்ரீகாமாக்ஷி கபிலேஸ்வர சன்னதிக்கு தெற்கில் இந்த பரிவார தேவதா மண்டபம் உள்ளது. பரமசிவனுடைய பரிவாரத்தில் முதன்மை இடம் சண்டிகேஸ்வர ஸ்வாமிக்கே. இவர் ஸ்ரீகாமாக்ஷி கபிலேஸ்வர ஸ்வாமி பிரதக்ஷிண வழியில் சோம சூத்திரம் அருகில் தெற்கு முகமாக எழுந்தருளியுள்ளார். பரிவார தேவதா மண்டபத்தில் தெற்கு முகமாக ஞானம் வழங்கும் ஸ்ரீமேதா தக்ஷிணா மூர்த்தியும், அருகில் காலபைரவர், ஸ்ரீமஹா கணபதி, ஸ்ரீமஹா சாஸ்தா, சுவற்றின் அருகில் மேற்கு முகமாக ஸ்ரீகாசி விஸ்வேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீஉமா மகேஸ்வர ஸ்வாமி, சிவலிங்கம் ரூபத்தில் ஸ்ரீராமலிங்கேஸ்வர ஸ்வாமி காட்சியளிக்கின்றார். மேற்கு முகமாக அமர்ந்த நிலையில் மூக்ஷிக வாகனத்தில் தரிசனம் அளிக்கும் சிலை வடிவம் ஸ்ரீபிரமதா கணபதி. ஸ்ரீசிவசூரிய ஸ்வாமியும் இங்கு எழுந்தருளியுள்ளார்.

உற்சவ விக்ரஹங்கள் வைக்குமிடத்திற்கு அருகில் சுப்ரமணிய ஸ்வாமிக்கு தனிச்சன்னதி அமைந்துள்ளது. இங்கு ஸ்வாமி வள்ளி தேவசேனையருடன் எழுந்தருளியுள்ளார். இந்த சன்னதிக்கு எதிரில் ஏகாந்த சேவை மண்டபம் உள்ளது. இங்கு தினமும் இறுதி சேவையாக ஸ்ரீகாமாக்ஷி கபிலேஸ்வர ஸ்வாமிக்கு ஏகாந்த சேவை (பவளிம்பு சேவை) நடைபெறும்.

## உற்சவ பிரதிமா மண்டபத்தில் உள்ள தேவதா மூர்த்திகள் :

பரிவார தேவதா மண்டபத்திலேயே மேற்கில் ஸ்ரீசுப்ரமணிய ஸ்வாமி சன்னதி அருகில் வடக்கில் நீளமான கம்பியால் ஆன அறை உள்ளது. இதில் உற்சவ விக்ரஹங்கள் நிறைந்துள்ளன. இம்மண்டபம் சாக்ஷாத் கைலாசமே என எண்ணத் தோன்றும். இதில் கபிலேஸ்வர ஸ்வாமிக்கு உகந்த ஸோமஸ்கந்த மூர்த்தி(பரமசிவனின் 25 ரூபத்தில் இது மிகவும் முக்கியமானது), உமா ஸ்கந்த மூர்த்தி அதாவது உமா தேவி மற்றும் ஸ்கந்தனுடன் கலந்திருக்கும் சிவமூர்த்தி, பஞ்ச லோகத்தினாலான அனைத்து உற்சவங்களிலும் எழுந்தருளும் பார்வதி தேவியான ஸ்ரீகாமாக்ஷி தேவி, ஸ்ரீசந்திரசேகர ஸ்வாமி, ஸ்ரீமனோன்மணி தாயார் எழுந்தருளியுள்ளனர். அந்தந்த உற்சவத்தில் ஒவ்வொரு விக்ரஹங்களை





திருவீதி உலாவாகக் கொண்டு வருவர். சிவ சூரியருக்கு பின்புறம் உள்ள கல் மண்டபத்தில் ஸ்ரீநடராஜ ஸ்வாமி, ஸ்ரீசிவகாமசுந்தரி தாயார், மாணிக்க வாசகர், வள்ளி தேவ சேனை சமேத சுப்ரமணிய ஸ்வாமி, ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமியின் ஆயுதமான திரிசூலம், பஞ்ச லோகத்தினால் ஆன சண்டிகேஸ்வர ஸ்வாமியும் உள்ளனர்.

இதற்கு அடுத்த தெற்கு பகுதியில் பரந்து விரிந்த திறந்தவெளியில் நாக விக்ரஹங்கள், சிவலிங்கங்கள், சுப்ரமணிய ஸ்வாமி விக்ரஹமும் உள்ளன. ஸ்ரீகோடிலிங் கேஸ்வர ஆலயம், அகஸ்தீஸ்வர ஆலயம், நவகிரஹ தேவதா மண்டபத்திற்கு தெற்கே நான்கு தூண்களாலான ராகு கேது பூஜை மண்டபமும் உள்ளது. இந்த மண்டபத் தின் எதிரில் இரு வில்வ மரங்கள் உள்ளன. புஷ்கரணியின் மேற்கு பகுதியில் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி குகை ஒன்றும் உள்ளது. இதில் ஒரே கல்லினால் ஆன ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம மூர்த்தி வீற்றிருக்கிறார்.

புஷ்கரணிக்கு தென் பகுதியில் ரங்க மண்டபம் உள் ளது. இதற்கு தீர்த்த வாரி மண்டபம் என்ற பெயரும் உண்டு. ரங்க மண்டபத்திற்கு மேற்கு திசையில் கிழக்கு முகமாக ஸ்ரீலக்ஷ்மி நாராயண ஸ்வாமி ஆலயம் உள்ளது. வடபகுதியில் வேணுகோபால ஸ்வாமி ஆலயம் அமைந் துள்ளது. ஆலயத்திற்கு பின்புறம் நந்தனவனம் எனும் பெயரில் உத்யாணவனம் உள்ளது. இதன் அருகில் தென் திசையில் நம்மாழ்வார் ஆலயம் உள்ளது. இதன் அருகில் திருமுடி காணிக்கை செலுத்தும் கல்யாண கட்டாவும் உள்ளது. இதன் அருகிலேயே ஸ்ரீஅபய ஹஸ்த ஆஞ்ச நேய ஸ்வாமி ஆலயமும் அமைந்துள்ளது.

**அபிஷேகம்-அர்ச்சனை-உற்சவங்கள் :**

ஸ்வாமிக்கு தினமும் இருமுறை அபிஷேகம் நடை பெறுகின்றது. ஒவ்வொரு மாதமும் மாத சிவராத்திரியன்று காலையில் ஸ்ரீகபிலேஸ்வர மஹாலிங்கத்திற்கு மஹா வ்யாசபூர்வக ஏகாதச ருத்ராபிஷேகம் நடைபெறும். திருவாதிரை நஷத்திரம் நாளன்று ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமிக்கு லக்ஷ வில்வார்ச்சனை, கிருத்திகை நக்ஷத் திரத்தன்று கார்த்திகை தீபோத்ஸவமும் நடைபெறும். தினமும் நடைபெறும் அபிஷேகத்தில் "விபூதி" யுடன் அபிஷேகம் செய்து நீராஜனம் காட்டி அபிஷேகத் தினை நிறைவு செய்வர்.

ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாலையில் ஸ்ரீகாமாக்ஷி தேவி சமேத ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமிக்கு டோலோத்ஸவம் நடைபெறுகிறது. இதற்கு "ஊஞ்சல் சேவை" என்று பெயர். ஒவ்வொரு மாதமும் மாத சிவ ராத்திரி நாளன்று பிரதோஷ (மாலை) வேளையில் கல் யாணோத்ஸவம் நடைபெறுகிறது. ஒவ்வொரு ஆண் டும் ஆடி மாதத்தில் பௌர்ணமி முன் சதுர்த்தி நாளன்று நிறைவடையும் வண்ணம் மூன்று நாட்கள் பவித்ரோத் ஸவம் நடைபெறும். நவராத்திரியில் தேவி நவராத்திரி பூஜைகள் மிகவும் சிறப்பாக நடைபெறும். சௌரமான படி துலா மாதத்தில் பௌர்ணமி அன்று "அன்னாபி ஷேகம்" நடைபெறும். இதனை "கபில தீர்த்த முக் கோட்டி" என்பர்.

ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதத்தில் திருவாதிரை நக்ஷத்திரத்தன்று லக்ஷ வில்வார்ச்சனை நடைபெறும். கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நஷத் திரம் அன்று பிரதோஷ வேளையில் கார்த்திகை தீபோத் ஸவம் நடைபெறும். ஒவ்வொரு ஆண்டும் தனுர் மாதத் தில் திருவாதிரை நஷத்திரத்தில் நிறைவடையும் வகை யில் ஐந்து நாட்கள் புஷ்கரணியில் பிரதோஷ வேளை யில் தெப்போத்ஸவம் நடைபெறும். சௌரமானம்படி ஒவ்வொரு ஆண்டும் தை மாதத்தில் பௌர்ணமிக்கு முன்னர் வரும் வெள்ளிக்கிழமை ஸ்ரீகாமாக்ஷி தேவிக்கு சந்தனலங்கார சேவை நடை பெறும். ஒவ்வொரு வருட மும் மஹா சிவராத்திரியை முன்னிட்டு 10 நாட்கள் சைவாகமசாஸ்திரப்படி பிரம்மோத்ஸவம் நடைபெறும்.







**கபிலதீர்த்தம் விசேஷம் :**

முன்பு ஒரு காலத்தில் அந்தணர் ஒருவர் திருத்தலங்களையெல்லாம் தரிசித்து, தீர்த்தங்களில் நீராடி தேசம் முழுவதும் சென்று கொண்டிருந்தார். அதனால் அவர் மிகவும் நெலிந்து, சக்தியற்றவராய் நடக்கக்கூட முடியாமல் ஓரிடத்தில் ஓய்வு எடுக்க படுத்தார். படுத்தவர் மிகவும் ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்றார். அவருடைய எண்ணத்தையும் அவருடைய இயலாமையையும் கண்ட எம்பெருமான் அவருடைய கனவில் தோன்றி, “ஓ பிராம்மணோத்தமனே! உன்னுடைய இந்த முயற்சி முடியாத ஒன்று. உனக்கு மட்டுமில்லை யாருக்குமே முடியாத ஒன்று. என்றைக்கும் நிறைவேறாதது ஆகும். ஆனால் வேங்கடாசல க்ஷேத்திரத்தில் “கபில தீர்த்தம்” முதல் மிக முக்கியமான பதினேழு தீர்த்தங்கள் உள்ளன. அவற்றில் சாஸ்திரபடி, நியமமாக ஸ்நானம் செய்தால் போதும். உலகத்தில் உள்ள அனைத்து தீர்த்தங்களில் நீராடிய பலன் கிட்டும். அதில் எவ்வித மாற்று கருத்தும் இல்லை. அதனால் நீங்கள் அந்த பதினேழு தீர்த்தங்களில் நீராடுங்கள். உங்கள் விருப்பம் நிறைவேறும்” என்றார்.

அந்த கனவின் அடிப்படையில் தன்னுடைய தீர்த்த யாத்திரையை நிறைவு செய்து வேங்கடாசல க்ஷேத்திரத்திற்கு சென்று அங்கே இருக்கும் கபில தீர்த்தம் முதலாக உள்ள பதினேழு தீர்த்தங்களையும் வணங்கி முக்தி அடைந்தார்.

*“கைலாச சிகராவாஸ பரப்ரஹ்மஸ்வரூபிணே*
*காமாக்ஷி வல்லபாயாஸ்து கபிலேஸாய மங்களம் || ”*



## குமாரதாரை தீர்த்தம்

குமாரதாரை தீர்த்தமானது திருமலை ஆலயத்திலிருந்து சுமார் ஐந்து மைல் தூரத்தில் உள்ளது. தேவசேனாதிபதியான குமார ஸ்வாமி, தரகாசுரனை சம்ஹரித்ததினால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷத்தை போக்க இந்த குமாரதாரை தீர்த்ததில் நீராடியதாக மார்க்கண்டேய புராணம் கூறுகின்றது. ஆண்டு தோறும் மாக மாதம் (மாசி மாதம்) மகம் நட்சத்திரம் கூடிய பௌர்ணமியன்று இத்தீர்த்தத்திற்கு “தீர்த்த முக்கோட்டி”.

**இவ்வருடம் 19-02-2019 அன்று இத்தீர்த்தத்திற்கு தீர்த்த முக்கோட்டி விழா நடைபெறும்.**





# மங்களம் அருளும் மாக மாதம்

– டி.ஆர். பரிமளரங்கன், திருச்சி.

மாசி மாதத்தை மாக மாதம் என்றும் போற்றுவர். இந்த மாதத்தில் புனித நீராடுவதை மிகவும் சிறப்பிக்கப் படுகிறது. மாசி மாதம் முழுக்க விடியற்காலை வேளை யில் நீராடினால் விரும்பிய பலனை அடையலாம் என்று வேத நூல்கள் சொல்கின்றன. புனித நதியில் நீராடுபவர் கள் சங்கல்பம் செய்து கொண்டு நீராட வேண்டும். திருமணமாகாதவராக இருந்தால் இறைவனை வேண்டி யும், திருமணம் ஆனவர்கள் மனைவியுடனும் நீராட வேண்டும் என்பது நியதியாகும்.

நீர் நிலைகள் இல்லாத ஊர்களில் வாழ்பவர்கள் அதிகாலை நேரத்தில் தங்கள் இல்லத்திலேயே அதற் குரிய மந்திரத்தினைச் சொல்லி நீராடினாலும் நற்பலன் கிட்டும். மாக ஸ்நானம் செய்பவர்கள் வடக்கு நோக்கி நின்று, மூன்று முறை நீரில் மூழ்கி எழ வேண்டும். காசித் திருத்தலம் வடதிசையில் இருப்பதால் இவ்வாறு சொல் லப்பட்டுள்ளது. இதன் மூலம் கங்கையில் நீராடிய புண்ணியம் கிட்டும்.

மாசி மாதத்தில் முப்பது நாட்களும் நீராடி தான தர்மங்கள், அன்னதானம் செய்தால் பிரம்மஹத்தி தோஷங்கள், மது போன்ற போதைப் பொருட்களைப் பயன்படுத்தியதால் வந்த தோஷங்களில் இருந்தும் விடுபடலாம் என்று இம்மாதத்தின் ஜலதேவதைச் சொல் வதாக ஞான நூல்கள் எடுத்துரைக்கின்றன. அதற்காகத் தெரிந்தே மீண்டும் மீண்டும் பாவகாரியங்கள் செய்வது ஏற்புடையது அல்ல என்றும், சாஸ்திரம் வலியுறுத்து கிறது. நீர் நிலையில் நீராடும்போது மூன்று முறை முழுக்கு போட வேண்டும். முதல் முழுக்கில் பாவங்கள் அழியும். இரண்டாவது முழுக்கின்போது சொர்க்கத்தில் இடம் கிடைக்கும். மூன்றாவது முழுக்கு போடும்போது, இந்த பக்தருக்கு என்ன பலனைக் கொடுப்பது? என்று பகவான் யோசிப்பாராம்.

"எந்த நீர் நிலையில் நீராடுகிறோமோ அந்த நீருக்கு அடியில் உள்ள மிருத்திகையை (மண்) சிறிதளவு எடுத்து தலையிலும், உடலிலும் பூசிக் கொண்டு நன்கு தேய்த்துக் குளிக்க வேண்டும். இதனால், பூமாதேவிக்குத் தெரிந்தோ தெரியாமலோ செய்த பாவங்கள் நீங்குவதுடன் குடும் பத்தில் சகல பாக்கியங்களும் கிடைக்கப் பெறும்" என்பது ஐதீகம். மாசி மாதத்தில் ஒரு முறை புனித நீராடினால், நூறு முறை கங்கையில் நீராடிய புண்ணியம் கிட்டும்.

மாதங்களில் மிகவும் உத்தமமானது மாசி மாதம் என்பதால், இந்த மாதத்தில் காலையில் நீராடி, இறை வழிபாட்டில் ஈடுபடுவது மிகவும் சிறப்பிக்கப்படுகிறது. இதனால் மனதிற்கு நிம்மதியும், ஆரோக்கியமும் ஏற்படும். எல்லா பாவங்களையும் போக்கக்கூடியதாக மாக ஸ்நானம் கருதப்படுவதால், கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகள் சங்கமமாகும் திரிவேணி எனப்படும் பிரயாகையில் நீராடுவது மிகவும் போற்றப் படுகிறது. அங்கு செல்ல முடியாதவர்கள் தங்கள் ஊருக்கு அருகில் உள்ள புனிதத் தீர்த்தத்தில் நீராடிப் பலன் பெறலாம்.

பொதுவாக எந்த நீர் நிலையில் நீராடினாலும், அல்லது வீட்டில் குளியலறையில் நீராடினாலும் முதல் முழுக்கு அல்லது முதலில் சொம்பில் நீரை எடுத்துத் தலையில் ஊற்றிக் கொள்ளும்போது, பாரதத்தின் புண் ணிய நதிகளான ஏழு நதிகளின் புனித நீர் அதில் கலந்தி ருப்பதாகப் பாவித்து வணங்கி நீராட வேண்டும். அப்படி வணங்க வேண்டிய நதிகள் கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவேரி நதிகளாகும். அப் போது கீழ்கண்ட சுலோகத்தைச் சொல்லி நீராடுவது நல்ல பலன்களைத் தரும் என்று ஞான நூல்கள் கூறுகின்றன.

*"கங்கேசயமுனே கோதாவரி சரஸ்வதி*
*நர்மதா சிந்து காவேரி ஜலேஸ்மின் சந்நிதிம் குரும்"*

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# தேவுனிகடப்பா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவம்

**05-02-2019 முதல்**
**14-02-2019 வரை**



**05-02-2019**
**செவ்வாய்க்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**06-02-2019**
**புதன் கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**07-02-2019**
**வியாழக்கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : சிம்ம வாகனம்

**08-02-2019**
**வெள்ளிக்கிழமை**
பகல் : கல்ப விருக்ஷ வாகனம்
இரவு : ஹனுமத்வாகனம்

**09-02-2019**
**சனிக்கிழமை**
பகல் : முத்துப்பந்தல் வாகனம்
இரவு : கருட வாகனம்

**10-02-2019**
**ஞாயிற்றுக்கிழமை**
பகல் : கல்யாணோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**11-02-2019**
**திங்கட்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : தூளி உத்ஸவம்

**12-02-2019**
**செவ்வாய்க்கிழமை**
பகல் : சர்வ பூபால வாகனம்
இரவு : குதிரை வாகனம்

**13-02-2019**
**புதன் கிழமை**
பகல் : வஸந்தோத்ஸவம்,
சக்கர ஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்,
ஹம்ஸ வாகனம்

**14-02-2019**
**வியாழக்கிழமை**
இரவு : புஷ்பயாகம்



# ஸ்ரீபத்மாவதி தாயார்





பெரிய சேஷ வாகனத்தில்
அலர்மேல்மங்கை ஸ்ரீபத்மாவதி!



முத்துச் சரங்களின் இடையே முத்து ஆரத்தி ஒளியில்
ஒளிரும் ஒய்யார நாயகி ஸ்ரீஅலர்மேல் மங்கை!



திருகஜத்தின் மீது திருமங்கள நீராஜனத்தை
ஏற்கின்ற "கஜலக்ஷ்மி" ஸ்ரீஅலர்மேல் மங்கை!



ஆனந்த அமிழ்தினை அள்ளித்தரும் ஆனந்த
திருவடிவினள் ஸ்ரீஅலர்மேல்மங்கை!



ஸ்ரீபத்மாவதி தாயார் உத்ஸவத்தில் பங்கு
கொண்ட இரு தெலுங்கு மாநில மேதகு ஆளுனர்
திரு. இ.எஸ்.எல். நரசிம்மன் தம்பதியினர்



திருவேங்கடமுடையான் தன் பட்டத்து ராணி அவதார நன்நாளுக்காக
அனுப்பிய காணிக்கை அதுவே! பஞ்சமி தீர்த்த நாளைய பொன்னாரம்



# பிரம்மோத்ஸவ வைபவம்





கற்பக விருக்ஷ நிழலின்கீழ் வரமளிக்கும் தாயார் வரலக்ஷ்மிக்கு இதே திவ்ய மங்களஆரத்தி!



திருச்சானூர் தாயார் பிரம்மோத்ஸவத்தில் உபய ஜீயர் தலைமையில் நடந்த திவ்ய பிரபந்த கோஷ்டி!



சூரியப்பிரபையில் சுடர் விடுகின்ற வேங்கடவனின் பட்டத்து ராணி ஸ்ரீபத்மாவதி!



பிரம்மாண்ட நாயகியின் பிரம்மோத்ஸவத்தில் பக்தர்களின் ஆனந்த களியாட்டம்!



அலர்மேல் மங்கை தாயாருக்கு ஆனந்த நிலைய நிவாசன் அனுப்பிய சீர்வரிசையை சுமந்து வரும் தி.தி.தேவஸ்தான அர்ச்சக, அதிகார குழாம்!



பஞ்சமி தீர்த்தம் அன்று பத்ம சரோவரத்தில் திருமஞ்சனம் ஆடுகின்ற ஸ்ரீசுதர்ஸன பகவான்!

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# திருப்பதி
# ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி
# வருடாந்திர பிரம்மோத்ஸவம்

25-02-2019 முதல்
06-03-2019 வரை





25-02-2019 திங்கட்கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : ஹம்ஸ வாகனம்

26-02-2019 செவ்வாய்க்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

27-02-2019 புதன்கிழமை
பகல் : பூத வாகனம்
இரவு : சிம்ஹ வாகனம்

28-02-2019 வியாழக்கிழமை
பகல் : மகர வாகனம்
இரவு : சேஷ வாகனம்

01-03-2019 வெள்ளிக்கிழமை
பகல் : திருச்சி உத்ஸவம்
இரவு : அதிகார நந்தி வாகனம்

02-03-2019 சனிக்கிழமை
பகல் : வ்யாக்ர வாகனம்
இரவு : யானை வாகனம்

03-03-2019 ஞாயிற்றுக்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : குதிரை வாகனம்

04-03-2019 திங்கட்கிழமை
பகல்:திருத்தேர்
இரவு:நந்தி வாகனம் (மஹா சிவராத்திரி)

05-03-2019 செவ்வாய்க்கிழமை
பகல் : புருஷமிருக வாகனம்
இரவு : (கல்யாணோத்ஸவம்)திருச்சி உத்ஸவம்

06-03-2019 புதன்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனத்தில் நடராஜஸ்வாமி,
திரிசூல ஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம், இராவணாசுர வாகனம்





# திருமாலின் சயனத் திருக்கோலம்

திரு. இரா. வ. கமலக்கண்ணன், காஞ்சிபுரம்.

ஸ்ரீமந்நாராயணன் சில திருத்தலங்களில் நின்றும், சிலவற்றில் இருந்தும், சிலவற்றில் கிடந்தும், சிலவற்றில் இயங்கியும் சேவை சாதிக்கின்றார். இவை ஸ்தானக மூர்த்தம் (நின்ற திருக்கோலம்), ஆசன மூர்த்தம் (அமர்ந்த திருக்கோலம்), சயன மூர்த்தம் (கிடந்த திருக்கோலம்), யானக மூர்த்தம் (இயங்கு திருக்கோலம்–சக்கரத்தாழ்வார், திரிவிக்கிரமர்) எனக் கூறப்படும். இவற்றுள் சயனத் திருக்கோலங்கள் 8 வகைப்படும்.

அவையாவன : 1) உத்தியோக சயனம், 2) தர்ப்ப சயனம், 3) தல சயனம், 4) புஜங்க சயனம், 5) போக சயனம், 6) மாணிக்க சயனம், 7) வடபத்ர சயனம், 8) வீர சயனம் என்பனவாம்.

**1) புஜங்க சயனம் :**

ஆதிசேடன் மீது பெருமாள் பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் (புஜங்க சயனம் – புஜங்கம் = பாம்பு) திருத்தலங்கள் 20. பாற்கடல் – விந்து, பாம்பு அணை – நாதம்; உந்தி – படைப்பு. உலகம் உருக்கொள்ள நாதம் பாம்பு போல் மண்டித்தலால் அது பாம்பணை எனப்பட்டது. எம்பெருமான் பாற்கடலில் பாம்பணை மேல் பள்ளி கொண்டிருப்பது, அவன் விந்து, நாத தத்துவங்களுக்கு மேற்பட்டவன் என்பதையும், அவற்றை இயக்க வல்லவன் அவனே என்பதையும் தெரிவிப்பது. உந்தியில் நான்முகனது தோற்றம் படைப்பை உணர்த்துகிறது.

மிகப் பெரிய அனந்த சாயியைத் திருமயத்திலும், திருவனந்தபுரத்திலும், நாமக்கல்லிலும் தரிசிக்கலாம். செஞ்சிக்கு வடக்கிலுள்ள (சிங்கபுரம்) சிங்க வரம் என்னும் ஊரில் பாறையைக் குடைந்து அமைக்கப்பட்ட கோயிலில் ஸ்ரீஅரங்கநாதர்பள்ளி கொண்டு விண்ணைப் பார்த்த வண்ணம் யோக சயனத்தில் உள்ளார். இவரது வலப்புறம் திருமார்பில் திருமகள், கொப்பூழ்க் கொடித் தாமரையில் பிரம்மன், அருகில் கந்தருவர், திருவடிப் பக்கம் பிரகலாதன், பூதேவி ஆகியோர் காட்சியளிக்கின்றனர். 3 நிலைகளில் நின்று சேவிக்க வேண்டும். திருவரங்கப்பெருமான்:



*"குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி*
*வடதிசை பின்பு காட்டித் தென் திசை இலங்கை நோக்கி*
*கடல்நிறக்கடவுள் எந்தை அரவணைத் துயலுமா கண்டு*
*உடல் எனக்கு உருகுமாலோ! என் செய்கேன்? உலகத்தீரே!"*

என்று தொண்டரடிப்பொடியாழ்வார் பாடுவதற்கேற்ற முறையில் பள்ளி கொண்டுள்ளார். இது பூலோக வைகுந்தமாகும். 108 திவ்ய தேசங்களில் கோயில் என்று குறிப்பிடப்படுவதும் இதுவே.

**2) போக சயனம் :**

திருச்சித்திரக்கூடம் : இம் மூர்த்தி 2 (அ) 4 திருக்கரங்களுடன் திடமான திருமேனியுடன் கரிய வண்ணத்



துடன் காட்சியளிப்பார். சுவாமி திருமுடி அருகே திருமகள் இருப்பார்.

இடத்திருவடியருகில் நிலமகள் இருப்பார். சுவாமியின் வலப்புறம் மார்க்கண்டேயரும், இடப்புறம் பிருகுவும், தெற்கில் பிரம்மனும், வடக்கில் சிவபிரானும் அமர்ந்து இருப்பர். திருவடியில் மது, கைடபர் மூர்க்கமான தோற்றத்தில் இருப்பர்.

நாபியில் நான்முகன், சுற்றிலும் பஞ்சாயுதங்கள், கருடன், சூரியன், அசுவனி தேவர், சந்திரன், எட்டுத் திக்குப்பாலகர் ஆகியோர் இருப்பர். நாரதர், தும்புரு இருக்க, அப்சரஸ் பெண்கள் சாமரம் வீசியவாறு இருப்பர். இது உத்தம வகுப்பு; திக்குப்பாலகர், நாரதர், தும்புரு இல்லையெனில் நடுத்தரம்; முனிவரும் அப்சரசப் பெண்களும் இல்லையெனில் கடைத்தரம்.

**3) வீர சயனம் :**

திருஇந்தளூர் : இம்மூர்த்தி 4 திருக்கரம் கொண்டு வலக்கரங்களில் சக்கரமும், தலையணையும், இடக்கரங்



களில் ஒன்று சங்கேந்தியும், மற்றொன்று திருமேனிக்கு இணையாகவும் பரந்திருக்கும். முன்சொன்ன மூர்த்திகள், மது, கைடபர் இருப்பர். இது உத்தமம்; குறைவது மத்திமம், அதமம் ஆகும்.

**4) தர்ப்ப சயனம் :**

திருப்புல்லாணி : இங்கு தர்ப்பைப் புல்லின் மேல் சயனத்திருக்கோலத்தில் ஸ்ரீராமர் சேவை சாதிக்கிறார். பட்டாக் கத்தியுடன் வீர சயனராகப் பெருமாள் காட்சியளிக்கிறார். திருவடியில் இராவணனின் தூதுவரான சுகர், சாரணனும், பிருகு, வீர ஆஞ்சநேயரும் காட்சியளிக்கின்றனர்.



**5) தல சயனம் :**

திருக்கடல் மல்லை : இங்கு திருமால் வெறுந்தரையில் சயனித்திருப்பதால் இது தலசயனமாகும்.



**6) உத்தான சயனம் (எ) உத்தியோக சயனம் :**

திருக்குடந்தை : கும்பகோணம் சாரங்கபாணிப் பெருமாள் ஆராவமுதன் என்னும் திருநாமத்துடன் பள்ளி கொண்டுள்ளார். திருமழிசை ஆழ்வார் இங்கு வந்த போது, சுவாமி தம்மைக் கவனிக்காமல் என்ன களைப் பில் தூங்குகிறாரோ? என்று பாடினார்.

*“....கிடந்தவா றெழுந்திருந்து பேசு வாழி கேசனே!”* என்று பாடக்கேட்ட பெருமாள் சற்றே தலையைத் தூக்கி ஆழ்வாரைப் பார்த்தாராம். அந்நிலையில் “வாழி கேசனே” என்று ஆழ்வார் வேண்ட, எழுந்திராமல் அந்நிலையி



லேயே இன்று சற்றே திருமுடியைத் தூக்கிய நிலையில் சுவாமி காட்சியளிக்கிறார். உத்தானம் என்றால் எழுதல். திருமகள், நிலமகள், நான்முகன், ஏம முனிவர், திருமழி சையாழ்வார், ஏழு முனிவர், புனித நதிகள், வானவர் ஆகியோர் வழிபடுகின்றனர்.

**7) வடபத்ர சயனம் :**

ஸ்ரீவில்லிபுத்தூர் : வடபத்ரம் – ஆலிலை மீது பள்ளி கொண்டது. கிழக்கு நோக்கிய சயனம். வடபத்ர சாயி ஸ்ரீஆண்டாள் திருக்கோயில் அருகில் உள்ளது. சுவாமி யின் மேல்புறத்தில் கந்தருவர், தேவர் உள்ளனர்.



**8) மாணிக்க சயனம் :**

திருநீர்மலை : மலையின் மேல் திருவரங்கநாதர் மாணிக்க சயனமாகப் பள்ளி கொண்டுள்ளார். தாயார் – ஸ்ரீரங்க நாயகி. பிருகு, மார்க்கண்டேயருக்குக் காட்சிய ளித்தவர். இவை தவிர, யோக சயனம் என்று ஒன்று உண்டு. இரு திருக்கரங்களை உடைய இம்மூர்த்தி அனந்தன் மீது சயனித்துள்ளார். இடத்திருவடி சற்றே மடிந்தும், வலத்திருவடி நீண்டும் இருக்கும். திருவடிக் கருகில் மது, கைடபர் இருப்பர். பிருகு, மார்க்கண்டேயர் அருகில் இருப்பர். நாபிக் கமலத்தில் பிரம்மன். பின்புறச்



சுவரில் ஆயுத புருஷர்கள், 7 முனிவர், கருடன், விஷ்வக் சேனர் ஆகியோர் வணங்கி நிற்பர். இடப்புறத்தில் சிவ பிரான் இருப்பார். இவ்வாறு அனைத்துப் பரிவாரங்க ளுடன் காட்சியளிக்கும் திருவுருவமே உத்தம வகுப்பைச் சேர்ந்த யோக சயன மூர்த்தியாகும். 7 முனிவர், விஷ்வக் சேனர் இல்லை எனின் அது நடுத்தரவகுப்பாகும்.

இவர்களுடன் மது, கைடபர் முனிவரும் இல்லை யெனின் அது கடை நிலையாகும். மாமல்லபுரம் – மகி ஷாசுர மர்த்தனி குகைக் கோயிலில் நடுத்தர வகுப்பைச் சார்ந்த யோக சயன மூர்த்தி உள்ளார்.

ஆலய தரிசனம்

# பெரிய கொழப்பலூர் ஸ்ரீகரதூஷண பெருமாள்





– திரு. செ.சந்துரு,
ஆரணி.

வைணவத்தை விளங்கச் செய்யும் வைகுந்தனின் பத்து அவதாரங்களில் இராமாவதாரமும் ஒன்று. இராமாவதாரச் சிறப்பையும் பெருமையையும் அறியாதார் இல்லையென்றே கூறலாம். அவதாரப் புருஷனாகிய இராமனின் சிறப்புகளைப் பறைசாற்றி நிற்கும் திருத்தலங்கள் நாட்டில் பல உள்ளன. அவற்றுள் மக்களின் மனக்கவலையை மாற்றும் மாமருந்தாக விளங்கும் பெரிய கொழப்பலூர் ஸ்ரீகர தூஷண பெருமாள் திருக்கோயிலும் ஒன்று. இத்திருக்கோயிலுக்குச் சென்று இப்பெருமாளை சேவித்து வேண்டிக் கொண்டால் நம்மை வாட்டி வதைக்கும் மனக்கவலைகள் ஒழிவதோடு வாழ்வில் மகிழ்ச்சியும் உண்டாகும் என்பது மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

இத்திருக்கோயிலில் கரன் தூஷன் என்னும் அரக்கர்கள் ராமபிரானின் திருப்பாதத்தில் மண்டியிட்ட வண்ணம், ராமபிரான் நான்கு கரங்களோடு மேற்குத் திசையை நோக்கிய வண்ணம் 11 அடி உயரத்தோடு சுயம்பு வடிவமாக சதுர்புஜ இராமராக இருந்து அருள்பாலிப்பது சிறப்பு. இங்கு தாயார் பெருமாளின் இடது புறத்தில் எதிர்புறமாக கிழக்குத் திசையை நோக்கி இருந்து பக்தர்களுக்கு அருளாசி புரிகிறார். அவ்வண்ணமே கருடாழ்வார், ஆஞ்சநேயர் ஆகியோருக்கு தனித்தனி சன்னதிகள் அமைந்துள்ளன. தாயார் சன்னதியும் மற்றும் உள்ள சன்னதிகள் அனைத்தும் பெருமாளை தரிசித்த வண்ணம் அமைந்துள்ளன. இத்திருக்கோவில் திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அடுத்த பெரிய கொழப்பலூரில் அமைந்துள்ளது.

இப்பெருமாளுக்குச் சனிக்கிழமை தோறும் நல்லெண்ணெய் தீபம் ஏற்றியும் துளசி மாலை சாத்தியும் வழிப்பட்டால் மனக்குழப்பங்கள் தீர்ந்து வாழ்வில் மலர்ச்சி உண்டாகும் என்றும், அதேபோல் கனகவல்லி தாயாருக்கு வெள்ளிக்கிழமை தோறும் விளக்கேற்றி வழிபட்டால் சகல விதமான ஐச்வர்யமும் கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.

இத்திருக்கோயில் 1500 ஆண்டுகள் பழமையானது எனக் கூறப்படுகின்றது. இவ்வாலயத்தில் சித்திரை மாதப்பிறப்பு, ஆடிப் பூரம், கிருஷ்ண ஜெயந்தி, தீபாவளி, வைகுண்ட ஏகாதசி, இரத சப்தமி, மாசி மகம் போன்ற நாட்களில் விசேஷ திருமஞ்சனம் நடைபெறும். வைகாசி விசாகத்தன்று நடைபெறும் கருட சேவை மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

**வரலாற்றுச் செய்திகள் :**

பதினான்கு ஆண்டுகள் வனவாசம் மேற்கொண்ட இராமன் தண்டகாரணியம் எனும் காட்டில் செல்லும்போது பாலகில்லர், வாலகில்யர் உள்ளிட்ட பல முனிவர்கள் தங்களை துன்புறுத்தும் அரக்கர்களை அழிக்குமாறு வேண்டினர். தக்க சமயம் வரும் பொழுது கொல்வதாக இராமபிரான் கூறினார். பின்னொரு நாள் சூர்ப்பனகை சூழ்ச்சியாலும் இராவணனின் தம்பிகளான கரன், தூஷன் அரக்கர்களின் தலைமையில் பல அரக்கர்கள் இராமனை எதிர்த்து போரிட வந்தனர். இத்தருணத்தில் போர் செய்ய ஆணை பிறபிக்குமாறு இராமனை இலட்சுமணன்

வேண்டினார். இராமபிரானோ சீதையை பாதுகாப்பான இடத்திற்கு அழைத்து செல்லுமாறும் தான் தனித்து போரிடுவதாகவும் கூறினார். முதலில் பதினான்கு படைத்தலைவர்கள் உள்ளிட்ட 8,40,00,000 வீரர்களுடன் போரிடுகிறார். அவர்கள் அனைவரும் அழிகின்றனர். பின்னர் தூஷணோடு போரிடும் இராமன் தன் அம்புகளால் பெரிய தலையைக் கொண்ட தூஷணை அழித்தார். இக்காட்சியை கம்பர்,

**"கணை ஒன்று ஏவினான் : அவன் எயிறுடை**
**நெடுந் தலை இழந்தான்"**

(கம்ப–3035) என்பார்.

பின்னர் கரனோடு போரிடுகிறார். இப்போரில் இராமர் சற்று தளர்வடைகிறார். கரன் இராமபிரானின் அம்பையும் கவசத்தையும் தன் அம்புகளால் பொடி பொடியாக்குகிறான். சிறிது நேரத்திற்குப் பிறகு இராமன் பரசுராமரிடமிருந்து பெறப்பட்ட விட்டணு வில்லால் கரனது தேரை அழித்து பெரும் போரின் பிறகு,

**"வரம் அரக்கன்**
**படைத்தலின், மாயையின்**
**உரமுடைத் தன்மையால்**
**உலகு ஏழையும்**
**பரம் முருக்கிய**
**பாவத்தினால் வலக்**
**கரம் எனக் கரன்**
**கண்டம் உற்றான் அரோ"**

(கம்ப.3059)

கரனை இராமபிரான் அழித்தார்.

**"குழைத் தாழ் திரைக் குருதிக் கடல்**
**குளித்தார் சிலர் கொலை வாய்"**

(கம்ப. 2969)

என்பதற்கு ஏற்ப அப்போரினால் ஏற்பட்ட புழுதியாலும் குருதியாலும் சிவந்த மண்ணின் துகள்களாலும் குழம்பி எதிரே நிற்கும் உருதெரியாமல் இத்தலம் மாறியதாலும், போரில் மாண்ட அரக்கர்களின் உடலில் இருந்து கொழுப்பும், இரத்தமும் வெளியேறி அப்பெரிய தேசம் முழுவதும் குழம்பி இருந்ததாலும் பெரிய கொழப்பலூர் எனப் பெயர் பெற்றது என்பர்.

கரனாலும், இராமனாலும் விடப்பட்ட அம்புகள் ஆகாயம் முதலான எல்லாத் திசைகளிலும் நிறைந்ததால் ஆகாயமே இல்லாதது போலாயிற்று. அதனால் இராமபிரானுக்கு கரன் இருக்கும் இடம் தெரியாமல் குழம்பி நின்ற இடம் என்பதால் கொழப்பலூர் என்றாயிற்று என்பர். கரன், தூஷணனின் போரினால் கொழுப்பும், இரத்தமும் குழம்பி இருந்ததால் இத்தலத்தில் தாயார் பொன்மாரி பொழிந்து வளமூட்டியதால் தாயாரை கனகவல்லி தாயார் என்றழைக்கின்றனர். இவ்வாறு கரன், தூஷன் என்னும் அரக்கர் இருவரை அழித்து அவர்களுக்கு முக்தி அளித்த தலம் இது எனக் கர்ணப் பரம்பரையாக இவ்வரலாறு அனைவராலும் சொல்லப்பட்டு வருகின்றது.

## திருத்தலம் செல்லும் வழி :

இவ்வாலயம் சேத்பட் – ஆரணி (சேத்பட்டிலிருந்து 10 கி.மீ.) ஆரணி – சேத்பட் (ஆரணியிலிருந்து 13 கி.மீ.) வந்தவாசி – ஆரணி (ஆவணியாபுரம் கூட்ரோட்டிலிருந்து 8 கி.மீ.) தொலைவில் அமைந்துள்ளது. சதுர்புஜ இராமனை வணங்கி வாழ்வில் சகல நலனையும் பெற்று உய்வோமாக.

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 30க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | க் | 2 க | ட | ல் | ம | ல் | லை | | | 3 தி |
| ரு | | | தி | | ம் | ர | தா | வ | மா | 4 ரா | ரு |
| ச் | | கை | ர | வா | து | ட் | 5 பே | கை | ட | 6 தா | ம |
| சி | 7 வை | ண | வ | ம் | க | யு | ர | ப | வா | 8 து | ஞ் |
| று | | | ன் | ஷ | சே | தி | 9 ஆ | ன் | ச | 10 வா | ச |
| 11 பு | த் | ர | ஜா | | | 12 பி | ர | ம் | மா | | ன |
| லி | 13 அ | ர | வ | ணை | 14 தி | ரு | வி | ரு | த் | த | ம் |
| யூ | 15 பி | ர | 16 சு | 17 பா | ற் | க | ட | லி | ல் | | 18 கோ |
| ர் | ரி | 19 வி | னு | யு | | ன் | ண | ஷ | பீ | 20 வி | மா |
| | ய | ர | த | பா | ணி | ன | 21 கோ | னா | ர் | க் | தா |
| | ன் | ஜா | வ | 22 ஜ | ஹி | ளை | ர் | ச | ரா | தி | 23 ய |
| 24 தி | ரு | ச் | 25 சி | | 26 ரோ | ர் | யூ | றை | ந | ரு | 27 தி |




– திருமதி. தி. கிருஷ்ணவேணி கோபால், சேலம்.

கிருஷ்ணர் என்றாலே நம் எல்லோருக்கும் பிடிக்கும். நாம் எல்லோரும் கிருஷ்ண பரமாத்மாவை வணங்குகிறோம். அப்படிப்பட்ட கிருஷ்ண பரமாத்மா யார் யாரையோ வணங்குகிறார். வியப்பாக இருக்கிறது அல்லவா? கள்ளக் கிருஷ்ணரின் இந்த ரகசியச் செயலைக் கண்டு பிடித்தது யார் தெரியுமா? வேறு யாரும் இல்லை. கிருஷ்ணரின் மனைவி ருக்மிணி தான் இதனைக் கண்டு பிடித்தார். ஒரு நாள் கிருஷ்ணரும் வழிபாடு செய்வதைப் பார்த்து விட்டு, "அன்பரே! நீர் யாரையோ வணங்குவது போலத் தெரிகிறது. அவர்கள் யார்? என்று கேட்டாள். கிருஷ்ணர் கொஞ்சமும் தயக்கமில்லாமல் பதில் சொன்னார்.

*"நித்யான்ன தாதா,*
*தருணாக்னிஹோத்ரி,*
*வேதாந்தவித், சந்திர ஸஹஸ்ர தர்சீ,*
*மாஸோ*
*பாவாசீச, பதிவ்ரதா சஷட் வந்தனீயா*
*மம ஜீவலோகே"*

**பொருள் :**

இந்த மனிதர்கள் வாழும் பூமியில் நான் ஆறு வகையான மக்களை வணங்குகிறேன்.

1) தினமும் அன்னதானம் செய்வோர்.
2) தினமும் அக்னிஹோத்ரம் செய்வோர்.
3) வேதாந்தம் அறிந்தவர்கள்.
4) சஹஸ்ர சந்திர தரிசனம் செய்து சதாபிஷேகம் செய்து கொண்டோர்.
5) மாதா மாதம் உபவாசம் இருப்போர்.
6) பதிவ்ரதையான பெண்கள்.



ஆறு வகையான மக்களின் முழுப் பெருமையையும் நாம் அறிவோம்.

**1) நித்ய அன்ன தாதா :**

ஒருவருக்குக் கிடைக்கும் வருமானத்தில் (அ) நிலத்தில் அறுவடையாகும் விளைச்சலில் ஆறில் ஒரு பகுதியை மன்னருக்கு கொடுத்து விட வேண்டும். மீதி ஐந்து பகுதிகளை அவர் ஐந்து பேரை பாதுகாக்கப் (பஞ்ச யக்ஞத்து) பயன்படுத்த வேண்டும்.

திருவள்ளுவர் கூட *"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று ஆங்கு ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை"* (குறள் – 43) பொருள் : இறந்து போய் தென்திசையில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம் முன்னோர்கள், கடவுள், வீட்டிற்கு வரும் விருந்தாளிகள், சுற்றத்தார் (நாம் வளர்க்கும் பசு முதலிய பிராணிகளும் வீட்டில் ஊர்ந்து செல்லும் எறும்புகளும் அடங்கும்), தனது குடும்பம் என்று ஐந்து பேரையும் போற்றுவது இல்வாழ்வானின் தலையாயக் கடமை.

**அதிதி தேவோ பவ :**

விருந்தாளி என்பவன் இறைவனுக்குச் சமம் என்று வேதம் கூறுகிறது. மனுஸ்மிருதியில் 3–72ல் மனு – விருந்தாளிகளுக்குச் சாப்பாடு போட்டவுடன் தான் வீட்டிலுள்ளோர் சாப்பிட வேண்டும்.

திருவள்ளுவரும் விருந்தோம்பல் பற்றி கூறி உள்ளார். அந்த காலத்தில் தான் உண்பதற்கு முன்னால் வாசல் திண்ணையில் சிறிது நேரம் உட்கார்ந்து யாரேனும் விருந்தாளிகள் (அ) வழிப்போக்கர் வருகிறார்களா என்று பார்த்து விட்டே உணவருந்த செல்வார்கள்.

தர்மர் நடத்திய ராஜசூய யாகத்தில் புகுந்து பரபரப்பை உண்டாக்கிய கீரி சொன்ன கதை எல்லோருக்கும் தெரியும். இப்படி தினமும் அன்னதானம் செய்வோர், இது தவிர அன்னக்கொடி ஏற்றி ஆயிரக்கணக்கானோருக்கு அன்னம் இடுவோர் ஆகியோரை கிருஷ்ணர் வணங்குகிறார். இவர்கள் பிரதி பலன் எதிர்பார்க்காமல் அன்னம் இடுகிறார்கள்.


### 2) தருண அக்னி ஹோத்ரி :

அந்த காலத்தில் ஏழு வயதில் பூணூல் போட்டவுடன் பிராமணச் சிறுவர்கள் சமிதா தானம் என்று தினமும்



அக்னி வளர்த்து சமித்துக்களை நெய்யுடன் அக்னியில் ஆகுதி கொடுப்பார்கள். குருகுலம் முடிந்து வீட்டுக்கு வந்தவுடன் இளைய பருவத்திலேயே திருமணமும் நடந்து விடும். பின்னர் அவர்கள் தினமும் ஔபாசனம் என்ற அக்னி காரியத்தைச் செய்து வருவர். அக்னி ஹோத்ரம் என்ற அக்னி காரியம் சூரியனை உத்தேசித்து சரியாக சூரியன் உதிக்கும் காலத்திலும், அஸ்தமனம் ஆகும் காலத்திலும் நடத்த வேண்டும். இது எல்லோரும் செய்து விட முடியாது. தனது தந்தை ஒரு அக்னிஹோத்ரியாக இருந்தால் மட்டுமே தானும் அக்னிஹோத்ரம் செய்ய முடியும். இவர்கள் காணக் கிடைப்பது அபூர்வம். இப்படி தவறாமல் செய்து வருவோரை கிருஷ்ணரே வணங்குகிறார். நாம் வணங்க தயக்கம் உண்டோ!

### 3) வேதாந்த வித் :




வேதங்கள் நான்கு. அதன் முடிவில் இருப்பது வேதாந்தம். உபநிஷத் (வேத+அந்தம்) அதை உணர்ந்தவர்கள் வேதாந்திகள். வேதாந்தத்தில் நாட்டம் ஏற்பட வேண்டும் என்றால் பல கோடி ஜென்மங்களில் புண்ணியம் செய்து இருக்க வேண்டும்.

உலக விஷயங்களை துறந்து வேதாந்த விஷயங்களுக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்து வேதாந்த சிந்தனையிலேயே வாழ்வை கழிப்பவன் வேதாந்த வித். அந்த வேதாந்திகளையும் கிருஷ்ணர் வணங்குகிறார். இவர்களும் காணக்கிடைப்பது அபூர்வம்.

### 4) ஆயிரம் பிறை கண்ட அபூர்வ சிகாமணி :

சிவனுடைய தலையில் இருப்பது மூன்றாம் பிறைச் சந்திரன். அதை மாதம் தோறும் அமாவாசைக்குப் பின்னர் மூன்றாம் நாளில் காணலாம். அடுத்த முறை காண 29 நாட்கள் காத்திருக்க வேண்டும். இப்படி ஆயிரம் முறை காண 81 ஆண்டுகள் பிடிக்கும். அப்பொழுது அவர்கள் சதாபிஷேகம் செய்து கொள்வார்கள். அத்தகையோரை



யும் கண்ணபிரான் வணங்குவார். இந்த பிறைச் சந்திரனைக் காணும் வழக்கத்தை ஏனைய மதத்தினரும் நம்மிடமிருந்து கற்றனர்.

### 5) மாத உபவாசி :

மாதந்தோறும் இரண்டு ஏகாதசிகளிலும் உபவாசம் இருக்க வேண்டும். உண்ணா நோன்பு கடைப்பிடிக்க வேண்டும். சுத்த உபவாசம் என்பது நிர்ஜலமாக (தண்ணீர் கூட பருகாமல்) (அ) தண்ணீர் மட்டும் பருகி உபவாசம் இருப்பது. இப்படி இருப்போர் கிருஷ்ணரால் வணங்கப்படுவர். இது



எளிதல்ல. இருப்போர் மிக மிகக் குறைவு. அவர்களை நாமும் வணங்குவோம்.

### 6) பதிவ்ரதா விரதம் :

இறுதியாக கிருஷ்ணர் கை எடுத்து (கைக் கூப்பி) வணங்குவது யாரை என்றால் "பதிவ்ரதா விரதம்" அனுசரிக்கும் கற்புக்கரசிகளை. உலகில் வேறு எங்கும் இல்லாத ஒரு அணுகு முறை இந்து மதத்தில் உண்டு. சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட எல்லா விஷயங்களையும் மூன்று வகையில் அனுஷ்டிக்க வேண்டும். தமிழ் மொழியில் அற்புதமான மூன்று சொற்கள் உண்டு. அதை உண்மை, வாய்மை, மெய்மை (மனோ, வாக்கு, காயம்) இந்த மூன்று உறுப்புகளாலும் வேறு ஒரு ஆடவனையும் நினையாது கணவனை மட்டுமே தெய்வம் போலக் கருதுபவர்" "பெய் என பெய்யும் மழை" என்பார் செந்நாப் புலவர் வள்ளுவர். இவர்களிடம் மகத்தான சக்தி இருக்கிறது. அதை எளிதில் பிரயோகிக்க மாட்டார்கள்.



அசோக வனத்தில் சீதையைக் கண்ட அனுமன் கெஞ்சுகிறான். தாயே உங்களைக் காணாமல் இராமன் தவிக்கிறான். என் முதுகில்/தோளில் ஏறி அமருங்கள். அடுத்த நிமிடம் இராமனிடம் சேர்ப்பிக்கிறேன் என்று. சீதை சிரிக்கிறாள். என் கற்பின் ஆற்றலால் ஈரேழு புவனங்களையும் எரிக்கும் ஆற்றல் எனக்கு உண்டு. இருப்பினும் என் பார்த்தாவின் (கணவன்) வில் ஆற்றலுக்கு இழுக்கு உண்டாகும் எதையும் செய்ய மாட்டேன்.

இராவணன் வதம் என்பதே இராமாவதாரத்தின் நோக்கம். அந்த காலத்தில் எல்லாப் பெண்களும் மதிக்கப்பட்டார்கள். எல்லா பெண்களும் திரிகரண சுத்தியுள்ள (சொல், செயல், சிந்தனை) மனோ, வாக்கு, காயம் கற்புக்கரசிகளாக இருந்தார்கள்.

மனு இதனால் தான் சொன்னார் எங்கு பெண்கள் மதிக்கப்படுகிறார்களோ, அங்கு தெய்வம் வாழும். எங்கு பெண்கள் மதிக்கப்படவில்லையோ அங்கு என்ன நல்லது செய்தாலும் அதற்குப் பலன் இல்லை. (மனு 3–56) மரியாதை குறைவாக நடத்தப்பட்ட பெண்கள் சாபம் இட்டால் அந்தக் குடும்பங்கள் அடியோடு அழிந்து போகும் மனு –3.59.

*"பெண்களை மதிப்போடு நடத்துங்கள்"*

(மனுஸ்மிருதி ஸ்லோகம் 3–55)

இப்படிப்பட்ட பாராட்டப்பட்ட பதிவிரதைகளை கிருஷ்ணர் வழிபடுவதில் வியப்பேதும் உண்டோ? கணவனை தெய்வமாக நினைக்கும் பெண் இந்த காலத்தில் அபூர்வம். "கிருஷ்ணர் வணங்கும் ஆறு வகை மக்களை எங்கெங்கெலாம் நீங்கள் காண்பீர்களோ அங்கெல்லாம் அவர்களை வணங்கி சகல சௌபாக்கியங்கள் பெறுவீர்களாக."



# மாசி மகம்

திரு. க. சுகுமாரன்,
மன்னார்குடி.

ஆதியந்தமில்லா அருட்பெருஞ்சோதியான சிவ பெருமானே பஞ்ச பூதங்களையும் உயிரினங்களையும் படைத்தான் என்று முத்தொள்ளாயிரம் தெரிவிக்கின்றது. அப்பெருமானின் திருப்பெயரினை ஆதிரையான் என்று சங்க இலக்கியங்கள் போற்றுகின்றன.

அனைத்தையும் படைத்துக் காத்தருளுகின்ற பெருமான் பிற்பலத் தலங்களில் தீர்த்தங்களாகவும் விளங்கி, தன்னில் நீராடுவோரின் பாவங்களைப் போக்கு கின்றார். அதே போல் ஊழிக் காலத்தில் பெருவெள்ள மாய்த் தோன்றி அனைத்தையும் தன்னுள் ஒடுக்கி, மீள உலகைப் படைக்கின்றார்.

### கும்பேசுவரர் திருக்கோயில் :

ஒரு சமயம் யாவற்றையும் ஒடுக்கும் பிரளயக் காலம் வந்தது. அதனை முன்னமே உணர்ந்த நான்முகன் கயிலை மலையை அடைந்தான். அங்கு பெருமானைக் கண்டு குறையிறந்தனன் "பெருமானே! தயாளனே! உயிர்களைப் படைக்கும் வேதங்கள் முதலான மூலப் பொருட்களைப் பிரளய வெள்ளத்திலிருந்து காத்தரு ளுங்கள்!" என்று வேண்டினான். அவனிடமிருந்து வேதங் களைக் காக்கும் உபாயத்தை பெருமான் அருளினார்.

அதன்படி நான்முகன் உலகின் உத்தமத் தலங்களி லிருந்து மண் எடுத்து, அதனுடன் தேவாமிருதத்தினை விட்டுப் பிசைந்து , பின் அதனை ஒரு குடத்திலிட்டு அமிர் தத்தினால் நிரப்பினான். அதன் பின் வேத, ஆகம, புராணங்கள் முதலான அறிவுக்கருவிகளை அதிலிட்டு அதன் மேல் மாவிலைகளைப் பரப்பி கும்பத்தின் வாயி னைத் தேங்காயினால் மூடினான். பிறகு அக்குடத்தினை மகாமேரு மலையின் கண் ஒரு உரியில் தொங்க விட் டான். அப்போது பிரளயக் காலம் வந்தது. பிரளய வெள் ளத்தின் சீற்றத்தில் யாவும் பெருமானிடம் ஒடுங்கின. உரியில் தொங்கவிடப்பட்டிருந்த அமுதக் கும்பம் தென் திசை நோக்கி அடித்துச் செல்லப்பட்டது. அவ்வேளை யில் ஒரு புண்ணிய இடத்தில் மேற்கொண்டு நகராமல் நின்றது.

அங்கு பெருமான் வேடுவவுருக் கொண்டு எழுந் தருளி பாணம் தொடுத்தார். அப்பாணம் சரியாகப் பாய்ந்து சென்று அமுதக் கும்பத்தினைத் துளைக்க, அது உடைந்து நாற்புறமும் சிதறிற்று – வேடுவனாய் வந்த பிரான் அமுதக் குடத்திலிருந்து விழுந்த மண்ணை, ஓர் லிங்கமாய்ப் பிடித்து தாபித்து பின் அதனுள் மறைந்தார். பெருமான் தாபித்த அந்த லிங்கம் கும்பேசுவரர் எனும் திருப்பெயரால் அழைக்கப்படுகிறது. அமுதக் குடம் வந்து தங்கியதால் அத்தலத்திற்கு குடமூக்கு எனும் திருப்பெயர் வழங்கப்படுகிறது. குடத்திலிருந்து சிதறிய அமுதம் புண்ணிய தீர்த்தக்குளமாயிற்று. சிதறிய ஏனைய பொருட்களெல்லாம் அருள் பெறும் மூர்த்தங்களாக உருமாறின. பெருமான் வேடுவவுருக்கொண்டு வந்த தைப் பற்றி திருஞானசம்பந்தர் தேவாரத்தில் அழகாக எடுத்துரைக்கின்றார்.

*"முப்பூர் நலிய நெதியார் விதியாய் முன்னே*
*அனல்வாளி*
*கோப்பார் பார்த்தன் நிலைகண்டு அருளும்*
*குழகர் குடமூக்கில் தீர்ப்பார்....."*

என்பது பாடலாகும். அர்ச்சுனன் தவநிலை கண்டு அவ னுக்கு வேடுவ உருவில் அருளிய பெருமான், அவ்வுரு வந்தாங்கி குடமூக்கில் எழுந்தருளியதை விளக்கியுள் ளது இன்புறத்தக்கதாகும். பிருதிவி லிங்கமாக கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ள கும்பேசுவரப் பெருமானை திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர் ஆகியோர் பாடி யுள்ளனர். இங்கு எழுந்தருளியுள்ள இறைவி பெயர் மங்களாம்பிகை என்பதாகும். இத்திருக்கோயிலில்

இலட்சுமி நாராயணப் பெருமாள், சட்டை நாதர், வீர பத்திரர், அஷ்ட லிங்கங்கள், சப்த கன்னியர், பிட்சாடனர், கிராதமூர்த்தி முதலான சந்நிதிகளும் உள்ளன.

### மகாமக தீர்த்தம் :

குடத்திலிருந்த அமுதம் விழுந்த இடமானது மகாமக தீர்த்தக் குளமாக விளங்கி வருகிறது. இறைவன் பற்பலத் தீர்த்தங்களில் விளங்கி, தன்னில் நீராடுவோரின் பாவங்களைப் போக்குகின்றார். பன்னிரு ஆண்டுகட்கு ஒரு முறை வரும் மகாமகத் தன்று நீராடுவது பிறப்பில்லா பெருவாழ்வினை அளிப்பதாகும்.

ஆண்டு தோறும் மாசி மகத்தன்று கங்கை, சரயு, யமுனை, சரஸ்வதி, சிந்து, நர்மதை, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி ஆகிய ஒன்பது நதிகள் மகாமக தீர்த்தத்தில் கலந்து தங்களது பாவங்களைப் போக்கிக் கொள்கின்றன. இதனை விளக்கும் வண்ணம் நவநதிக் கன்னியர் சந்நிதி, இத்தீர்த்தக் குளத்திற்கு வட கரையில் அமைந்துள்ள காசி விசுவநாதர் திருக்கோயிலில் உள்ளது.

இத்தீர்த்தத்தில் அமாவாசை, பௌர்ணமி, மாதப் பிறப்பு, உத்தராயணம், தட்சணாயணம், சித்திரை விசு, ஐப்பசி விசு, சுக்கிரவாரம், கார்த்திகை நாள், மாசி மகம், சிவராத்திரி ஆகிய காலங்களில் நீராடுவது உத்தமமாகும். இத்தீர்த்தக் கரையினைச் சுற்றிலும் பிரம்மதீர்த்தேசம், முகுந்தேசம், தனேசம், ரிஷபேசம், பானேசம், கோனேசம், பக்தேசம், பைரவேசம், அகத்தீசம், வியாசகேசம், கங்காதரேசம், பிரமேசம், முத்த தீர்த்தேசம் முதலான ஆலயங்கள் உள்ளன.

### குடந்தைக் கீழ்க் கோட்டம் :

இத்தலம் கும்பகோணத்தின் கீழ்த்திசையில் பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ளது. அமுத கலசத்திலிருந்து விழுந்த வில்வம் சிவலிங்கமான தலம் இதுவாகும். மூலவர் பெயர் நாகேசுவரர். இறைவி பெயர் பெரிய நாயகி என்பதாகும். இங்கு தேர் வடிவத்தில் பேரம்பலம் என்னும் நடராசர் சபை உள்ளது.

அமுதக் கலசம் வைத்திருந்த உரி சிவலிங்கமான தலம் இதுவாகும். சிவகேசம் (சிக்கம் – உரி) எனவும் இத்தலம் வழங்கப்படும். திருஞானசம்பந்தரால்





பாடல் பெற்றது. சோமன் எனும் சந்திரன் வணங்கியதால் இவ்விறைவனுக்கு சோமேசர் எனும் திருப்பெயர் வழங்கப் படுகிறது. இறைவி பெயர் சோமசுந்தரி எனும் தேனார் மொழியாள் என்பதாகும்.

### காசி விசுவேசர் திருக்கோயில் :

இத்திருக்கோயில் மகாமக குளத்திற்கு, வடகரையில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. நவ நதி கன்னியர் நீராடி வழிபட்டுத் தூய்மைப் பெற்ற தலம்.

### அபிமுத்தீசுவரர் திருக்கோயில் :


அமுதக் குடத்திலிருந்து விழுந்த தேங்காய் சிவ லிங்கமான தலம். இது மகாமக குளத்தின் கீழ்க்கரையில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. இறைவன் பெயர் அபிமுத்தீசுவரர். இறைவி பெயர் அமுத வல்லி என்பதாகும்.

### கௌதமேசம் :

அமுதக் குடத்தின் பூணூல் சிதறி சிவலிங்கமான தலம். கௌதம முனிவரால் வழிபடப் பெற்ற தலமாகும். மகாமகக் குளத்திற்குத் தென்மேற்கே கிழக்கு நோக்கிய அம்பாள் தெற்கு நோக்கியும் எழுந்தருளியுள்ளனர். வியாச முனிவரால் வழிபடப் பெற்றது. திருவாரூர் தேரழகு, விரிஞ்சிபுரம் மதிலழகு, வேதாரண்யம் விளக்கழகு என்பது போல் கும்பகோணம் கோயிலழகு என்று சொல்லும் வழக்கால், இப் பகுதியில் அமைந்துள்ள கோயில்களின் சிறப்புகளை அறியலாம்.

எண்ணிலாக் கோயில்களைக் கொண்ட இப்பதியில், மாசி மக நன்னாளில், மகாமகத் தீர்த்தத்தில் நீராடி, கும்பேசுவரரையும் இதர திருக்கோயில்களையும் தரிசித்து வாழ்வில் எல்லா நலங்களும், வளங்களும் பெறுவோமாக.

# குடை வள்ளல்



திரு. டி. பூபதி ராவ்,
காஞ்சிபுரம்.

ஆழ்வாரது வள்ளலான எம்பெருமான் கொடை வள்ளல் மட்டுமல்ல, அவனைக் "குடை வள்ளல்" என்றும் கூறலாம்.

எப்போதும் கொடுக்கையிலே ஒருப்பட்டகையினனாய் வாரி வழங்கிக் கொண்டிருக்கிறான் மாவலி. அவனை *''வாட்டமிலா வண்கை மாவலி''* என்கிறார் ஆழ்வார். அவனது வேள்விக்குக் குடை பிடித்து யாசகனாய்ச் செல்கிறான் வாமனன். கொடுத்த மாவலியை வள்ளல் என்று கூறாத ஆழ்வார், வாமனனை, *''வள்ளலேயோ வையம் கொண்ட வாமனாவோ''* என்று போற்றுகிறார்.

அவன் கொடைவள்ளல்; இவன் குடை பிடித்த வள்ளல். தன்னிடம் இரந்த இந்திரனுக்காகத் தான் இரப்பாளனாகித் தன் பேறாக நினைத்து உபகரித்த வாமனனை "வள்ளல்" என்று கூறாமல் எம்பெருமானது சொத்தைத் தன்னதாக நினைத்து அவனுக்கே தானம் செய்த மாவலியையோ "வள்ளல்" என்பது?

*''இரந்தார்க்குக் கொடுக்கைக்காக இரக்குமவன்''* என்றும், "இந்திரனது கண்ண நீரை மாற்றுவதற்காக தன்னை இரப்பாளனாக்கினானே" என்றும் வியக்கிறார் நம்பிள்ளை. வையம் கொள்ள வாமனனாக வந்த எம்பெருமான் வையம் கொண்டவாறே த்ரிவிக்கிரமனாக வளர்ந்தான். விலக்குகையில்லாமையே பற்றாசாகக் கொண்டு, எல்லாருடைய தலைகளிலும் திருவடியை வைத்து, "ஓங்கி உலகளந்த உத்தமன்" என்று பேர் படைத்த வள்ளல் த்ரிவிக்கிரமன்.



## ஆகாசமே குடை:

நக்ஷத்திரங்களே அந்தக் குடைக்குக் கம்புகள். சந்திரனும், சுக்ரனும், கம்புகளையும், நடுத்தடியையும் இணைக்கும் குழல்கள்; இந்த ஆகாசமாகிற பெரிய குடையைத் தாங்கி நிற்கும் பெரிய நடுத்தடிதான் விண்வரைக்கும் வளர்ந்து நிற்கும் த்ரிவிக்ரமனாம். ஆக, இந்த த்ரிவிக்ரமனும் குடையைத் தாங்கிய வள்ளலாகி விட்டான்.

*''மீனென்னும் கம்பில் வெறியென்னும் வெள்ளி வேய்*
*வானென்னும் கேடிலா வான் குடைக்கு - தானோர்*
*மணிக்காம்பு போல் நிமிர்ந்து மண்ணளந்தான் நங்கள்*
*பிணிக்காம் பெருமருந்து பின்''.*

–பெரிய திருவந்தாதி.

என்பது ஆழ்வார் வாக்கு.



# உணவால் உண்டான இரத்தம்

ஸ்ரீகண்ணபிரான் சகாயத்தால் மகாபாரதப் போர் ஒரு வழியாக நடந்து முடிந்தது. பாண்டவர்களின் பாசறையில் வெற்றியைக் கொண்டாடினர். ஸ்ரீகண்ண பிரான் மட்டும் மிகவும் கவலையுடன் இருந்தார். ஏன் என்றால் இந்த மண்ணுலகில் தலை சிறந்த கொடை யாளி கர்ணன் மறைந்து விட்டானே என்று வருந்திக் கொண்டிருந்தார். இதே சமயத்தில் பீஷ்மர் சூரியன் வட திசையை அடையும் உத்தராயண புண்ணிய காலத் தில் தம் உயிர் விடுவதற்காக அம்பு படுக்கையின் மேல் படுத்துக் கொண்டிருந்தார். பீஷ்மரின் உயிர் போவதற்கு ஊசலாடிக் கொண்டிருந்தபோது சகல சாஸ்திர தர்மங் களைத் தெரிந்த ஒரு மகானை இந்த மண்ணுலகம் இழக்கப் போகின்றதே என்று எண்ணி கண்ணன் வருந்திக் கொண்டிருந்தார்.

பீஷ்மரின் தர்ம உபதேசம் இந்த உலகில் என்றும் அழியாப் புகழுடன் இருக்க வேண்டும் என்ற எண் ணத்தால், கண்ணன் தர்மர் மற்றும் தம்பிமார்க ளையும் திரௌபதியோடும் பீஷ்மரைக் காண குரு க்ஷேத்திரம் சென்றார். பாண்டவர்களும் திரௌபதியும் தர்மாத்மாவான அம்மகானைக் கண்டு வணங்கினார் கள். பீஷ்மர் பாண்டவர்களிடம் தர்மம், வர்ணம், ஆசிர மம், மக்கள் கடமை போன்ற கேள்விகளுக்கு பதில் சொல் லிக் கொண்டே வந்தார். பீஷ்மரின் உபதேச வார்த்தை களைக் கேட்ட திரௌபதி திடீரென்று சிரித்து விட்டாள்.




**செல்வி. எஸ். ஜெயஸ்ரீ**
எட்டாம் வகுப்பு - (ஏ) பிரிவு,
அரசினர் உயர் நிலை பள்ளி,
சித்தலம்பட்டு, இளையாண்டிபட்டி.


அனேக தர்மங்களைப் பற்றி பேசிய பீஷ்மர் ஏனம்மா? நான் சொன்னதைக் கேட்டு நீ சிரித்தாய் நான் தர்மத் திற்கு மாறான வார்த்தைகளை ஏதேனும் சொல்லி விட்டேனோ? என்று கேட்க, திரௌபதி மிகவும் வெட்கப் பட்டு தலை குனிந்தாள். சுவாமி! அடியேன் அறியாமல் நகைத்து விட்டேன். என் மீது தவறுதான் என்னை மன் னித்து விடுங்கள் சுவாமி என்றாள். பீஷ்மர், திரௌபதியின் பதிலால் திருப்தி அடையவில்லை. குழந்தாய்! எந்த பெண்மணியும் பெரியவர் களைக் கண்டால் மிகவும் பணிவாக இருப்பர். நீயோ நற்சிந்த னையுள்ள குணவதி, கற்பிலும் சிறந்தவள் என்பதை நான் நன்றாக அறிவேன். அப்படி யிருக்க நீ சிரித்த காரணத்தை சொல் என்றார்.

திரௌபதி கண்ணீர் பெருகி இரண்டு கண்களையும் மூடிக் கொண்டாள். சுவாமி! அடியாளை மன்னித்து விடுங்கள் என்று இரு கைகளையும் கூப்பிக் கொண்டு, தங்கள் கட்டளையை நான் மீறுவதில்லை. இருந்தாலும் சொல்கிறேன். என் மீது தயவு செய்து கோபம் கொள்ளல் வேண்டாம் என்றாள்.

தர்மத்திற்கு இவ்வளவு அர்த்த விசேஷங்களைச் சொன்ன ஒரு மகான், கௌரவர்கள் சபையிலே துச்சாதனனால் என்னை மானபங்கப்படுத்தப்பட்டபோது, உங்கள் தர்மம், ஞானம் எங்கே போயிற்று. உங்களால் முடியாது என்றாலும், மற்றவர்களை விட்டு தடுத்தி நிறுத்தி இருக்கலாம். அப்படியும் நீங்கள் செய்ய வில்லை. அந்த சமயத்தில் ஸ்ரீகண்ணபிரான் வந்து எனக்கு உதவவில்லை என்றால் என் கதி என்னவாயிருக்கும்? என் மானம் சபையிலே பரி போய்விட்டிருக்கும். அப்படியிருக்க இவ்வளவு தர்ம உபதேசங்களை பண்ண நீங்கள் ஏன் மௌன மாயிருந்தீர்கள்? என்பதனை எண்ணி எனக்கு சிரிப்பு வந்து விட்டது என்றாள். அமைதியாக இருந்த பீஷ்மர், திரௌபதி! நீ கேட்ட கேள்வி சரியானது தான். உன்னை மன்னிப்பதற்கு எனக்கு அருகதை இல்லை தான். இருந்தாலும் துஷ்டனான துரியோதனனின் வீட்டில் உணவை நான் சாப்பிட்டு வந்தேன் அதன் காரணமாக என் உடம்பில் இருந்த உதிரம் என் புத்தியை மழுங்கச் செய்தது. இப்போது அர்ச்சுனன் எய்த அம்பு களால் என் உடலிலிருந்த அந்த கெட்ட இரத்தம் உடலை விட்டு வெளியேறி விட்டது. இந்த கடைசி நேரத்தில் நல்லவர்கள் சக வாசம் கிடைக் கப்பெற்றேன். அதனால் உங்களுக்கு தர்மத்தின் தத்துவங்களை உபதேசித்தேன் என்றார் பீஷ்மர்.

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.


## திருமழிசை ஆழ்வார் :

திருமழிசையாழ்வார் தை மாதம் மக நக்ஷத்ரத்தில் திருமழிசையில் அவதரித்தவர். இவர் அருளிய பிரபந்தங்கள் திருச்சந்த விருத்தமும் நான்முகன் திருவந்தாதியுமாகும்.

*அன்புடன் அந்தாதி தொண்ணூற்றாறுரைத்தான் வாழியே*
*அழகாரும் திருமழிசை அமர்ந்த செல்வன் வாழியே*
*இன்பமிகு தையில் மகத்து இங்குதித்தான் வாழியே*
*எழில் சந்த விருத்தம் நூற்றிருபதீந்தான் வாழியே*
*முன்புகத்தில் வந்துதித்த முனிவனார் வாழியே*
*முழுப்பெருக்கில் பொன்னி எதிர் மிதந்த சொல்லோன் வாழியே*
*நன்புவியில் நாலாயிரத்து எழுநூற்றான் வாழியே*
*நங்கள் பத்திசாரர் இரு நற்பதங்கள் வாழியே*

(பதவுரை) அன்புடன் – உலக மக்களுடன் அன்போடு, அந்தாதி – அந்தாதித் தொடையில், தொண்ணூற்றாறு உரைத்தான் – தொண்ணூற்றாறு பாசுரங்களைக் கொண்ட நான்முகன் திருவந்தாதியை அருளினன். அழகாரும் – அழகு நிறைந்த, திருமழிசை – திருமழிசை என்னும் நகரில், அமர்ந்த – பொருந்தி இருந்த, செல்வன் – வாசிக கைங்கர்ய செல்வத்தை உடையவன். இன்பமிகு – இனிமை மிகுந்த, தையில் – தை மாதத்தில், மகத்து – மகம் என்னும் நக்ஷத்ரத்தில், இங்கு உதித்தான் – திருமழிசையில் உதித்தவன். எழில் சந்த விருத்தம் – அழகிய சந்தக்குறிப்பின்படி அமைந்த செய்யுள், நூற்றிருபது ஈந்தான் – நூற்று இருபது பாசுரங்கள் கொண்ட திருச்சந்த விருத்தம் என்னும் பிரபந்தத்தை அருளியவன். முன்புகத்தில் – துவாபர யுகத்தில், வந்துதித்த – வந்து தோன்றிய, முனிவனார் – எம்பெருமானை மனனம் செய்பவர். முழுப்பெருக்கில் – முழுமையாக நிறைந்த வெள்ளத்தில், பொன்னி – பொன்னி என்னும் காவிரி நதியில், எதிர் மிதந்த – எதிர்த்து வந்த, சொல்லோன் – சொல்லான பிரபந்தத்தை உடையவன். நன்புவியில் – நல்ல பூமியான இந்த உலகில், நாலாயிரத்து எழுநூற்றான் – 4700 வருடங்கள் வாழ்ந்தவர். நங்கள் பத்திசாரர் – நம்முடைய பக்தி சாரரான திருமழிசையாழ்வார், இரு நற்பதங்கள் – இரண்டு அழகான திருவடிகள், வாழியே – வாழ வேணும்.

(சிறப்புரை) (அன்புடன் அந்தாதி) திருமழிசையாழ்வார் அன்புடன் அருளிய பிரபந்தம் நான்முகன் திருவந்தாதி. அன்பாவது – முதல் பாசுரத்திலேயே *“யான் முகமாய் அந்தாதி மேலிட்டு அறிவித்தேன். ஆழ்பொருளைச் சிந்தாமல் கொண்மினீர் தேர்ந்து”* என்று தன் அன்பை வெளியிட்டருளினார். இவ்விடத்தில் உரையாசிரியரான பெரியவாச்சான்பிள்ளை “நாராயணன் முதலில் பிரமனைப் படைத்தான். பிரமன் ருத்ரனைப் படைத்தான் என்ற பொருளை தானே அனுபவித்தால் ஸம்ஸாரிகள் துன்பப்படுவரே என்று செம்பிலும் கல்லிலும் வெட்டுமாபோலே



பிரபந்தத்திலே இட்டு இதுக்கு பிரதானமாய் "அறிவித்தேன்" என்று உரைப்பர். அந்தாதியாவது – அடிதோறும் இறுதிக்கண் நின்ற சீரும் அசையும் எழுத்தும் மற்றை அடிக்கு ஆதியாகத் தொடுப்பதாகும். சொல் தொடை அந்தாதியாக 96 பாசுரங்களைக் கொண்டது நான்முகன் திருவந்தாதி. இப்பிரபந்தத்தில் *''நான்முகனை நாராயணன் படைத்தான்''* என்று தொடங்கி இறுதியில் *''இனி அறிந்தேன் ஈசர்க்கும் நான்முகற்கும் தெய்வம்''* என்று பகவதநுபவத்துக்குத் தடையான பிற தேவதைகளிடத்தில் மேன்மை புத்தி கூடாமையைச் சொன்னது காணலாம். *''வேதச் செழும் பொருள் நான்முகன் தொண்ணூற்றாறு பாட்டும்''* என்று உரைப்பர் வேதாந்த தேசிகர்.

(அழகாரும் திருமழிசை) – திருமழிசைக்கு அழகாவது பெருமை பொருந்திய சந்தன மரங்கள், கறுத்த அகில் கட்டைகள், மணம் மிக்க கோங்கு மரங்கள் ஆகியவற்றின் பரிமளம் வீசப்பெற்றதாய், பெரிய பிராட்டியார் மிக்க ஆசையுடன் பொருந்தி வாழப் பெற்றதாகும். இது பற்றியே திருக்கச்சி நம்பிகள், *''கருச்சந்தும் காரகிலும் கமழ் கோங்கு மணநாறும் திருச்சந்தத்துடன் மருவும்''* என்று திருச்சந்த விருத்த தனியனில் சுவைபட உரைப்பது காண்க. மேலும் *''மொய்பூ மழிசை''* என்ற தொடரில் மழிசைக்கு அடைமொழியாக "மொய்பூ" – அழகிய பூ என்று சொல்லி, பூக்கள் நிரம்பியதால் மிக்க அழகுடையதாகும். மணவாள மாமுனிகள் உபதேச ரத்தின மாலையில் இவ்வாழ்வார் அவதரித்த ஊரைக் கொண்டாடும் போது "மன்னு திருமழிசை" என்றும் "புகழ் மழிசை" என்றும் கொண்டாடுவர். மன்னுதலாவது – நிலைபெற்று இருப்பது. திருமழிசைதான் ஸ்ரீஜகந்நாதப் பெருமாளுடையவும் ஆழ்வாருடையவும் ஸம்பந்தம் மாறாதே நித்யமாய்ச் செல்லுகையாலே மஹீஸாரக்ஷேத்ரம் என்னும்படி பூமியை நொய்தாகப் பண்ணும்படி இருப்பதான திருமழிசை என்றும், புகழ் மழிசையாவது – *''உலகு தன்னை வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர்மழி சையே வைத்தெடுத்த பக்கம் வலிது''* என்ற புகழையுமுடைய திருமழிசை என்பர் பிள்ளைலோகம் ஜீயர். இதனால் அழகாரும் திருமழிசை எனப்பட்டது. (அமர்ந்த செல்வன்) – பேயாழ்வாரால் திருத்தப்பட்டு மந்த்ர உபதேசம் பெற்ற இவ்வாழ்வார் பரம வைஷ்ணவராய்த் திருமழிசையில் அமர்ந்து யோக நிலையில் திருமகள் கேள்வனை தியானிக்கும்படியான செல்வனானார்.

(இன்பமிகு தை) – இன்ப மிகுதியாவது ஆனந்தம் நிரம்பியிருக்கை. பரம விரக்தர்களான திருமழிசையாழ்வாரும், எம்பாரும், கூரத்தாழ்வானும் அவதரித்தது தை மாதமாகையால் ஆனந்தம் நிரம்பியபடி மேலும் மணவாள மாமுனிகள் உபதேச ரத்தின மாலையில் திருமழிசையாழ்வார் பிறந்த மாதம், நக்ஷத்ரம் ஆகியவற்றைக் கொண்டாடும் போது, *''தையில் மகம் இன்று தாரணியீர் ஏற்றம் இந்தத் தையில் மகத்துக்குச் சாற்றுகின்றேன் துய்யமதி பெற்ற மழிசைப் பிரான் பிறந்த நாளென்று நல்தவர்கள் கொண்டாடும் நாள்''* என்பர். அதாவது "தை ஒரு திங்களும்" என்று ஆண்டாள் கொண்டாடும்படியான ஏற்றமுடைய புஷ்ய மாதம். தூயதான ஞானத்தை ஸர்வேச்வரன் அருளாலே மயர்வற மதிநல மருளப் பெற்றவராய் திருமழிசைக்குத் தலைவராய் ஆழ்வார் அவதரித்த திருநக்ஷத்ரம் என்று நல்ல தவத்தை உடையவர்களாலே கொண்டாடப்படும் நாள் என்பதால் "இன்ப மிகு தை" என்றபடி. மேலும் "நல்தவர்கள் கொண்டாடும் நாள்" என்றது பிறந்த பின் மறந்திலேன் என்று பகவத் ஸம்பந்த அறிவுடைய பிறவியையன்றோ இவர் பிறவியாக அருளிச் செய்தது "பிறந்த நாள்" என்று. இப்படி அவதரித்த விசேஷமான திருநக்ஷத்ரம் என்று சிறந்த அறிவுடையவர்களால் அந்த எண்ணத்தோடே கொண்டாடப்படுவதாயிருக்கும். அதனால் இன்பமிகுதியைச் சொன்னபடி.

(எழில் சந்த விருத்தம்) – பாடலைக் குறிக்கும் சொல் விருத்தமாகும். வடமொழியில் "வ்ருத்தம்" என்ற சொல்லே தமிழில் விருத்தமாயிற்று. சந்த விருத்தமாவது தமிழ் இலக்கணத்தில் நான்கு வகைப் பாவிற்கும் துறை, தாழிசை, விருத்தம் என்ற மூன்று வகை இனம் உண்டு. இனிய ஓசையால் அமைந்த விருத்தமே சந்த விருத்தமாகும். இந்த ஆழ்வார் அருளிய திருச்சந்த விருத்தத்துக்கு எழிலாவது ஒன்று முதல் ஆறு சீர்கள் மாச்சீர்களும், ஏழாம் சீர் விளச்சீருமாய், கழிநெடிலடி நான்கு கொண்ட ஏழுசீர் ஆசிரிய விருத்தமாக அமைந்ததாகும். *''தான தான தான தான தான தான தான்னா''* என்று இந்தப் பிரபந்தத்துக்குப் பெரும்பாலும் சந்தக்குழிப்பாகும். மேலும், இவ்வாழ்வார் தாம் அருளிய திருச்சந்த விருத்தத்தில் நூற்றிருபது பாசுரத்தில் *''தாதுலாவு கொன்றை மாலை துன்னு செஞ்சடைச் சிவன் நீதியால் வணங்கு பாத''* என்றும் *''போதில் மங்கை பூதலக்கிழத்தி தேவி''* என்று தொடங்கி *''வேதநூல் ஓதுகின்றது உண்மை அல்லதில்லை மற்றுரைக்கிலே''* என்றும், *''உள்ள நோய்கள் தீர்மருந்து வானவர்க்கு அளித்த எம் வள்ளலாரை அன்றி மற்றோர் தெய்வம் நான் மதிப்பனே''* என்றும்

பலபடியாக பரத்துவத்தை வெளியிட்ட அழகு குறிப்பிடத் தக்கதாகும். இது தன்னையே *"மெய்ம்மிகுத்த திருச்சந்த விருத்தப்பாடல்"* என்பர் வேதாந்த தேசிகர்.

(முன்புகத்தில் வந்துதித்த முனிவனார்) – திவ்யசூரி சரிதத்தில் கூறியபடியே முன் யுகமான துவாபர யுகத்தில் 862900 வருடங்கள் கழிந்த பின்பு ஸித்தார்த்தி வருடத்தில் அவதரித்தவர் இவ்வாழ்வார். கலி யுகத்துக்கும் துவாபர யுகத்துக்கும் இடையில் உள்ள ஸந்தியில் 7000 வருடங்கள் பூமியில் வாழ்ந்தார் என்றும், எல்லா சாஸ்த்ரங்களையும் நன்கு கற்று மறுபடியும் மறுபடியும் ஆராய்ந்ததாலும் நாராயணன் ஒருவனே தியானிக்கத் தக்கவன் என்று பிரமாணங்கள் கூறுவதாலும் இவ்வாழ்வார் திருவல்லிக் கேணியில் 700 வருடங்கள் யோகத்திலிருந்த முனிவரானார். திருக்குடந்தை எம்பெருமானுடைய ஆச்சர்யமான திருநிறைந்த திருமேனியை தமது இதய கமலத்தில் இடைவிடாது அன்னம் முதலான உணவுகளை உட்கொள்ளாதவராய், பால் ஒன்றையே அருந்துபவராய், பகவதநுபவத்தையே உணவாகக் கொண்டவராய் அன்போடு தியானித்ததாலே முனிவரானார் என்று பிரபந் நாம்ருதம் கூறும்.

(முழுப்பெருக்கில் பொன்னி) – பொன்னி என்பது காவிரி நதியின் மறு பெயராகும். *"கோள்நிலை திரிந்து கோடை நீடினும் தான் நிலை திரியாத்தண் தமிழ்ப்பாவை"* என்று மணிமேகலை காவிரித்தாயைப் போற்றும். மிகப் பழமையான காவிரி பாய்ந்து வளம் சிறக்கும் நாடுகளிலெல்லாம் பொன் கொழிக்கும். இது பற்றியே காவிரிக்குப் பொன்னி என்ற பெயரும் உண்டு. இவ்வாழ்வார் *"பொன்னிசூழ் அரங்கமேய"* என்றும், தொண்டரடிப் பொடியாழ்வார் *"பொன்னிசூழ் திருவரங்கா"* என்றும் கூறுவர். திருமங்கையாழ்வாரும் *"மின்னு சோதி நவமணியும் வேயின் முத்தும் சாமரையும் பொன்னும் பொன்னி கொணர்ந்து அலைக்கும்"* என்கிறபடியே பொன்னியான காவிரியானவள் முழுப் பெருக்கில் வரும்போது மிக்க ஒளியுடையதும் தூய்மையானதுமான நவரத்தினங்களையும், மூங்கில் உதிர்த்த முத்தென்ன, சாமரையென்ன, பொன்னென்ன இவற்றை எடுத்துக் கொள்ளுங்கோள் என்று புள்ளம்பூதங்குடியில் விளங்குவதை அநுபவிப்பர். திருத்தெற்றியம்பலத்தில் ஓடும் பொன்னியைப் பற்றிச் சொல்லும் போது "பாளைகளாலே மிகுந்ததாய், உயர்ந்து இருந்துள்ள தென்னை மரங்களிலிருந்தும் பழங்களானவை தன் மேல் விழ அதனாலே உதிர்ந்த மாம்பழங்களைக் கும்பலாகச் சேர்த்து உருட்டிக் கொண்டு வரும் நீரையுடைய பொன்னி" என்பர் பெரியவாச்சான் பிள்ளை. இதனால் பொன்னியின் முழுப் பெருக்கின் பெருமை சொல்லப்பட்டது. (எதிர் மிதந்த சொல்) – இவ்வாழ்வார் திருக்குடந்தை எம்பெருமானைச் சேவிக்கச் சென்றார். அவ்வூரில் உள்ள பிற மதத்தவர் ஆழ்வாருடைய நூற்றுக்கணக்கான பிரபந்தங்களைக் கண்டு பொறாமை கொண்டு பொன்னியின் வெள்ளத்தில் எறிந்து விட்டனர்.

மற்ற பிரபந்தங்களெல்லாம் வெள்ளத்தில் மிதந்து செல்ல, நான்முகன் திருவந்தாதி, திருச்சந்தவிருத்தம் ஆகிய இரு பிரபந்தங்கள் மட்டும் வெள்ளத்தை எதிர்த்து வந்து ஆழ்வார் திருவடிகளை அடைந்தனவாம். உலகம் உய்ய இவ்விரு பிரபந்தங்களுமே போதும் என்று நிச்சயித்து ஆழ்வார் இவற்றை ஆசையுடையோர்க்கு உதவி செய்து உலகை உய்யக் கொண்டார். இது பற்றியே அவருடைய சொல்லின் பெருமை விளங்கியபடி.

(நன்புவியில்) – புவி – பூமி. பாரத பூமி. பூமிக்கு நன்மையாவது – கர்ம பூமியாய் சுவர்க்க மோக்ஷங்களுக்கு ஸாதநாநுஷ்டானம் பண்ணுகைக்கு உரிய இடமாகும். மேலும் இந்தப் பாரத பூமி மிக்க புண்ணியத்தை ஸம்பாதிக்கக் காரணமாகையாலே தேவர்களும் ஆசைப்படும் படியான பிரிதொன்றுமில்லாச் சிறப்புடையதாகும்.

*"ப்ராப்ஸ்யாம தந்யா கலு தே மநுஷ்யா யே பாரதே நேந்த்ரிய விப்ரஹீநா"* என்று ஸ்ரீவிஷ்ணு புராணம் கூறியபடியே சுவர்க்க மோக்ஷங்கள் இரண்டையும் அடைவதற்கு வழியான இப்புவியில் தேவனாம் தன்மையை விட்டுப் போய் பிறக்கிறார்கள் தந்யர் என்று இப்புவியின் நன்மை சொல லப்பட்டது. மேலும் பயன் பெறும் சாதனங்களை ஒழிந்த கர்மங்களை பரமாத்மா வான விஷ்ணுவிடம் ஸமர்ப்பித்து நிர்மலனாய், அளவிடற்கரியவனானவன் பக்கலிலே ஜிதேந்த்ரியராய்க் கொண்டு இருப்பவர்கள் யாவர் சிலர் உளரோ, அவர்கள் மனிதரில் தந்யர் என்றும் கூறுவர். இதனால் புவியின் பெருமை சொல்லப்பட்டது. இவ்வாழ்வார் பல திவ்ய தேசங்களில் யோக நிலையில் பால் ஒன்றையே தாரகமாகக் கொண்டு நாலாயிரத்து எழுநூறு வருடம் பகவதநுபவம் செய்து வந்தார் என்பது குருபரம்பரா ப்ரபாவம், ப்ரபந்நாம்ருதம் ஆகிய நூல்கள் வாயிலாக அறியலாகும்.

(நங்கள் பத்திசாரர்) – நங்கள் – நம்முடைய வேற்றுமை உருபு மறைந்து "நங்கள்" என்று ஆயிற்று. பக்திசாரர் – பட்டர் என்னும் ஆசாரியர் ஆழ்வார்கள் பரமாக ***''பூதம் ஸரச்ச...''*** என்று அருளிய தனியனில் "பக்திஸார" என்றதற்கு பிள்ளைலோகம் சீயர் ***"பெறற் கரிய நின்னபாத பக்தியான பாசனம் பிறர்க்கரிய மாயனே எனக்கு நல்க வேண்டுமே''*** என்று திருச்சந்த விருத்தத்தில் எம்பெருமானிடம் பிரார்த்தித்து பக்தியைப் பெற்றதனால் இவ்வாழ்வாருக்கு பக்திஸாரர் என்று பெயர் வந்ததாகக் கூறுவர். மேலும் ***''பொன்னிசூழ் அரங்கமேய பூவை வண்ண''*** என்றன்றோ இவருடைய அவாவுக்கு விஷயம் இருப்பது என்பர்.

"பக்திஸாரர்" என்ற விருது பெற்ற வரலாறு – இவ்வாழ்வார் திருமழிசையில் திருமகள் கேள்வனை தியானித்துக் கொண்டு இருந்தார். ஒரு நாள் ருஷப வாகனத்தில் பார்வதியும் சிவபிரானும் ஆகாய மார்க்க மாய்ச் செல்லும்போது பார்வதி இவர் ஒளியைக் கண்டு, "இவர் யார்?" என்று கேட்க, சிவபிரானும் "இந்த மகாநு பாவர் நம் அடியவனாயிருந்து இப்போது நம்மை விட்டு நாராயணனுக்கு அடிமைப்பட்டிருப்பவர்" என்று சொன் னார். உடனே பார்வதியும் அத்தகைய பெரியவருக்கு நாமும் காட்சி தந்து ஏதேனும் வரம் அளித்துச் செல் வோம் என்று கூற, சிவபிரானும் பார்வதியுடன் ஆழ்வார் முன்பு தோன்றினார். அப்போது ஆழ்வார் பார்த்தும் பாராததுபோல் ஒரு கந்தல் துணியைத் தைத்துக் கொண்டு வீற்றிருந்தார்.

இதனைக் கண்ட சிவபிரான் "உனக்கு அருள் செய்ய வந்த நம்மை நீ அநாதரம் செய்வது தகுதியா" என்று கேட்க, ஆழ்வாரும் அவரால் ஆக வேண்டியது ஒன்றுமில்லை என்று தான் வாளா இருந்ததாகக் கூறி னார். அப்போது சிவபிரானும் தாம் வந்தது வீணாகக் கூடாது என்று விரும்பிய வரம் அளிப்பதாக நிர்பந்தமாகக் கேட்டார். ஆழ்வாரும் "வீடு பேறான பரமபதத்தை அருள வல்லீராகில் அருள்வீர்" என்றார். அதற்கு சிவபிரானும் அதைக் கொடுக்கவல்லவன் முகுந்தனே என்றும் வேறு வரம் கேட்கச் சொன்னார். பின்னர் புன்முறுவல் செய்து அந்த முக்தி பெற அனுட்டானத்துக்கு உறுப்பாக நீண்ட ஆயுளைத் தரவேணும் என்றார். அதுவும் கருமத்துக்கு அநுகுணமாக வரும் என்றும் அதனை வளரச் செய்ய தன்னால் ஆகாது என்றும் வேறு வரம் கேட்கச் சொன் னார். ஆழ்வாரும் இறுதியாக நகைத்துக் கொண்டு "நான் துணி தைக்கும் இந்த ஊசியின் பின்னே நூல் வரும்படி வரம் தாரும்" என்றார். இந்த பரிஹாஸ வார்த்தையைக் கேட்ட சிவபிரான் கோபம் கொண்டு நெற்றிக்கண்ணை திறந்து விட, அதைக் கண்ட ஆழ்வார் இந்திரன் போல் உடல் முழுவதும் கண் காட்டினாலும் பயப்படமாட்டேன் என்று சொல்லி, தனது வலது காலில் பெரு விரலிலுள்ள ஒரு கண்ணைத் திறந்து விட அதிலிருந்து ஒரு பெரும் தீ எழுந்து ஊழிக்கால அக்னியைக் காட்டிலும் பன்மடங்கு பெரிதாகி முக்கண்ணையும் சுடத் தொடங்கிற்று. அது கண்ட சிவபிரானுடைய சடையிலிருந்த கங்கை பல மேகக்கூட்டங்களை ஏவி மழை பொழியும்படி செய்தாள்.

அவ்வண்ணமே அந்த மேகங்களும் பொழித்த தனால் பெருவெள்ளம் ஏற்பட்டது. பரமபாகவதரான ஆழ்வார் சிறிதும் அசையாமல் எம்பெருமானை தியா னம் செய்து கொண்டிருந்தார். இதனைக் கண்டு வியந்த சிவபிரான் ஆழ்வாருக்கு "பக்திஸாரர்" என்ற விருது அளித்துக் கொண்டாடினார். (இருநற்பதங்கள்) – இரு பதங்களுக்கு நன்மையாவது – சீராமப்பிள்ளை என்னும் ஆசாரியர் அருளிய நான்முகன் திருவந்தாதி தனியனில் ***"மொய்பூ மழிசைப்பரனடியே வாழ்த்து"*** என்பதற்குச் சேர பிள்ளைலோகம்சீயர் ***''பிரபந்தத்தைச் சொன்ன திருமழிசையாழ்வார் திருவடிகளையே துதி செய்''*** என்கிறார்.

"மொய்பூ" என்பதை திருவடிக்கு அடைமொழி யாக்கி அழகிய திருவடி என்றும் கொள்ளலாம். மேலும் அந்தத் திருவடியானது ***"இடங்கொண்ட கீர்த்தி மழிசைக் கிறைவன் இணையடிப்போது''*** என்று அமுதனார் அருளியபடியே எல்லையற்ற அழகுடையது என்பர். எம்பெருமானாரும் ஆழ்வாருடைய அழகிய இரு நற் பதங்களை இதயத்திலே வைத்து தியானம் செய்வது பற்றி ***''இணையடிப் போது அடங்கும் இதயத்து இராமாநுசன்''*** என்று அமுதனார் சொல்லுவது அறியற் பாலதாகும். "பக்திசாரோ மஹாயோகீ" என்று நாரதீய புராணத்தில் சொல்லியபடியே இவ்வாழ்வார் திருநாரா யணபுரத்தின் அருகில் கரவோண கிராமத்தில் பக்திசார குகையில் தவம் செய்தார் என்பர். இப்படிப்பட்ட திருமழிசையாழ்வார் திருவடிகளையே மங்களாசாசனம் செய்து ஆழ்வார் எம்பெருமானிடத்திலேயே பரத்வ புத்தி பண்ணினாலும் நாம் ஆழ்வாரிடம் பரத்வ புத்தி பண்ணி அவர் நற்பதங்களை வாழ்த்துவோமாக.

வாழித்திருநாமம் வளரும்...

33





108 திவ்யதேச வைபவம்

# திருமணிக்கூடம்



உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

திருஇந்தளூர், தலைச்சங்கநாண்மதியம் போன்று, இதுவும் சந்திரனுக்கு அருளிய திவ்ய தேசம். தக்ஷினின் 27 மகள்களையும் மணந்த சந்திரன், ரோஹிணியின் பால் அதிக அன்பு வைக்க, அதனால் தக்ஷின் சாபத்துக்கு ஆளானான். அதனால், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கலையாக இழக்க, இங்கு வந்து புஷ்கரணியில் நீராடி, சாபம் நீங்கப் பெற்றான். இந்த எம்பெருமான், அதனால், மருத்துவனாகி நின்ற மாமணிவண்ணனாக வழிபடப் படுகிறான்.

| | |
|---|---|
| **பெருமாள்** | – திருமணிக்கூட நாயகன், வரதராஜன், கஜேந்திரவரதன், கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம். |
| **தாயார்** | – திருமாமகள் நாச்சியார், இந்த்ரா தேவி, பூதேவி |
| **தீர்த்தம்** | – சந்த்ர புஷ்கரணி. |
| **விமானம்** | – கனக விமானம், ப்ரஸன்ன விமானம். |
| **ப்ரத்யக்ஷம்** | – கருடன், சந்த்ரன். |
| **ஆகமம்** | – பாஞ்சராத்ரம். |
| **மங்களாசாஸனம்** | – திருமங்கை ஆழ்வார், |
| **சிறப்பு** | – காஞ்சி வரதனைப் போன்றே, இவரும் வரதன் எனப் போற்றப் படுகிறார். |

**த்யான ச்லோகம்**

*தேவ! ஸ்ரீமணிகூட நாயக ஹரி:தத்ப் ரேயஸீ சேந்திரா,*
*புண்யம் சந்த்ரஸரோ விமாநமபிதத் தத்ர ப்ரஸந்நாஹ்வயம் |*
*பக்ஷீசேந புராஸமஸ்த ஜகதாம் க்ஷேமாயஸாக்ஷாத் க்ருத:*
*பூர்வாம் போதி முகோ விராஜதி ரமா நீளாத ராஸங்கத: ||*

----

**பாசுரம்**

கருமகள் இலங்கையாட்டி பிலங்கொள்வாய் திறந்து தன்மேல்
வரும் அவள் செவியும் மூக்கும் வாளினால் தடிந்த எந்தை
பெருமகள் பேதை மங்கை தன்னொடும் பிரிவு இலாத
திருமகள் மருவும் நாங்கூர்த் திருமணிக் கூடத்தானே.

------

“ சேராது முன் செய்த தீவினை ; பின்செய்வதுவும்
வாராது இனி நுக மட நெஞ்சே! - நேராக்
குருமணிக் கூடத்து ஆனைக்கொம்பு பறித்தானைத்
திருமணிக்கூடத் தானைச் செப்பு.

(பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாசுரம்)

**நாமாக்கள்**

281. *ஓம் மந்த்ராய நம:*
(தியானிப்பவர்களைக் காப்பவனே)
*ஓம் தர்ம ஸேவ்யாயை நம:*
(நியாயமான வழியிலேயே சேவிக்கத் தக்கவளே)

## 64. சாஸ்த்திர நீதிகள் :

நச்யத்ய நாயகம் கார்ய:
தநைவ சிசு நாயகம் |
ஸ்திரீ நாயகம் நதோன் மந்த
நாயகம், பகு நாயகம் ||

எஜமானன் இல்லாத எந்த விஷயமானாலும் அது சோபிக்காது. ஒரு விசாரணையை பல பேர்கள் சேர்ந்து விசாரிக்கும் போது முடிவு பெறாதாம். பெண்களுக்கும், சிறுவர்களுக்கும்,பைத்தியக்காரர்களுக்கும் அவசியம் எஜமானன் இருந்து நிர்வாகம் செய்ய வேண்டும். எனவே அதிகாரிகள் இல்லாத காரியங்கள் கெட்டுப்போகும்!

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.

282. *ஓம் சந்த்ராம்சவே நம:*
(சந்திர கிரணங்களைப் போலக் குளிரச் செய்பவனே)
*ஓம் ஸுகுமார்யை நம:*
(மிகவும் மென்மையான திருமேனி உடையவளே)

283. *ஓம் பாஸ்கரத்யுதயே நம:*
(சூரிய ஒளி போன்று பிரகாசம் உள்ளவனே)
*ஓம் ஸபாவத்யை நம:*
(ஜ்ஞான ஒளி வீசும் நல்லோர் கூட்டங்களை உடையவளே)

284. *ஓம் அம்ருதாம்ஸூத் பவாய நம:*
(அம்ருத கிரணங்களை உடைய சந்திரனுக்குச் சமமானவனே)
*ஓம் பீமாயை நம:*
(அருள் இல்லாதவர் பயப்படும்படி இருப்பவளே)

285. *ஓம் பாநவே நம:*
(தானே, சூரியனைப்போல் பிரகாசிப்பவனே)
*ஓம் ப்ருஹ்மஸ்துதாயை நம:*
(பிரம்மனால் துதிக்கப்படுகிறவளே)

286. *ஓம் ஸசபிந்தவே நம:*
(களங்கம் உள்ளவர்களை அழிப்பவனே)
*ஓம் மத்யப்ரபாயை நம:*
(பகவானுக்கும், சேதனனுக்கும் இடையில் பகவானுக்குச் சேதன லாபமும், சேதனனுக்கு ஈஸ்வர லாபமும் உண்டாக வாய்ப்பாக, இருவராலும் விடவொண்ணாதபடி பிரகாசிப்பவளே)

287. *ஓம் ஸுரேச்வராய நம:*
(நல்லவர்கட்குத் தலைவனே)
*ஓம் தேவர்ஷிவந்திதாயை நம:*
(நித்ய ஸூரிகளால் துதிக்கப்படுகிறவளே)

288. *ஓம் ஔஷதாய நம:*
(ஸம்ஸாரம் என்கிற வியாதிக்கு மருந்தாக இருப்பவனே)
*ஓம் தேவபோக்யாயை நம:*
(ஜகத் ஸ்ருஷ்டி இவைகளால் லீலாரஸத்தை அனுபவிக்கும் பகவானுக்கும் போகரஸம் அளிப்பவளே)

289. *ஓம் ஜகதஸ்ஸேதவே நம:*
(உலகங்களை எல்லாம் கரை ஏற்றுபவனே)
*ஓம் மஹாபாகையை நம:*
(பகவானையும் மிஞ்சிய மஹிமை உடையவளே)

290. *ஓம் ஸத்யதர்ம பராக்ரமாய நம:*
(குணங்களும், பராக்ரமும் வீணாகாதவனே)
*ஓம் ப்ரதிக்ஞாயை நம:*
(அடியார்களைத் தண்டிக்க நினைக்கும் பகவானுக்கும் ப்ரதிகூலமான யுக்திகளை அறிந்திருப்பவளே)

*ஸ்ரீமதே ஸ்ரீ பூ. திருமாமகன் நாச்சியார் ஸஹித ஸ்ரீவரதராஜ பரப்ரஹ்மணே நம:1*

திவ்ய தேச வைபவம் வளரும்...

## சிறுவர் பகுதி விடைகள்

1. மத்வாச்சாரியார்.
2. ஸ்ரீவத்சாங்கர்.
3. இருபது.
4. உறையூர்.
5. கனிகண்ணன்.
6. தொண்டரடிப்பொடியாழ்வார்.
7. ஸ்ரீராமாவதாரம்.
8. நீலன்.
9. திருமங்கையாழ்வார்.
10. குலசேகர ஆழ்வார்.

தொகுப்பு : திரு. கே. ரங்கநாதாச்சாரியார், காஞ்சிபுரம்.




# ஆமையைப் போல் ஐந்தடக்கல் வேண்டும்

பகவத் கீதையானது நம் வாழ்வியல் நடை முறைக்கு அவசியமான ஒரு புத்தகமேயன்றி சிந்தாந் தமன்று. பகவத்கீதையில் கூறப்பட்டுள்ள செய்திகளில் சிலவற்றினை கடைபிடித்து அவ்வழியில் சென்றோமே யானால் பல நன்மைகள் கிடைக்கும். கீதாசார்யன் கீதை யில் சில செய்திகளை மிகவும் எளிமையான முறையில் விவரிக்கின்றார். அதுவும் அனைவருக்கும் புரியும் வித மாகவும் அமைந்துள்ளது. மானிடர் பாதுகாப்பாக இருக்க வேண்டுமெனில் ஒருமையுள் ஆமை போல் ஐந்தடக்கல் வேண்டும். அதாவது ஆமை ஆபத்து ஏற்படின் ஐந்து உறுப்புகளையும் ஓட்டினுள் பாதுகாப்பாக வைத்துக் கொள்வது போன்று நாமும் இருத்தல் நன்று என்று பகவத் கீதை போதிக்கின்றது. ஆமைகளுக்கு அவற்றின் உடல் மீது மிகவும் கடினமான ஓடு உண்டு. மானிடரும் தலைக்கு பாதுகாப்பாக தலைக்கவசம் உபயோகிக்கின்ற னறே, அதே போன்று ஆமைகளுக்கு சரீரம் முழுவதுக் கும் பாதுகாப்பாக பாதுகாப்பு அமைப்பு அமைந்திருக் கும். எப்பொழுதாவது அவற்றிற்கு ஆபத்து ஏற்படின் தன்னுடைய அவயவங்களை அந்த ஓட்டினுள் அடக்கிக் கொள்ளும். இந்தச் செயலானது சில விநாடிகளில் நடைபெறும். விலங்குகள் ஆமையை தாக்க முற்படின், அதன் ஓட்டின் மீதே தாக்குதல் நடைபெறும். அந்த ஓட்டி னுள் ஆமையானது பாதுகாப்பாகவே இருக்கும். பகவத் கீதையில் இந்த ஆமையை எடுத்துக்காட்டாக எதற்காக கொடுக்கப்பட்டுள்ளது என்பதை காண்போம்.

மானிடருக்கு பத்து இந்திரியங்கள் உள்ளன. அவற் றில் ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து ஞானேந்திரியங் களாகும். கர்மேந்திரியங்களின் வாயிலாக நாம் கர்மாக் களை செய்தும், ஞானேந்திரியங்களின் வாயிலாக தகவல்களைப் பெற்றுக் கொண்டும் உள்ளோம். கால் கள், கைகள், வயிறு, பிறப்புறுப்புகள், உடற்கழிவுகளை வெளியேற்றும் உறுப்புகள் இவையாவும் கர்மேந்திரி யங்களாகும். வெளி உலகப் பொருட்களைக் குறித்த அறிவை நமக்குத் தரும் உடல் உறுப்புகளான கண், காது, மூக்கு, நாக்கு, தோல் இவையாவும் ஞானேந்திரியங் களாகும். இந்த இந்திரியங்களின் வாயிலாக மானிடர் பலவிதமான போகங்களை அனுபவித்துக் கொண்டிருக் கின்றனர். கண்கள் மிகவும் அழகானவற்றை பார்க்க வேண்டுமென்றும், தொலைக்காட்சியை காண வேண்டு மென்றும் எண்ணுகின்றன. காதுகளும் இனிமையானவற் றையும், புகழ்ச்சிகளையும் கேட்க வேண்டுமென்று விரும்புகின்றன. நாக்கும் பலவிதமான ருசியுள்ள உணவுகளையும், பீட்சா, பர்க்கர், மிளகாய் பஜ்ஜி என பல வற்றினை விரும்புகின்றது. மூக்கும் நறுமணமும் மிக்க வாசனை திரவியங்களையும் நுகர வேண்டுமென விரும்புகின்றது. இவைபோன்றே கர்மேந்திரியங்களும் பலவிதமானவற்றை விரும்புகின்றன. கர்மேந்திரியங்கள் மூலமாக நம் உடலினை வளர்க்கின்றோம். ஞானேந்திரி யங்கள் வாயிலாக அறிவினை பெறுகின்றோம். இந்த இந்திரியங்களை நல்லவனவற்றிற்காக மட்டுமே உப யோகப்படுத்த வேண்டுமேயன்றி போகத்திற்கு அல்ல.

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஒ. சுரேஷ்.



போகத்திற்கு உட்படுவோர் நோயிற்கு ஆட்படுவர். தன் லட்சயங்களை சாதிக்க முடியாமல் தவிப்பர். லட்சயங்களை சாதிக்க வேண்டுமெனில் தேஜஸ்ஸுடன் இருத்தல் வேண்டும். ஆதலால்தான் கீதாசார்யனும் ஆமைபோல் ஐந்தடக்கல் வேண்டும் என்கிறார்.

*"யதா ஸம்ஹரதே சாயம் கூர்மோऽங்காநீவ ஸர்வச:|*
*இந்த்ரியாணீந்த்ரியார்தேப்யஸ் தஸ்ய ப்ரஜ்ஞா*
*ப்ரதிஷ்டிதாய|| "*

– பகவத் கீதை 2.58

"ஆமை எல்லா பக்கங்களிலிருந்தும் தனது உறுப்புக்களை உள்ளிழுத்துக் கொள்வது போன்று, யவன் ஒருவன் புலன் நுகர் பொருட்களிலிருந்து புலன்களை முற்றிலும் இழுத்துக் கொள்கிறானோ, அப்பொழுது அவனுடைய புத்தியானது நிலையாக இருக்கும்" என்று ஸ்ரீகிருஷ்ண பகவான் போதிக்கின்றார்.

ஆபத்து உள்ளது என்பதினை அறிந்தவுடனே பாதுகாப்பாக தன் ஓட்டினுள் ஆமையானது தன்னுடைய உறுப்புகளை இழுத்துக் கொள்ளும். அஃது போன்றே உயர்ந்த லட்சயங்களைக் கொண்டோர், சிறுமையான புலன்களின் போகங்களை விட்டு நீங்குவர். அவர்களின் புத்தியும் எப்பொழுதும் ஒரே நிலையில் இருக்கும். மகாபாரதத்தில் அர்ச்சுனனும் அதுபோன்றே செயல் புரிபவன். விடியற்காலையில் கமண்டலத்தில் நீர் நிரப்பி கொண்டு வர வேண்டும் என குரு கூறினால், அர்ச்சுனன் விடியற்காலையில் அனைவருக்கும் முன்பாக அப்பணியை செய்து முடித்து குருவிடம் அதிக பாடங்களைக் கற்றுக் கொள்வான். ஒருநாள் இரவு உணவு உண்ணும் வேளையில் காற்றினால் தீபம் அணைந்து விட, ஒளியின்றியும் கையில் உள்ள உணவு வாயினருகே செல்வதை கவனித்து இருளிலும் அம்பை எய்த முடியும் என்ற சிந்தனை அர்ச்சுனனுக்கு தோன்றிற்று. இவ்விதமாக அர்ச்சுனன் தன் சிறுவயதில் விளையாட்டுகளையும் விடுத்து இரவிலும் அம்பு எய்தலை கற்றுக் கொண்டான். ஆதலால் தான் அர்ச்சுனனின் பெயர் வரலாற்றில் நிலைத்திருக்கின்றது. அவனின் பெரும் ஆற்றலை கண்டே துரோணாசாரியாரும் "உன்னை உலகின் சிறந்த வில்வித்தை வீரனாக்குவேன்" என்று உறுதியேற்கிறார். யாரெல்லாம் தவம் புரிகின்றனரோ அவர்களுக்கெல்லாம் கண்டிப்பாக வரமானது கிடைக்கும். தவத்தின் முக்கிய நோக்கமே புலன் போகத்தை விட்டு விடுவதேயாகும். லட்சய சாதனைகளுக்குப் பிறகு கிடைக்கக் கூடிய அற்புதமான முடிவுகளை மனதில் நிறுத்தி மாணவர்களும், இளைஞர்களும் இந்திரிய போகங்களை விட்டு விடல் வேண்டும். பலவந்தமாக யாராவது இந்திரிய போகங்களை அனுபவித்தல் வேண்டும் என்று முயற்சித்தால் ஆமை போல் இந்திரியங்களை அடக்கி ஆளுதல் வேண்டும். புலன்கள் அவற்றின் உணர்ச்சிகளின் வழியே சென்றால் லட்சய பாதையில் செல்ல முடியாது.

அதாவது புலன்களை அவற்றின் போக்கில் விட்டு விட்டோமேயானால் மாணவர்களும், இளைஞர்களும் எவ்வித லட்சய சாதனையையும் பெற முடியாது. அதாவது ஸ்டீரிங்கை விடுத்து காரை ஓட்டுவது போலவும், குதிரைக்கு கடிவாளம் பூட்டாமல் தேரை ஓட்டுவது போன்றதாகும். அவ்வாறு செய்திடின் நிச்சயமாக கார் அல்லது தேர் குழியில் வீழும். ஆதலால் புலன்களை கட்டுக்குள் வைத்து லட்சய பாதையில் நிற்பதே சாலச் சிறந்ததாகும். முன் மாதிரியாக ஒரு ஆமையின் பொம்மையை படிக்கும் மேசையின் மீது வைத்துக் கொண்டு மாணவர்களும், இளைஞர்களும் தம் லட்சயப் பாதையில் முன்னேறிச் செல்லல் வேண்டும். கீதையில் கூறப்பட்டுள்ளது போன்று ஆமையை போல் புலன்களை கட்டுக்குள் வைத்திருந்தால் நிச்சயமாக வெற்றியின் பாதையில் முன்னேறிச் செல்வர்.

**பகவத்கீதை தொடரும்...**



# ஆயுர் வேதம்

# ஓமம்

**தெலுங்கு மூலம் : டாக்டர். சி. மதுசூதன சர்மா.**
**தமிழாக்கம் : திருமதி. பா. காயத்ரி**

ஓமம் மிக எளிதில் கிடைக்கக்கூடிய ஓர் மருந் தாகும். இது சமையல் மற்றும் உணவு பொருட்களில் அதிக அளவில் உபயோகிக்கப்படுகிறது. இச்சக்தி வாய்ந்த மருந்தாகிய ஓமம், தெலுங்கில் "வோமமு" என்று ஆந்திர மாநிலத்தில் சில பகுதிகளில் அழைக் கப்படுகிறது.

சமஸ்கிருதத்தில் ஓமத்திற்கு பல்வேறு பெயர் கள் உள்ளன. இது யவலு என்னும் தானிய வகை யைப் போல தோற்றம் உள்ளதால், "யவானி" என்றும், ஆடுகள் இதனை விரும்பி உண்பதால் இதற்கு "அஜமௌடா" என்றும், இதற்கு உஷ்ணத்தை அளிக் கும் குணமுடையதால் இதற்கு "அக்னி வர்தனி", "தீபனி" என்னும் பெயர்களும் உண்டு.

மேலும் இது அதிக வாசனையாகவும், மூட்டு வலியை நீக்கி, வலியை குறைப்பதால் இதற்கு "தீவ்ர கந்தா", "வாதரி" மற்றும் "சூலஹந்த்ரி" என்னும் பெயர்களும் உண்டு.

ஆங்கிலத்தில் ஓமத்தை Carum Seeds, Ajwain Seeds, Bishops Seeds என்றழைப்பர். ஓமம் "யேபி யேஸி" எனும் தாவரக்குடும்பத்தைச் சார்ந்ததாகும். இதன் அறிவியல் பெயர் "கரம் காப்டிகம்" என்பதா கும். இப்போது இதன் மருத்துவ குணங்களைப் பற்றித் தெரிந்து கொள்வோம். ஓமத்தை எப்போதும் வறுத்து நன்றாக அரைத்து பொடியாக்கி வைத்துக் கொள்ள வேண்டும்

### தோல் வடுக்கள் குறைய:

50 கி. ஓமம் மற்றும் 100 கிராம் வெல்லத்தை பொடி யாக்கவும். இவ்விரண்டுபொடிகளையும் கலந்து அரைத் தேக்கரண்டி வீதம் காலை மற்றும் மாலை வேளைகளில் மென்று உட்கொள்ளவும்.

### பசியைத் தூண்ட :

50 கி. வீதம் ஓமம் மற்றும் கல்லுப்பை பொடியாக்கி, இவற்றினை 2 கிராம் அளவில், உணவு உட்கொள்ளும் முன்பு சாப்பிட வேண்டும். இது பசியைத் தூண்டும்.

### வாயு உபாதைக்கு :

100 கிராம் ஓமம் மற்றும் 25 கிராம் கருப்பு கல்லுப்பை பொடியாக்கி, இப்பொடியை 2–3 கிராம் அளவில் 100 மி.லி. நீருடன் தினமும் இருமுறை சாப்பாட்டிற்கு பின்பு பருக வேண்டும்.

### மலச்சிக்கலால் உண்டாகும் மூட்டு வலியை போக்க :

50 கிராம் வீதம் ஓமம், சுக்கு மற்றும் கடுக்காயை பொடியாக்கவும். இப்பொடியை அரைத் தேக்கரண்டி

வீதம் 100 மி.லி. மிதமாக சூடாக்கிய நீருடன் நாளுக்கு இரு முறை குடிக்கவும்.

### உடல் வலி மற்றும் மூட்டு வலியைக் குறைக்க :

25 கிராம் ஓமத்தை 100 மி.லி. தேங்காய் எண்ணெய்யில் ஊற வைக்கவும். இக்கலவையை ஓமம் கருப்பாக நிறம் மாறும் வரை நன்கு சூடாக்கிய பின்பு வடிகட்டவும். பிறகு இதனை வலி உள்ள இடத்தில் 1–2 முறை தடவி வருதல் வேண்டும்.

### அஜீரணத்தை போக்க :

25 கிராம் வீதம் ஓமம், உலர்ந்த இஞ்சி, கல் உப்பு மற்றும் மிளகை பொடியாக அரைக்கவும். இப்பொடியை 2 கிராம் வீதம் 50 மி.லி. நீருடன் சாப்பாட்டிற்கு பின்பு, நாளுக்கு 1–2 முறை உட்கொண்டால் அஜீரணம் விலகும். வயிறு சம்பந்தப்பட்ட நோய்களும் நீங்கும்.

### வயிறு சம்பந்தப்பட்ட உபாதைகள் நீங்க :

25 கிராம் வீதம் ஓமம், சோம்பு மற்றும் கருப்பு உப்பை பொடியாக்கவும். ஒரு கிராம் அளவு இப்பொடியை, 50 மி.லி. இதமாக சூடாக்கிய நீருடன் கலந்து நாளுக்கு இருமுறை காலை மற்றும் மாலை வேளைகளில் பருக வேண்டும். இது வாயு உபாதை, மலச்சிக்கல், வயிற்று எரிச்சல், வயிற்று வலி முதலிய அனைத்து வயிறு சம்பந்தப்பட்ட உபாதைகளை குறைக்கும்.

### முகப்பருக்களை விலக்க :

ஒரு தேக்கரண்டி தயிருடன் அரைத்தேக்கரண்டி ஓமத்தைச் சேர்த்து, இக்கலவையை முகத்தில் தடவவும். ஒரு மணி நேரத்திற்கு பின்பு இதமாக சூடாக்கிய நீரால் முகத்தை சுத்தம் செய்யவும்.

### சாதாரண சளியைப் போக்க :

சிறிதளவு ஓமத்தை ஒரு பெரிய தேக்கரண்டியில் எடுத்து லேசாக சூடு செய்து, அதிலிருந்து வரும் புகையை நுகரவும்.

### வயிறு உபாதை போக்க :

2 கிராம் ஓமத்தை வெற்றிலையில் வைத்து மடித்து மென்று உட்கொள்ளவும்.

### வயிற்று வலியுடன் கூடிய வயிற்றுப்போக்கு :

5 கிராம் ஓமத்தை வறுத்து, 200 மி.லி. நீரில் கலந்து பாதி ஆகும் வரை சுண்ட காய்ச்சி, வடிகட்டவும். இந்நீர் முழுவதையும் ஒரு நாளைக்கு மூன்று வேளை குடிக்கவும்.

### தொண்டை வலியை விலக்க :

ஒரு தேக்கரண்டி ஓமத்தை 200 மி.லி. நீரில் ஊற வைத்து, அந்நீர் பாதியாகும் வரை கொதிக்க வைக்கவும். பிறகு மிதமான சூட்டில் ஒரு கிராம் உப்பு சேர்த்து வாய் கொப்பளிக்கவும்.

### காது வலியைக் குணமாக்க :

30 மி.லி. பாலில் கிராம் ஓமப்பொடி சேர்த்து, சூடாக்கி, ஆர வைக்கவும். இதனை வடிகட்டி வலிக்கும் காதில் 3–4 சொட்டு இடவும். இதனை தினமும் தயாரிக்க வேண்டும். பழைய தயாரிப்பை உபயோகிக்கக் கூடாது.

40 மி.லி. நல்லெண்ணெய்யில் அரைத்தேக்கரண்டி ஓமப்பொடி மற்றும் 1–2 நசுக்கிய பூண்டு பற்கள் இட்டு, அப்பற்கள் பழுப்பு நிறமாகும் வரை வறுக்கவும்.

இக்கலவையை வடிகட்டி ஆர வைக்கவும். நாளுக்கு மூன்று முறை இதனை 2–3 சொட்டு வீதம் காதில் இட்டால், காது வலி, காதரிப்பு முதலிய காது சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் குறையும்.

### மூலநோயை குணப்படுத்த :

5 கிராம் வீதம் ஓமம் மற்றும் மஞ்சள் பொடிகளை, தண்ணீர், தேங்காய் அல்லது விளக்கெண்ணெய்யுடன் சேர்த்து, அரைத்து சிறிது நேரம் சூடாக்கவும்.

இதனைத் தடவினால் மலத்துவார கட்டிகளைக் குறைத்து, வலியை போக்கி, அங்கு ஏற்படும் அரிப்பு முதலிய சிக்கல்களை போக்க உதவும்.

### தூங்கும்போது சிறுநீர் கழிப்பதைக் குணப்படுத்த:

25 கிராம் ஓமம், 50 கிராம் கருப்பு எள் மற்றும் 75 கிராம் வெல்லத்தைப் பொடியாக்கி, இதனை ½ –1 தேக்கரண்டி வீதம் நாளுக்கு இரு முறை உட்கொண்டால் இரவில் சிறுநீர் போவது நின்று விடும். அடிக்கடி ஏற்படும் சிறுநீர் தொல்லைகளும் குணமாகும்.

ஆயுர்வேதம் வளரும்...



# 2019
# பிப்ரவரி மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்

| | | | |
|---|---|---|---|
| | யுரேனஸ் | | |
| நெப்ட்யூன் | **பிப்ரவரி-2019**<br>05 – செவ்வாய் –மேஷம்<br>07 – புதன் –கும்பம்<br>13 – சூரியன் –கும்பம்<br>24 – சுக்ரன் –மகரம்<br>25 – புதன் –மீனம் | | ராகு |
| கேது<br>சூரியன்<br>புதன் | | | |
| சந்திரன்<br>ப்ளூட்டோ<br>சனி<br>சுக்ரன் | குரு | | |

**மேஷம்** குடும்ப–தனஸ்தானம் குருவினால் பார்க்கப்படுகிறது. குடும்பத்தில் குதூகலம் நிறைந்திருக்கும். விருந்து, விழா என்று சென்று வருவீர்கள். சுபகாரியங்கள் நிகழும். பல வழிகளில் பணம் வந்து சேரும். பேச்சில் திறமையும், இனிமையும் கலந்திருக்கும். வழக்கில் நல்ல தீர்ப்பு கிடைக்கும்.

**ரிஷபம்** உங்கள் ராசி நாயகன் மாத ஆரம்பத்தில் எட்டாமிடத்தில் உலவிடினும் ராசியை குரு நோக்குவதாலும், புதன் தொழில் வீட்டில் சஞ்சரிப்பதாலும் தொழில் வளர்ச்சி கூடும். பணவரவு பெருகும். மதிப்பும் அந்தஸ்தும் உயரும். தொழிலாளர்களது கோரிக்கைகளில் சில இப்போது நிறைவேறும்.

**மிதுனம்** நற்காரியங்களில் ஈடுபடும் வாய்ப்பு கூடி வருகிறது. அரசு சம்பந்தமான காரியங்கள் இப்போது நிறைவேறும். வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள தாராளமாக செலவு செய்வீர்கள். பன்னிரண்டாம் வீட்டை குரு நோக்குவதால் புதிய தொழிலில் முதலீடு செய்து மகிழ்வீர்கள்.

**கடகம்** ராசியை குருவும், செவ்வாயும் நோக்குவதால் பொருளாதார நிலை உயரும். பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு கிடைக்கும். அரசு சம்பந்தமான காரியங்கள் சுமுகமான முடிவுக்கு வரும். எலக்ட்ரானிக், மின்சார துறைகளில் ஆதாயம் அதிகரிக்கும். பயணங்களால் நற்பலன் விளையும்.

**சிம்மம்** சூரியன், செவ்வாய், குரு ஆகியோரது சஞ்சாரம் சிறப்பாக உள்ளது. எதிர்ப்புகள் வலுவிழக்கும். வெற்றி பெறுவீர்கள். நிறுவன நிர்வாகத் துறையினருக்கு வரவேற்பு கூடும். வியாபாரிகளுக்கு லாபம் அதி கரிக்கும். புதிய தொழில் தொடங்கும் எண்ணம் மேலோங்கும். மாணவர்கள் வளர்ச்சி காண்பார்கள்.

**கன்னி** ஆடல், பாடல் மற்றும் நுண்கலைகளில் ஈடுபாடு அதிகரிக்கும். மதச்சடங்குகள் மற்றும் வழிபாட்டுத் துறைகளில் உள்ளவர்களுக்கு பொருளாதார வளம் சிறக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு மணமேடை ஏறும் பாக்கியம் கிட்டும். நல்ல வேலை வாய்ப்புத் தேடி வரும். .

**துலாம்** சுக்ரன், புதன் ஆகியோரின் சஞ்சாரம் சிறப்பாக உள்ளது. குரு பலமும் கூடி உள்ளது. உங்கள் மதிப்பும், அந்தஸ்தும் உயரும். எடுத்த காரியங்கள் எல்லாவற்றிலும் வெற்றி பெருவீர்கள். பண நடமாட்டம் அதிகரிக்கும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் கூடி வரும். பிரபலங்கள் ஆதரவாக இருப்பார்கள்.

**விருச்சிகம்** குரு, சூரியன், செவ்வாய் ஆகியோர் சிறப்பாக உலவுவதால் தோற்றப்பொலிவு கூடும். தொழில், வியாபாரம் நன்கு அபிவிருத்தி அடையும். மாணவர்களது திறமை வெளிப்படும். பாக்கியஸ்தானம் குருவின் பார்வையைப் பெறுவதால் மழலை பாக்கியம் உண்டாகும்.

**தனுசு** பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். எடுத்த காரியங்களை எப்பாடுபட்டாவது முடித்துக் காட்டுவீர்கள். பண நடமாட்டம் திருப்தி தரும். குடும்பத்தில் சுபச்செலவுகள் அதிகரிக்கும். பிள்ளைகளால் கௌரவமும் மதிப்பும் உயரும். கொடுக்கல் – வாங்கல் லாபம் தரும். ஸ்திர ஆஸ்திகளில் முதலீடு செய்வீர்கள்.

**மகரம்** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். சுப காரிய பேச்சு வார்த்தைகளில் ஏற்பட்ட தடைகள் விலகும். பண வரவு பெருகும். எதிர்ப்பாராத திடீர் பொருள் வரவிற்கும் இடமுண்டு. இயந்திரப் பணிகள் லாபம் தரும். பயணத்தால் நலம் உண்டாகும். தாய் மற்றும் பிள்ளைகள் நலனில் சிறிது அக்கறை தேவைப்படும். .

**கும்பம்** குடும்ப உறுப்பினர்களிடையே பாசம் அதிகரிக்கும். விருந்தினர் வருகையும் அதிகரிக்கும். தொழில் நுட்பத் திறமை வெளிப்படும். பண நடமாட்டம் திருப்திகரமாக இருந்து வரும். பெரியவர்களும், செல்வந்தர்களும் உங்களுக்கு உதவுவார்கள். பங்குதாரர்களால் நலம் உண்டாகும்.

**மீனம்** இதிகாச, புராணங்களில் ஆர்வம் கூடும். எதிர்ப்புகளை துணிச்சலோடு சந்தித்து வெல்வீர்கள். பேச்சாற்றலால் பெருஞ்சாதனை நிகழ்த்துவீர்கள். பொருள் வரவு அதிகரிக்கும். பிள்ளைகளால் மதிப்பும், அந்தஸ்தும் உயரும். முக்கியமான எண்ணங்கள் இப்போது நிறைவேறும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2.தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3.வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/- ☐ ரூ. 500/-

4.சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5.செலுத்திய தொகை :

6.செலுத்திய வழி :

பணவிடை

(எம்.ஒ.கூபன் (எண்) : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை

(டி.டி. எண்.) : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

**உங்களுக்காக**

**24 மணி நேரமும்**

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/- ஆயுள்சந்தா ரூ.500/-டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Edited and Published on behalf of T.T.Devasthanams by **Dr. K. Radha Ramana**, M.A., M.Phil., Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. R.V. Vijayakumar,** B.A., B.Ed., Dy. E.O. (Publications & Press), T.T.D. Press, Tirupati - 517 507.

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## ஸப்தகிரி சமய மாத இதழ்

[தெலுங்கு, தமிழ், கன்னடம், இந்தி, ஆங்கிலம், சமஸ்கிருத மொழிகளில்]

இல்லந்தோறும் ஸப்தகிரி பத்திரிக்கை! இதுவே திருமலையப்பன் அக்ஷர தீபிகை!



கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானின்
திவ்ய வைபவம் பிரதி மாதம்... ஸப்தகிரி
இதழில் பாருங்கள்! படியுங்கள்!!







பகவானை தரிசிப்பதற்கும் தேவாதி தேவனை
சென்றடைவதற்கும் எத்தனையோ
மார்க்கங்கள் வழிமுறைகள்.

அலர் மேல் மங்கை மணாளனை,
அடியார்களைக்காக்கும்
கார்மேக வண்ணனை சிலர் பூவினால்
அர்ச்சித்தால், சிலர் அக்ஷரபூவினால் ஆராதிப்பர்.

திருவேங்கடமுடையானின் அக்ஷரபிரசாதமான
“ஸப்தகிரி” படிப்பதும், படிக்க வைப்பதும் கூட
அந்த ஸ்வாமிக்கு பண்ணும் உத்தம சேவையே.

பிரதி மாதம்... “ஸப்தகிரி” படியுங்கள்
உங்கள் அன்பானவர்களை படிக்க வையுங்கள்.

பிரதி மாதம் திருமலையப்பனை தரிசியுங்கள்...
திருமலை சிறப்பினைத் தெரிந்து கொள்ளுங்கள்

ஸப்தகிரி வளர்ச்சியைப் பேணுங்கள்.
ஸப்தகிரி மாத இதழுக்கு சந்தா செலுத்துங்கள்!
செலுத்த வையுங்கள்!!







### சந்தா விவரங்கள்

| | |
|---|---|
| தனிப்பிரதி | : ரூ. 5-00 |
| வருடச் சந்தா | : ரூ. 60-00 |
| ஆயுள் சந்தா | : ரூ.500-00 |
| அயல்நாட்டு வருடச் சந்தா | : ரூ.850-00 |

(சமஸ்கிருத மொழி இதழுக்கு ஆயுள் சந்தா கிடையாது)

“ஸப்தகிரி” மாத இதழ் குறித்து
மேலும் விவரங்களுக்கு
தொடர்பு கொள்ளவும்...
0877-2264543
பிரதான ஆசிரியர் கைபேசி
9866329955

எங்கள் முகவரி :
பிரதான ஆசிரியர்
ஸப்தகிரி மாத இதழ் அலுவலகம்,
தி.தி.தே. அச்சக வளாகம்,
கபில தீர்த்தம் சாலை, திருப்பதி - 517507

ஆலோசனைகள்/ அறிவுரைகள்/புகார்களுக்கு தொடர்பு கொள்ளவும்

**sapthagiri_helpdesk@tirumala.org**

**SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY**
**Published by Tirumala Tirupati Devasthanams 25-01-2019**
**Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020**
**Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020**

